3078



உ
சிவமயம்

# சென்னை நகரத்தார் சங்கம்

## பொங்கல் மலர் 1968



MADURA SOUTH INDIA CORPORATION (Private) LTD.,
"CATHOLIC CENTRE"
6, ARMENIAN ST., — MADRAS-1.
Grams: "MUSIC" Phone: 23329

*Distributors for*

MADURA MILLS' YARN OF ALL CORENTS

**HARVEY** TWIN TUSKER FABRICS
&
**SARABAND** *TERENE*

SUITINGS

TRAYONS

# The Travancore Rayons Limited

India's Pioneer Manufacturers of :

*Rayon Yarn and Cellulose Film*

Factory :

**Rayonpuram P O , Kerala**

*Madras Office :*

**Indian Overseas Bank Building (3rd Floor)**

**151, Mount Road, Madras-2**

*Managing Agents :*

**Emcete & Sons (Travancore) Private Ltd.**

**Rayonpuram P. O., KERALA**

உ

சிவமயம்

# பொங்கல் மலர்

## 1968



சென்னை நகரத்தார் சங்கம்

27, பவழக்காரத் தெரு,

சென்னை – 1.

உ

சிவமயம்

# மரகத விநாயகர் துதி

வெண்பா

மாவாழு மேழு வழிநகரத் தார்க்கென்றுங்
கோவாழுஞ் செல்வக் குலதெய்வ—மாவாழ்
மரகதவி நாயகனை மாமலர்தூய் வாழ்த்த
வரநலவாழ் வெல்லாம் வரும்.

உ
சிவமயம்

# முன்னுரை

சென்னை நகரத்தார் சங்கம் தொழில்துறை வாணிபம் கருதி சென்னையம்பதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்துவரும் நம்மினத்தவரிடையே நல்லதொரு தொடர்பையும் ஒற்றுமையையும் வளர்த்துச் சமய, சமூக, பொருளாதார நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு சமூகப்பற்று மிக்க நம் இளைஞர் பலரின் நன்முயற்சியால் இச்சங்கம் நிறுவப்பெற்று 26—3—64ல் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

தற்போதுள்ள உறுப்பினர் எண்ணிக்கை ஆண்—பெண் 1134 ஆகும்.

சங்க நோக்கங்களை நன்கு நிறைவேற்றும் பொருட்டு நிதிக்குழு, கலைக்குழு, கல்விக்குழு, மலர் வெளியீட்டுக்குழு, நூல்நிலையக் குழு, வேலைவாய்ப்புக் குழு, சந்தா வசூல் குழு போன்ற குழுக்கள் நியமிக்கப்பெற்றுச் சிறந்த முறையில் பணிபுரிந்து வந்துள்ளன என்பதை உளப் பூரிப்போடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒவ்வோர் ஆண்டும் திருவொற்றியூர் மாசிமக விழாப் பூசையில் இறைவழிபாடு, அன்னம் பரிமாறுதல் முதலியவற்றில் நம் உறுப்பினர்கள் கலந்துகொண்டு அமைதி ஒழுங்கு கட்டுப்பாடு முதலியவற்றுக்கு உதவியாக அரும்பெரும் தொண்டாற்றிச் சிறப்பிக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியோடு புலப்படுத்திக்கொள்கின்றோம்.

**கல்வி உதவி**

இதுவரை வட்டியில்லாக் கடனுதவியாக M.B.B.S., B.E., B.Sc., B.A., B.T., பாலிடெக்னிக் படிப்புப் பயில்வதற்கு மாணவருக்கும், மாணவியருக்குமாக ரூ 8250 கொடுத்து உதவி இருக்கின்றோம்.

**இலவசக்கல்வி உதவி**

P.U.C. வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியர்க்கும் உயர்நிலைப்பள்ளி (S.S.L.C.) வரை பயிலும் மாணவ, மாணவியர்க்கும் ரூ. 3140 இலவச உதவியாகக் கொடுத்துதவியுள்ளோம்.

மேலும் உறைவிடம், உணவு, சீருடை, புத்தகம் பாட உபகரணம், மற்றெல்லாவற்றிற்குமாக வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் தங்கியிருந்து கல்வி பயின்ற நம் மாணவ, மாணவிச் சிறார்க்கு, ரூ. 3800 இலவச நிதி ஈந்து உதவிசெய்தமை பெரிதும் போற்றி மகிழ்தற்குரிய கொடையாகும்.

தையல் தொழிற்பயிற்சி வகுப்பில் பயின்று சான்றிதழ் பெற நம் பெண்மக்களிருவர்க்கு ஒவ்வொருவர்க்கும் ரூ. 100 இலவச உதவி புரிந்திருக்கின்றோம்.

### தொழில் உபகரண உதவி

நம் பெண்மக்கள் ஆறு பெயர்கட்கு மாதத் தவணையாக செலுத்திவரும் வட்டியில்லாக் கடனுதவியாக தையல் மெஷின்கள் வாங்கிக் கொடுத்து உதவி வந்திருக்கின்றோம்.

### திருமண உதவி

திருவொற்றியூரில் நடந்தேறிய நம்மவர் திருமணங்கள் இரண்டிற்கு ஒவ்வொன்றுக்கு ரூ. 500 விகிதம் ரூ. 1000 இலவச உதவியாகக் கொடுத்துச் சிறப்பித்துள்ளோம்.

### வேலைவாய்ப்புக்குதவி

வேலையின்றி அல்லலுற்ற நம் இளைஞர் பல்லோர்க்கு நம் வேலைவாய்ப்புக் குழுவின் திறன் மிக்க முயற்சியால் வேலை வாங்கிக் கொடுத்து உதவியுள்ளோமென்பதை அகமகிழ்வோடு கூறிக் கொள்கின்றோம்.

### வேண்டுகோள்

இதுவரை உறுப்பினராகச் சேராதிருக்கும் அன்பர்களும் தாயர்களும் உறுப்பினராகச் சேர்ந்து, சமூகப் பணியில், சமூக முன்னேற்றத்தில், பங்குகொள்ளும் வகையில் ஆக்கமும் ஊக்கமும் தந்து சங்க வளர்ச்சிக்கு உதவ வேண்டுகின்றோம்.

வரும் ஆண்டுகளில் கல்வி உதவி திருமண உதவி தொழில் உபகரண உதவி ஏனைய உதவிகள் நாடிச் சங்கத்திற்கு வருவோர்க்கு, மனநிறைவு பெறும் வண்ணம் உதவி செய்து மகிழ் விக்க வசதியான, நிதிநிலை பெருகுமாறு, நம் இனப் பெரியோர்களும், செல்வந்தரும், கொடை ஈந்து சங்கம் மேலும் மேலும் சிறந்த தொண்டுகள் பல புரிந்து சிறப்புறச் செய்துவைக்கவேண்டு மாய் பணிவும் நன்றியும் சேர்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

### வேலைதந்து ஆதரித்த நிறுவனங்கட்கு நன்றி

வேலை கிட்டாது தவித்துக்கொண்டிருந்த நம் இனக் காளையர் பலர்க்கு தக்கவாறு வேலை ஈந்து அவர்கள் வாழ்வை வளம்பெறச் செய்த நம் சமூகத் தொழில் அதிபர்கட்கு நம் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்திக் கொள்வோமாக! இன்னும் பல்லாயிரவர்க்கு அவர்கள் நிறுவனங்களில் வேலை தந்துதவ வேண்டுமென்றும் அவைகளில் வேலைபெற்றோர், எஜமான பக்திமிக வேலை செய்து காட்டும் நற்பண்பால், வேலை தருவோர் மனம் விரிந்து மேலும் மேலும் நமக்குதவிவர வேண்டுமென்றும், இருசாராரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தைமாதத்தில் பொங்கல் மலரொன்று வெளியிட இருப்பதாயும் அதில் மலர் வெளியீட்டுக்குழுத் தலைவனாய்ப் பணிசெய்ய வேண்டுமென்றும் 20—8—67ல் கூடிய நம் சங்கச் செயற்குழு ஆணை பிறப்பித்தது. அதில் அனுபவம் இல்லாத, அத்துறைக்கே புதியவனான நான், அப் பொறுப்பை பயத்தோடு ஏற்றுக்கொண்டேன். ஏற்கெனவே சேமித்து வைத்திருந்த கவிதை, கட்டுரை, சங்க வரலாறு விளம்பரங்களுடன் நானும் சிறிது முயன்று சேகரித்தவையும் சேர்ந்தும், இம்மலர் வடிவில் சிறியதாய் அமைந்தாலும் மணமும் குணமும் அழகும் நிறைந்ததாய் உருவாக்கப் பெற்றுள்ளதென்பதை மகிழ்ச்சியோடு ஏற்று ஆசி கூறுமாறு அறிஞர் பெருமக்களையும் சமூகப் பெரியவர்களையும், தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் பணிவன்போடு வேண்டிக் கொள்கின்றேன்.

மலர்ப்பணி செய்ய வாய்ப்பு நல்கிய சென்னை நகரத்தார் சங்கச் செயற்குழுவினர்க்கும், சங்க உறுப்பினர்கட்கும், ஏனைய வகையில் உதவிபுரிந்த அன்பர்கட்கும், முதற்கண் நன்றி செலுத்துவது என் கடமையாகும்.

மலரின் பதிப்பாசிரியராக, நம் பேரன்பர், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களை நம் சங்கம் கேட்டுக்கொண்டு, அவர்களும் இசைந்திருந்தார்கள். ஆயினும் இடையில் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக அதில் ஈடுபட வாய்ப்பில்லாததை அறிந்து நம், அன்பிற்குரிய கவிஞரும் நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் அதிபருமாகிய திருவாளர் நாரா நாச்சியப்பன் அவர்களைப் பதிப்பாசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினோம். உவப்போடு ஏற்றுத் திறம்பெற நிறைவேற்றித் தந்தார்கள். அவர்கட்கு நம் அன்பு கலந்த நன்றி உரித்தாகும்.

மலர் முகப்பு அட்டையின் சித்திரத்தை அழகுற வரைந்து, அதற்கேற்றாற்போல் பிளாக்கும் உருவாக்கித் தந்த திறன்மிகு ஓவியர், அய்க்கன் அவர்கட்கும் அட்டை நான்கு பங்கங்களையும் மூவர்ணங்களில் அச்சிட்டுத் தந்த ஐடியல் பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும் அதற்கு உதவிய ஏனையோர்க்கும் பெரிதும் நன்றி செலுத்தக் கடப்பாடுடையோம்.

மலர் மணமும் பொலிவும் மாண்பும் நிறைந்ததாய் அமைய ஆசிச் செய்திகள் அனுப்பி வைத்த பெருந்தகைகட்கும், கவிதை கட்டுரை தந்த கவிஞர் அறிஞர் பெருமக்கட்கும், வரலாற்றுக் குறிப்புகள் தந்துதவிய சகோதரச் சங்கங்கட்கும், விளம்பரம் தந்து சிறப்பித்த தொழிற்சாலை, வாணிப நிறுவன, தலைவர்கட்கும் பெரிதும் நன்றி கூறுகிறோம்.

இதில் சிறப்பாக நான் நன்றிகூற வேண்டியவர்கள் பல துறையிலும் உதவி நல்கி என்னை ஊக்குவித்த சங்கத் தலைவர் திரு S. RM. PL. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும், உதவித் தலைவர்களான திரு. சுப. வயிரவன் செட்டியாரவர்களும் திரு. சுப. ஷண்முகம் செட்டியாரவர்களும், செயலாளர் திரு. RM. அருணாசலம் செட்டியாரவர்களும், பொருளாளர் திரு. A. கணபதி செட்டியாரவர்களும், உதவிப் பொருளாளர் M. அழகப்பன் அவர்களுமாவார்கள்.

**அ. முருகப்ப செட்டியார்**
தலைவர்
மலர் வெளியீட்டுக் குழு.

# பதிப்புரை

சென்னை நகரத்தார் சங்கத்தின் மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர் திரு. அ. முருகப்ப செட்டியார் அவர்கள் மலரை அச்சிட்டுத் தரும் பொறுப்பைத்தான் முதலில் என்னிடம் ஒப்படைத்தார்கள். வேலை தொடங்கவிருக்கும் நேரத்தில் என்னையே பதிப்பாசிரியப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் இப்பணியை மேற்கொண்டிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும். அரு முயற்சியும் பெரு விருப்பமும் கொண்டு பொதுப் பணிகளைச் செய்யும் அவருடைய ஆற்றல் முழுதும் பயன்பட்டிருக்கும். ஆனால் அவ்வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லை. என்றால் இயன்ற வரை தரங்குன்றாத வகையில் மலரை மணமுள்ளதாக்க முயன்றிருக்கிறேன். அதனை நுகர்ந்து மதிப்பிடவேண்டியது வாசகர்களாகிய உங்கள் பங்காகும். இப்பணி புரியும் அரிய வாய்ப்பினை நல்கிய சங்கத்தாருக்கும் மலர்க் குழுவினர்க்கும் என் நன்றி உரியதாகுக.

இனப்பற்றும் முன்னேற்றக் கருத்தும் தொண்டுள்ளமும் பூண்ட அன்பர்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பியுள்ளார்கள். ஆர்வத்தால் ஒன்றுக்குப் பத்தாய் அனுப்பியவர்களும் இருக்கிறார்கள். பொதுப்பணியில் நாட்டமுள்ள இவ்வெழுத்தான அன்பர்களே மலரை மணம்பெறச் செய்தவர்கள். அவர்கள் அனைவரும் தங்கள் கடமையைச் செய்திருக்கிறார்கள். நம் சமூகம் அவர்களை வாழ்த்தி மகிழுமாக ! என் நன்றியும் அவர்கட்கு உரியதாகும். விளம்பரங்கள் நல்கிய வாணிப நிறுவனத்தார்க்கும் அவர்கள் சீரிய ஒத்தாசைக்கும் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

நம் இனப்பெரியோர்களின் வாழ்த்துமொழிகளோடு தொடங்கும் இந்நன்மலரை நகரத்தார் பெருமக்கட்குத் தொகுத்துப் படைக்கும் பேறு கிடைத்தது குறித்துப் பெரிதும் மகிழுகின்றேன்.

**வணக்கம் !**

அன்பன்

**நாரா நாச்சியப்பன்**

# பொருளடக்கம்


பக்கம்

1. மரகத விநாயகர் துதி 2
2. முன்னுரை 3
3. பதிப்புரை 6
4. Index to advertisers 8
5. வாழ்த்துச் செய்திகள் 9
6. சென்னை நகரத்தார் சங்கம், செயற்குழு. 14
7. மங்கல வாழ்வு—நாரா நாச்சியப்பன் 17
8. புள்ளி விவரம் 21
9. சிந்தனைக்குச் சில நிகழ்ச்சிகள்— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா 25
10. செயல் செய்ய வாரீர் செழிக்க—சித்தாந்த நன்மணி பழ. ஷண்முகம் 27
11. உலகத் தமிழ் மாநாடு—"சோமலெ" 29
12. அறுபத்து நான்கு கலைகள் 30
13. சாதிமுறை நியாயங்கள் 32
14. செட்டிநாட்டரசர் திருத்தசாங்கம் 33
15. பேரின்பங் கண்ட தெய்வமகள்—நாகமுத்தையா பி. காம். 37
16. கண் திறந்த வள்ளல்— கவிஞர் கண்ணதசான் 41
17. நகரத்தார் சங்கம்; கோவை 43
18. நடந்து காட்டும் தலைவர்—அமரர் செ. முருகப்பா 45
19. நகரத்தாரும் கலையும்—புலவர் நாக சண்முகம் 46
20. விடுகவிகள்—திரு. ரெ. முத்துக் கணேசன் 49
21. அன்றும் இன்றும்— சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் (பாலகவி) 53
22. வள்ளி மணாளனே!—சங்கீத பூஷணம் S. M. இராமநாதன் 55
23. அன்புள்ள ஆச்சிக்கு—ஆறு. அழகப்பன் எம். ஏ., எம். லிட். 57
24. வள்ளுவர் வழி—திரு ம. வெ. நாராயணன் 63
25. அன்றும் இன்றும்—சே. கனசபை பி. ஏ. 65
26. நகரத்தார் சங்கம், சேலம் 69
27. எழில் வேலா!—நெற்குப்பை இராம சுப்பிரமணியன் 73
28. நகரத்தார் மரபுப் புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் 77
29. தாகூர் தரிசனம்—வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ. 81
30. பொங்கல் மங்கலம்—கவியோகி சுத்தானந்த பாரதியார் 85
31. நகரத்தார் சங்கம், திருச்சிராப்பள்ளி 87
32. மன்னர் மரபு—டாக்டர் மெ. சுந்தரம் எம். ஏ., எம். லிட். பி எச். டி. 89
33. மாப்பிளைக்கு விலையா?—அ. முருகப்ப செட்டியார் 103

# INDEX TO ADVERTISERS

| No. | Advertiser | Page |
|---|---|---|
| 1. | Madura South India Corporation (Private) Ltd. Cover | 1 |
| 2. | The Travancore Rayons Ltd. Cover | 2 |
| 3. | National Fastners Private Ltd. Cover | 3 |
| 4. | The Indian Bank Ltd. Cover | 4 |
| 5. | யூனியன் கோவாப்பரேட்டிவ் இன்சூரன்ஸ்சொசைட்டி லிமிடெட் | 28 |
| 6. | திருவேபதி மில்ஸ் பிரைவேட் லிமிடெட் | 34 |
| 7. | பாங்க் ஆப் மதுரை லிமிடெட் | 36 |
| 8. | City Coffee Works | 40 |
| 9. | Jayant Packaging Private Limited | 40 |
| 10. | M. Nilakantan & Bros. | 50 |
| 11. | Bays Medicals | 52 |
| 12. | R. M. S. & Company Private Ltd. | 52 |
| 13. | தி அட்வான்ஸ் இன்ஷூரன்ஸ் கம்பனி லிமிடெட் | 54 |
| 14. | New Star Engineering Company | 54 |
| 15. | Steel And General Traders | 56 |
| 16. | Productivity Elements Private Ltd. | 56 |
| 17. | The Indian Overseas Bank Ltd. | 58 |
| 18. | Visco Timber Supplies | 58 |
| 19. | A. K. Raghavan Nair | 60 |
| 20. | தி பாங்க் ஆப் காரைக்குடி லிமிடெட் | 60 |
| 21. | Rayon Traders Private Ltd. | 62 |
| 22. | Sri Palaniappa Transports | 64 |
| 23. | Rahamath Brothers Private Limited | 66 |
| 24. | S. P. M. Medicals | 66 |
| 25. | நா. சுப. கார்ப்பரேஷன் | 68 |
| 26. | Bimetal Bearings Ltd. | 68 |
| 27. | South India Corporation Private Ltd. | 70 |
| 28. | Kwality Spinning Mills Private Ltd. | 72 |
| 29. | Ambadi Enterprises Private Ltd. | 74 |
| 30. | Coromandel Prodorite Private Ltd. | 76 |
| 31. | Lingam Industries Corporation | 78 |
| 32. | Siva Packing Industries | 80 |
| 33. | S. Kunjithapadam | 80 |
| 34. | சீனிவாசா ஏஜன்ஸிஸ் | 80 |
| 35. | நாயுடு ஹால் | 82 |
| 36. | மதுரை சௌத் இந்தியா கார்பொரேஷன் பிரைவேட் லிமிடெட் | 84 |
| 37. | தி இந்தியா லெதர் கார்பொரேஷன் பிரைவேட் லிமிடெட் | 86 |
| 38. | India Radiators Limited | 88 |
| 39. | Carborandum Universal Limited | 90 |
| 40. | T. I. Cycles of India, Madras | 92 |
| 41. | India Linoleums Ltd. | 94 |
| 42. | S. R. P. Tools Limited | 96 |
| 43. | Madura South India Corporation Private Ltd., Secunderabad & Vijayawada | 101 |
| 44. | Rajeswari Mills | 102 |

Printed at Novel Art Printers, Madras-14

**DR. RAJAH**
**SIR MUTHIAH CHETTIAR**
**OF CHETTINAD**

Chettinad House, Adyar
Rajah Annamalaipuram P. O.
Madras-28.
*5-1-68*

திரு. அ. முருகப்ப செட்டியார் அவர்கள்,
தலைவர், பொங்கல் மலர் வெளியீட்டுக்குழு,
சென்னை நகரத்தார் சங்கம்,
27. பவளக்காரத் தெரு,
சென்னை—1.

அன்புள்ள ஐயா,

நம் சென்னை நகரத்தார் சங்கச் சார்பில் பொங்கல் மலர் வெளியிடுவது தெரிந்து மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

தமிழ்த் திருநாளாகிய பொங்கல் நன்னாளில் அனைவரும் இன்புற்றிருக்கவும் நாட்டில் வளங்கள் செழித்து வளரவும், எல்லோருடைய வாழ்வும் மேன்மேலும் சிறக்கவும் அருள் புரிய இறைவனை வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
**மு. அ. முத்தய்யா செட்டியார்.**

**M. CT. MUTHIAH**
POST BOX No. 2713
MADRAS-2

20-12-67

பொங்கல் விழாவையொட்டி நம் சங்கச் சார்பில் மலர் வெளியிடுவது குறித்து மெத்த மகிழ்ச்சி அடைகின்றனம்.

நாடு, நகரங்கள் வறுமை, பிணி, பஞ்சம் இவற்றினின்று விடுபடவும், நாடு விவசாயத்துறையில் வளம் பெறவும், நகரங்கள் தொழில் துறையில் வளம் பெறவும் பொங்கல் புது நாள் வருவதாகுக. நகரத்தார் சங்கம் மேலும் மேலும் பல நற்பணிகள் ஆற்றி நீடு வாழ்க. மலர் வெளியிடும் குழுவும் அதற்கு உறுதுணையாயுள்ளவர்களும் பன்னலமும் பெற்று வாழ தில்லை நடராசப் பெருமான் அருள்வானுக.

உ

சிவமயம்

**A. M. M. ARUNACHALAM**

"THE LAURELS"
CHITTARANJAN ROAD
TEYNAMPET
MADRAS-18

28-12-1967

தலைவர் அவர்கள்,
**மலர் வெளியீட்டுக்குழு,**
சென்னை நகரத்தார் சங்கம்,
27, பவளக்காரத் தெரு,
சென்னை—1.

பேரன்புடையீர்,

தங்களின் 14—12—67 உ கடிதம் கிடைத்தது.

சென்னை நகரத்தார் சங்கத்தின் சார்பில் பொங்கல் மலர் வெளியிட இருப்பதறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன். நமது சமூகத்தினர்களின் முன்னேற்றத்திற்கு நகரத்தார் சங்கம் ஊக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் ஒற்றுமை உணர்ச்சியுடனும் செயல் புரிந்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

நகரத்தார்கள், பழங்காலத்திலிருந்தே, சிவநெறி தழைத்து ஓங்கவும், தர்மம் நிலைத்திடவும், கல்வி சிறந்து வளர்ந்திடவும், நாட்டு முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமான வெளிநாட்டு வாணிபம் பெருகிடவும், இன்னும் பல நற்காரியங்களிலும் திறம்படச் செயலாற்றிய பெருமைக்குரியவர்கள். இன்றும் எல்லாத் துறைகளிலும் நகரத்தார்கள் மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருந்து வருகின்றார்கள்.

போட்டி நிறைந்த, விஞ்ஞான யுகமான இன்றைய உலகில், முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள நிறைந்திருந்தாலும், நமது இளைஞர்கள் முன்னேறி வர வேண்டுமாயின், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பக் கல்வியிலும் போதுமான பரிச்சயமும், ஆர்வமும், திறமையும் கொண்டு, அயராது உழைத்திட வேண்டும். நமது நாட்டில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் வளர்ந்து வந்தாலும், அதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் பெற்றாலொழிய, நாம் முன்னேறுவது மிகக்கடினமானதாகும். எனவே நம் இளைஞர்கள், பொறுப்புடன், நல்ல தகுதியினைப் பெற்று, திறமையானவர்களாய் வர, நன்கு உழைக்கவேண்டும்.

நம் சமூகத்தவர்களில், போதுமான வசதியுள்ளவர்கள், உத்தியோகத்துக்குப் போக விரும்புவதை விட தங்களின் தகுதியையும், திறமையையும் பயன்படுத்தி சிறு தொழிலானாலும் சொந்தத் தொழில் செய்வதே நம் சமூக அபிவிருத்திக்கு மிக மேன்மையானது என்பது எனது கருத்தாகும்.

இம்மலர் சிறந்த பல கருத்துக்களுடன், அழகும், மாண்பும், மணமும் நிறைந்ததாய் வெளிவர எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் இந் நன்முயற்சி வெற்றிபெற வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

அருணாசலம்

உ

ஆ. நாகப்ப செட்டியார்
A. Nagappa Chettiar
*Managing Director*
The India Leather Corporation
Private Ltd,, Madras.

*"INDIA LEATHER MANSIONS"*
*G. P. O. Box No. 1516*
*9, Davidson Street, Madras-1.*

18-12-1967

*சென்னை நகரத்தார் சங்கம்,*
*27, பவளக்காரத் தெரு,*
*சென்னை — 1.*

*அன்புடையீர்,*

*தங்களின் 14—12—67 உ கடிதம் கிடைக்கப்பெற்றேன் மிக்க மகிழ்ச்சி. நம் சங்க சார்பில் தை மாதம் முதல் வாரத்தில் வெளியிட இருக்கும் பொங்கல் மலர், நாடும், மக்களும் முன்னேறும் வகையில் அரிய பெரிய கருத்துக்களைக்கொண்டு மணமும், மாண்பும் மிக்கதாய் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தங்கள் அன்புள்ள,*
ஆ. நாகப்பன்.

C. V. CT. V.
VENKATACHALAM CHETTIAR

*OFFICE :*
36, Eldams Road, Alwarpet,
MADRAS-18.

December, 16, 1967.

The President,
Chennai Nagarathar Sangam,
27, Coral Merchant Street,
Madras-1.

Dear Sir,

I am in receipt of your letter dated 14th December 1967. I am glad you are bringing out a PONGAL MALAR on behalf of your sangam. You are doing very useful service for the uplift of the Nagarathar community. Please continue your efforts.

I suggest a Higher Elementary School to be started by you and run because admission is very difficult in Madras. So kindly consider and try to start a Higher Elementary School and by years to be developed into a High School. To cater this you start a Preparatory School which should give you good money to run the above school. I wish the Chennai Nagarathar service useful to the community. With best wishes.

Yours sincerely,
C.V.Ct.V. Venkatachalam Chettiar.

# சென்னை நகரத்தார் சங்கம்

**தலைவர்**

திரு. S. RM. PL சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்

**உப தலைவர்கள்**

திரு. சுப. வயிரவன் செட்டியாரவர்கள்

திரு சுப. ஷண்முகம் செட்டியாரவர்கள்

**செயலாளர்**

திரு. RM. அருணாசலம் செட்டியாரவர்கள்

**உதவிச் செயலாளர்**

திரு. K. நாராயணன் செட்டியாரவர்கள்

**பொருளாளர்**

திரு. A. கணபதி செட்டியாரவர்கள்

**உதவிப் பொருளாளர்**

திரு. M. அழகப்பன் அவர்கள்

## புரவலர்கள்

டாக்டர் ராஜா சர் முத்தய்யா செட்டியாரவர்கள்

திரு. கருமுத்து தியாகராஜன் செட்டியாரவர்கள்

திரு. A. V. மெய்யப்ப செட்டியாரவர்கள்

திரு. A. M. M. அருணசலம் செட்டியாரவர்கள்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | — | 8 |
| ஆதரவாளர் | — | 9 |
| ஆயுள் உறுப்பினர் | — | 15 |
| ஆண்டு உறுப்பினர் ஆண், பெண் | | 1134 |

## செயற்குழு உறுப்பினர்கள்

1. AR. PL. அருணசலம் செட்டியார்
2. M. அடைக்கப்பன்
3. AL. MR. AL. S. அழகப்பன்
4. M. S. M. அழகப்பன்
5. L. சுப்பிரமணியன்
6. A. சிதம்பரம்
7. L. பழனியப்பன்
8. A. நாராயணன் செட்டியார்
9. C. ரங்கநாதன்
10. VS. அருணசலம்
11. KT. சிதம்பரம்
12. M. சிதம்பரம் செட்டியார்
13. SP. சின்னக்கருப்பன்
14. CT. கருப்பையா
15. ராம. ராமசாமி

16. PR. பெரிச்சியப்பன்

17. ராம. சிதம்பரம்

18. A. சேதுராமன், சென்னை-19

19. VR. சிதம்பரம்

20. A.M. லெட்சுமணன்

21. C. மகாலிங்கம்

22. L. மாணிக்கம் செட்டியார்

23. A. முருகப்ப செட்டியார்

34. A.S. நடராஜன்

25. A.K.M. முத்தையா

26. KR. சுந்தரமகாலிங்கம்

27. RM.N. பெரியகருப்பன் செட்டியார்

28. M. சிவலிங்கம் செட்டியார்

29. SP. சிதம்பரம் செட்டியார்

30. S. சுப்பையா

31. S. சொக்கலிங்கம்

32. RM. பழனியப்ப செட்டியார்

33. PL. பழனியப்பன் (அம்பத்தூர்)

34. SP. ராகவன்

35. MR. சாத்தப்பன்

36. A. சேதுராமன், சென்னை-1

37. SP. சொக்கலிங்கம்

38. PR. வீரப்பன்

39. RM. திருநாவுக்கரசு

40. PL. பழனியப்பன்

41. S.N. கணேசன்

42. SM. காசி

43. AR. லெட்சுமணன்

# புள்ளி விவரம்

இப்பட்டியலில், ஒவ்வோர் ஊரிலும் உள்ள மொத்த மக்கள் தொகையும், புள்ளிக் கணக்கும் மணமாக வேண்டிய 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் விவரமும் அடங்கியுள்ளது.

இப்புள்ளி விவரம் பராபவ ஆவணிமீ 31உ (16-9-'967) வரையில் கிடைத்த கணக்கு விவரப்படி தொகுத்ததாகும். நகரத்தார் ஐக்கிய சங்கத்தாரால் பெரு முயற்சியின் பேரில் சேகரிக்கப் பட்டது. புள்ளிவிவரக் கணிப்புப் புத்தகம் ஐக்கிய சங்கத்தில் கிடைக்கும்.

| வரிசை எண் | ஊர்ப் பெயர் | 16 வயதுக்குமேல் மணமாக வேண்டிய | | ஊர் மொத்தப் புள்ளிகள் | ஊர் மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | | |
| 1 | தேவகோட்டை | 704 | 506 | 2389 | 8633 |
| 2 | காரைக்குடி | 509 | 318 | 1725 | 6334 |
| 3 | வலையபட்டி | 249 | 182 | 837 | 3078 |
| 4 | பள்ளத்தூர் | 224 | 125 | 620 | 2223 |
| 5 | நாட்டரசன் கோட்டை | 175 | 130 | 555 | 1886 |
| 6 | கண்டனூர் | 181 | 104 | 484 | 1733 |
| 7 | அரிமளம் | 116 | 94 | 481 | 1622 |
| 8 | ராயவரம் | 158 | 96 | 461 | 1676 |
| 9 | குளிபிறை | 126 | 113 | 453 | 1601 |
| 10 | கடியாபட்டி | 133 | 99 | 446 | 1583 |
| 11 | வேந்தன்பட்டி | 143 | 106 | 431 | 1609 |
| 12 | நற்சாந்துபட்டி | 136 | 121 | 396 | 1529 |
| 13 | நெற்குப்பை | 136 | 105 | 387 | 1488 |
| 14 | கோனாபட்டு | 117 | 64 | 375 | 1293 |

| வரிசை எண் | ஊர்ப் பெயர் | 16 வயதுக்குமேல் மணமாக வேண்டிய | | ஊர் மொத்தப் புள்ளிகள் | ஊர் மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | | |
| 15 | புதுவயல் | 120 | 77 | 363 | 1224 |
| 16 | கண்டவராயன்பட்டி | 119 | 88 | 352 | 1272 |
| 17 | கீழச்சிவல்பட்டி | 115 | 111 | 345 | 1303 |
| 18 | கோட்டையூர் | 129 | 78 | 338 | 1243 |
| 19 | காரைக்குடிகாத்தான் | 97 | 56 | 327 | 1113 |
| 20 | ஓ. சிறுவயல் | 97 | 62 | 297 | 1029 |
| 21 | பாகனேரி | 112 | 67 | 293 | 1024 |
| 22 | கல்லல் | 99 | 82 | 292 | 1086 |
| 23 | மேலச் சிவபுரி | 105 | 68 | 289 | 1056 |
| 24 | கண்டரமாணிக்கம் | 112 | 62 | 286 | 1045 |
| 25 | ஆத்தன்குடி | 92 | 64 | 281 | 1057 |
| 26 | பி. அழகாபுரி | 80 | 78 | 278 | 1065 |
| 27 | பொ. புதுப்பட்டி | 90 | 74 | 255 | 942 |
| 28 | ஆராவயல் | 88 | 53 | 235 | 980 |
| 29 | ஆ. தெக்களூர் | 76 | 65 | 216 | 887 |
| 30 | கொத்தமங்கலம் | 55 | 41 | 204 | 661 |
| 31 | கொப்பனாபட்டி | 70 | 50 | 203 | 766 |
| 32 | ராங்கியம் | 59 | 38 | 201 | 702 |
| 33 | பூலாங் குறிச்சி | 76 | 44 | 199 | 755 |
| 34 | சிறுகூடற்பட்டி | 74 | 61 | 198 | 740 |
| 35 | நேமத்தான்பட்டி | 62 | 36 | 195 | 691 |
| 36 | வேகுப்பட்டி | 81 | 62 | 192 | 752 |
| 37 | விரையாச்சிலை | 63 | 53 | 182 | 679 |
| 38 | நாச்சியாபுரம் | 65 | 56 | 181 | 755 |
| 39 | அலவாக்கோட்டை | 69 | 55 | 179 | 625 |
| 40 | கல்லுப்பட்டி | 62 | 46 | 165 | 626 |

| வரிசை எண் | ஊர்ப் பெயர் | 16 வயதுக்குமேல் மணமாக வேண்டிய | | ஊர் மொத்தப் புள்ளிகள் | ஊர் மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | | |
| 41 | பனையப்பட்டி | 62 | 31 | 164 | 628 |
| 42 | சொக்கநாதபுரம் | 52 | 40 | 162 | 610 |
| 43 | குருவிக் கொண்டான்பட்டி | 49 | 31 | 162 | 578 |
| 44 | மிதிலைப் பட்டி | 52 | 44 | 154 | 541 |
| 45 | ஆவினிப் பட்டி | 49 | 34 | 143 | 541 |
| 46 | பலவான்குடி | 34 | 31 | 135 | 486 |
| 47 | ஆ. முத்துப்பட்டணம் | 46 | 32 | 134 | 501 |
| 48 | அரண்மனைச் சிறுவயல் | 43 | 36 | 126 | 412 |
| 49 | உலகம் பட்டி | 51 | 28 | 124 | 475 |
| 50 | மதகு பட்டி | 27 | 25 | 120 | 398 |
| 51 | செவ்வூர் | 48 | 30 | 116 | 472 |
| 52 | அரியக்குடி | 35 | 24 | 115 | 396 |
| 53 | சொக்கலிங்கம் புதூர் | 29 | 21 | 105 | 398 |
| 54 | மகிபாலன் பட்டி | 29 | 18 | 102 | 396 |
| 55 | விராமதி | 29 | 33 | 101 | 381 |
| 56 | ஒக்கூர் | 27 | 16 | 95 | 329 |
| 57 | கீழப்பூங்குடி | 24 | 16 | 94 | 294 |
| 58 | நடராஜபுரம் | 29 | 26 | 89 | 307 |
| 59 | கோ. அழகாபுரி | 23 | 22 | 88 | 299 |
| 60 | பட்டமங்கலம் | 21 | 22 | 84 | 317 |
| 61 | வி. லெட்சுமிபுரம் | 18 | 14 | 82 | 272 |
| 62 | காளையார் மங்கலம் | 31 | 27 | 79 | 305 |
| 63 | கொ. லெட்சுமிபுரம் | 19 | 19 | 69 | 231 |
| 64 | வெற்றியூர் | 26 | 20 | 68 | 289 |
| 65 | சிராவயல் | 24 | 13 | 63 | 226 |
| 66 | தேனிபட்டி | 19 | 9 | 63 | 219 |

உ
சிவமயம்

# கற்பக விநாயகர் வணக்கம்

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுதகற்று முகத்தி னானை
அற்பசுகத் தெனையழுத்தா ஐங்கரனைப்
பிற்பவமு மகற்றுங் கோவை
சொற்பழுது புரியாத வணிகர்குலந்
தினம்பணியுந் துணைத்தா ளானை
கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமாம்
விநாயகனைக் கருத்துள் வைப்பாம்.

| வரிசை எண் | ஊர்ப் பெயர் | 16 வயதுக்குமேல் மணமாக வேண்டிய | | ஊர் மொத்தப் புள்ளிகள் | ஊர் மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | | |
| 67 | மானகிரி | 19 | 17 | 62 | 210 |
| 68 | செம்பனூர் | 16 | 8 | 43 | 158 |
| 69 | கொ. அழகாபுரி | 17 | 7 | 41 | 135 |
| 70 | கருங்குளம் | 13 | 7 | 40 | 155 |
| 71 | தாணிச்சாவூரணி | 25 | 10 | 30 | 138 |
| 72 | அமராவதி புதூர் | 6 | 5 | 25 | 83 |
| 73 | சக்கந்தி | 4 | 3 | 22 | 64 |
| 74 | சோழபுரம் | 8 | 3 | 20 | 69 |
| 75 | பனங்குடி | 5 | 5 | 16 | 55 |
| 76 | பிள்ளையார் பட்டி | — | — | 2 | 2 |
| | | 6378 | 4516 | 19724 | 71736 |

# சிந்தனைக்குச் சில நிகழ்ச்சிகள்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

மாதம் ரூபாய் 300 சம்பளம் வாங்கும் ஒருவருடைய மகளுக்குத் திருமணம் நடந்தது. அத் திருமணத்திற்கு வந்திருந்த திருநெல் வேலி நண்பர் ஒருவர், சீர் வரிசைகளையும், அங்கு நடந்த மற்ற ஆடம்பரங்களையும் வியப்போடு பார்த்துவிட்டு, அங்கிருந்தவரி டம், செட்டிநாட்டுக் கல்யாணம் என்றால், மிகப் பெருந்தொகை செலவாகும் போலிருக் கிறதே!'' என்றார்.

அதற்கு அப்பெரியவர், "ஆமாம். இதற்கு முப்பது முப்பத்தைந்தாயிரம் செல வாகலாம்'' என்றார்.

உடனே திருநெல்வேலி நண்பர், "Life time Savings (வாழ்நாள் முழுதும் சேமித்தது) ஒரே திருமணத்தில் காலியாகி விடும் போலிருக்கிறதே!'' என்றார்.

அப்போது அருகிலிருந்த ஒருவர், "Life time Savings என்று சொல்லாதீர்கள். Life time earnings என்று சொல்லுங்கள். அதாவது பெண்ணின் தகப்பனார் வேலையில் சேர்ந்ததிலிருந்து இந்தப் பதினைந்து ஆண்டுக ளாக வாங்கிய சம்பளத்திற்கு Running Total (கூட்டுத் தொகை) போட்டால் இந்தக் கல்யாணச் செலவு தொகைகூட வராது'' என்றார்.

* * *

ஒரு நண்பர் 80 ஆயிரம் ரூபாய் முதல் வைத்து எவர் சில்வர் பாத்திர வியாபாரம் செய்து வந்தார். அவருடைய மூத்த மகளுக் குத் திருமணமாயிற்று. வியாபாரத்திற்கென அவர் வைத்திருந்த முதல் 80 ஆயிரத்தி லிருந்து, 50 ஆயிரமாகியது. இரண்டாவது மகளுக்குத் திருமணமாயிற்று. 50 ஆயிரம் 20 ஆயிரமாகச் சரிந்தது. இன்னும் அவருக்கு மூன்று பெண்கள் இருக்கிறார்கள்! அவர்களை நினைத்து அடிக்கடி மலைக்கும் அவர், 'நாணய மாகத் தொழில் செய்து கௌரவமாகப் பிழைக்கின்ற நிலை மாறி, தப்புத் தண்டாச் செய்யவேண்டிய நிலைக்கு இத்திருமணங்கள் நம்மைக் கொண்டுபோய் விடுமோ!'' என்று அஞ்சுகிறார்.

* * *

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த படித்த பெண் ஒருத்தியை, பட்டம் பெற்ற ஒரு பையனுக்குத் திருமணம் பேசினார்கள். முடியுந் தருவாயிலிருந்த பேச்சு, திடீரென முறிந்துவிட்டது. காரணம் என்னவென்று அந்தப் பையனைப் பார்த்து அவனது நண்பன் கேட்டான்.

"என்ன குமரப்பா, உனக்குப் பெண் பிடிக்கவில்லையா?''

"பிடிக்காமல் என்ன?''

"அவள் படித்தவள்தானே?''

"ஆமாம்.''

"கௌரவமான குடும்பம் என்று சொல்லு கிறார்களே!''

"யார் இல்லை என்றது?''

"அந்த இடத்தில் சம்பந்தம் செய்வதில், உன் தாய் தந்தைக்கு விருப்பமில்லையோ?''

"அதெல்லாம் இல்லை நான்தான் வேண்டாமென்று கூறிவிட்டேன்.''

"என்ன! உண்மையாகவா? ஏன்?

"என்னுடன் படித்து பி.காம் பரீட்சை யில் மூன்றாவது வகுப்பில் தேறினானே முருகப்பன், அவனுக்கு நாலு வராகன் சீதன மாம், நாலு வராகன் மாமியார் சாமானும். பி.காமில் முதல் வகுப்பிலே தேறிய நான், அவனைவிட எந்த விதத்தில் சளைத்தவன்? மூன்று வராகன் சீதனமும் மூன்று வராகன் மாமியார் சாமானும் தருவதாகக் கூறுகிறார் களே! எப்படி ஒப்புக்கொள்வது? இது என் சுயமரியாதைக்கே இழுக்கு அல்லவா?''

"இதைக் கேட்டு நண்பன் திடுக்கிட்டான். தன் சுயமரியாதைக்கே இழுக்கு என நினைக்கும் இந்த இளைஞன், படித்த இளைஞர் உலகுக்கே இழுக்கைத் தேடித்தந்துவிட்டானே!" என்று நினைத்து மனம் வெதும்பினன்.

* * *

செட்டிநாட்டுத் திருமணம் ஒன்றிற்குச் சென்னையிலிருந்து பிராமண நண்பர் ஒருவர் வந்திருந்தார்.

"பையன் என்ன படித்திருக்கிறான்? என்ன உத்தியோகம்? எவ்வளவு சம்பளம்?" என்று மெதுவாகப் பக்கத்திலிருந்தவரை அவர் விசாரித்தார்.

"பாலிடெக்னிக் படித்திருக்கிறான், நெய்வேலியில் வேலை, மாதம் 200 ரூபாய் சம்பளம்."

"இந்தப் பையனுக்குப் பத்தாயிரம், பதினையாயிரம் என்று கொடுக்கிறீர்களே! எங்கள் சாதியில் I. A. S படித்தவனுயிருந்தால்தான் பத்தாயிரம் வரதட்சணை கொடுப்போம். இந்தக் கல்யாணத்தில் செலவாகும் இவ்வளவு பணத்திற்கும் வட்டி மட்டும் போட்டுப் பார்த்தாலே, அது பையன் சம்பாத்தியத்திற்கு மேல் (மாதம் ரூ 200க்கு மேல்) வந்துவிடும் போலிருக்கிறதே!!! என்றார். பணத்தின் அருமையை உணர்ந்த அந்தப் பிராமண நண்பர்.

* * *

"என் பையன் பி. யு. ஸியில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறான். மேல் படிப்புப் படிக்க வைக்கவேண்டும். தாங்கள் ஏதேனும் பண உதவி செய்தால் தேவலை" என்று மகனின் படிப்பிலே அக்கறை கொண்ட தகப்பனர், பணம் படைத்தோரின் வீடு வீடாகத் தேடி அலைகிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, எவர் தயவையும் எதிர்பாராமல் கௌரவமாக, மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்திய அவர், இந்த நிலைக்கு வரக் காரணம் என்ன?

"வயது வந்த பெண்ணை வீட்டில் எவ்வளவு காலத்திற்கு வைத்துக்கொள்ள முடியும்? கையிலிருந்த பணத்துடன், கடனும் வாங்கிப் பெண்ணின் கல்யாணத்தை ஒரு வழியாக முடித்துவிட்டேன். இப்போது பையனைப் படிக்கவைக்கப் பணமில்லை. இந்த சாதியில் பிறந்ததால்தான் இப்படிப் பல்லைக் காட்டிப் பரக்க நீட்டவேண்டிய பரிதாப நிலைக்கு ஆளானேன்" என்று கவலைப்படுகிறார் அவர்.

பெண்ணுக்குத் திருமணம் செய்ய வேண்டியது தந்தையின் கடமை; அதே போல் பையனைப் படிக்க வைக்கவேண்டியதும் தந்தையின் கடமைதான். ஆனால், திருமணம் செய்யும் கடமையை நிறைவேற்றி விட்டு மற்றக் கடமைகளை நிறைவேற்ற இயலாமல், அல்லற்பட்டு ஆற்ருது அழுது தவிக்கின்ற தந்தைமார்களைச் செட்டிநாட்டில் தான் நாம் சந்திக்க முடியும்.

* * *

"என் பெண்ணுக்கு ஒரு நல்ல பையனுகப் பாருங்கள். சீர் வரிசை மாமியார் சாமான் என்றெல்லாம் எதுவும் பேசக்கூடாது என் பெண்ணின் பெயரிலும், மாப்பிள்ளை பெயரிலும் கூட்டாக இருபதினுயிரம் ரூபாய் பாங்கில் போட்டுவிடுகிறேன். திருமணத்தன்று உறவினர், நண்பர்களுக்குச் சிறப்பாக ஒரு விருந்து வைத்துவிடுகிறேன்." என்று சீர்திருத்த நோக்குடைய ஒரு தகப்பனர் கூறினர்.

பாங்கில் குறைந்தது ஓராண்டுத் தவணைக்கு இருபதாயிரத்தைப் போட்டாலே, மாதம் நூறு ரூபாய்க்கு மேல் வட்டியாகக் கிடைக்கிறது. பணத்தைக் கொண்டு, மேலும் பணம் சம்பாதிப்பதைவிட்டு, சாமான்களில் பணத்தை முடக்கி அவற்றைப் போட்டுவைக்கும் வீட்டுக்கும் வாடகை கொடுப்பது புத்திசாலித்தனமாகுமா?

அரும் பாடுபட்டுச் சேர்த்த பணத்தை திருமணத்திலே வேட்டு விட்டுக் கையைச் சுட்டுக்கொள்வதைவிட, மகள்—மாப்பிள்ளை பெயரில் பாங்கிலே பணத்தைப் போட்டு வைப்பது என்பது ஓர் அருமையான ஏற்பாடல்லவா? இதனுல், பெற்றவர்களுக்கு மன நிறைவும், மணமக்களுக்கு வாழ்விலே ஒரு தெம்பும் ஏற்படும் என்பதில் ஐயமுண்டோ?

# செயல் செய்ய வாரீர் செழிக்க

சிவபூசைச் செல்வர், சித்தாந்த நன்மணி
பழ. ஷண்முகம்

பொங்கலோ பொங்கலென்று பூரித்து நாடெல்லாம்
சங்கூதப் பால்பொங்கும் தைத்திருநாள்—தங்கமென
வந்திங்கு வாழ்வோங்க வாங்கிப் படியரிசி
தந்ததுவும் நம்தலைவர் சால்பு. (1)

சால்பார் நகரத்தார் சாதிக்கும் சங்கமிது
பால்வார்க்கும் தொண்டதனின் பண்பதனை—நூல்பார்த்து
பொங்கல் மலர்மணக்கப் பூத்திடவே செய்தருளித்
தங்குமே இன்பம் தழைத்து. (2)

தழைக்குமிச் சென்னைநகர் சார்ந்திலங்கும் சங்கம்
குழைக்கும் அன்பதனைக் கூட்டி—உழைக்குமே
கங்குல் பகலாய்க் கவின்பெறவே நம்மிளைஞர்
பொங்குவரே உள்ளம் பொலிந்து. (3)

பொலிந்து வளர்பணிகள் பொன்றாதும் நாள்நாள்
வலிந்தருளும் மென்மேலும் வாழ்வு—சலிப்பிலாக்
கல்விக் கரசியும் கண்ணூர் திருமகளும்
செல்வமாய் வாழ்த்துவர்காண் சேர்ந்து. (4)

சேர்ந்துநாம் கைகொடுப்போம் செம்மல்கள் ஊக்குவிக்க
ஆர்ந்தநற் பல்வளங்கள் அண்ணிக்க—ஓர்ந்து
அயல்நாட்டுச் செல்வம் அளவிட்ட இந்நாள்
செயல்செய்ய வாரீர் செழிக்க. (5)

செழிக்க முருகுவளர் செய்ய மலரும்
கொழிக்கவே முத்தமிழால் கொண்டு—வழித்துணையாய்
பொன்னம் பலவனின பொற்கமலப் பாதமலர்
கன்னலெனக் காக்கும் கனிந்து. (6)

கனிந்த உறுப்பினர்கள் கண்டெனவே பேசும்
நனிசேர் செயற்குழு நாடும்—மணித்தவளச்
சங்கநக ரத்தார்கள் தன்னிகரில் சென்னைநகர்
பொங்கநற் தைப்பாலே பொங்கு! (7)

இந்தியாவின் மிகப் பெரிய
கூட்டுறவு இன்சூரன்ஸ் நிறுவனத்தின்
வாழ்த்துக்கள்:

யூனியன் கோவாப்பரேட்டிவ் இன்சூரன்ஸ்
சொசைட்டி லிட்.,

(தலைமை அலுவலகம் : பம்பாய்)

தென்மண்டல நிர்வாகி : என். இராமலிங்கம்

தென் மண்டல அலுவலகம் :

302, லிங்கிச் செட்டி தெரு, சென்னை-1.

தொலைபேசி எண்கள் : 21011 & 25515

1967-ம் ஆண்டின் பிரிமிய வருமானம் : ரூபாய் 2 கோடி

# உலகத் தமிழ் மாநாடு

"சோமலெ"

1968 ஜனவரி 3ஆம் நாள் சென்னையில் உலகத் தமிழ் மாநாடு தொடங்கிற்று. மாநாட்டை யொட்டி, தமிழ்ப் புலவர் பலரது சிலைகள் சென்னை மாநகரில் வைக்கப் பெற்றன.

தமிழ் வளர்த்த பெரும் பேராசிரியரும் இலக்கிய நயங்களை விளக்கிக் கூறுவதில் இணையற்று விளங்கியவரும் நம் இனத்தவரு மாகிய மகிபாலன் பட்டி மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் சைவ சித்தாந்த வித்தகர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களுடைய சிலை வைக்கப்படாத குறையை ஓரளவு நிறையாக்கும் வகையில், பண்டிதமணி அவர்களுடைய படம் பவளக் காரத் தெரு, இரங்கூன் நகர விடுதியில் 3—1—68 ல் திறந்துவைக்கப்பெற்றது.

படத்தைத் திறந்துவைத்து, காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி. பேசுகையில் பண்டிதமணி அவர்கள் பால் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கொண்டிருந்த ஈடு பாட்டையும், பண்டிதமணி அவர்களைப்போல இந்நாளில் செட்டியார்கள் செட்டாக இருக்க வேண்டிய தேவையையும் குறிப்பிட்டார்கள். சென்னையில் இல்லாவிட்டாலும் பண்டித மணி அவர்களுடைய சொந்த ஊரிலேனும் அவர்களுக்குச் சிலை நிறுவலாம் என்றும் டாக்டர் மாணிக்கம் கூறினார்கள்.

பண்டிதமணி அவர்களின் புலமையைப் பாராட்டி, திரு. 'சோமலெ', அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் தி. ச. மெய்யப்பன் எம்.ஏ., மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை நடத்தும் கணேசர் செந் தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. வெ. சு. அழகப்பன் எம். ஓ. எல். ஆகியோரும் உரை யாற்றினார்கள்.

தமிழ் மாநாட்டுக்காக வந்திருந்த பலரும், பண்டிதமணி அவர்களின் தம்பி திரு. மு. சின்னையச் செட்டியாரவர்களின் மகன் திரு. மாணிக்கம் அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

பெரிய அளவில் பண்டிதமணி அவர் களின் திருவுருவப் படம் ஒன்றை அன்பளிக்க சன்மார்க்க சபையினர் இசைந்துள்ளனர்.

**ஆனைமுகன் வணக்கம்**

என்னிற் பிரியா தெனதுள்ளத் தாமரையின்
மன்னித் திகழ்களிற்று மாமுகத்தெய் - முன்னவனைப்
பெற்றே னவனடியே பேணினே னாதலினால்
எற்றே செயற்கரிய தெற்கு.

—பண்டிதமணி

# அறுபத்து நான்கு கலைகள்

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை தூய**
**உருப்பளிங்கு போல்வாளென்**
**உள்ளத்தினுள்ளே**
**இருப்பளிங்கு வாரா திடர்.**

இது கலைமகள் வணக்கம். அறுபத்துநான்கு கலைகளுக்கும் அன்னையாக விளங்கும் கலைமகள் உள்ளத்தில் பளிங்குருவமாக இருப்பதாலே இடர் எதுவும் வராது என்பது இதன் கருத்து. அறுபத்துநான்கு கலைஞானங்கள் என்று அடிக்கடி பலர் கூறக் கேட்டிருக்கிறோம். அறுபத்து நான்கு கலைகளும் யாவை என்றால் எண்ணிச் சொல்லவியலாது. பத்து இருபது நினைத்துப் பார்த்துச் சொல்லலாம். அதற்குமேலே......?

கீழே அறுபத்திநான்கு கலைகளைப் பற்றியும் விளக்கமாகக் கொடுத்திருக்கிறோம். இப்பட்டியலை ஒருமுறை படித்துப் பார்த்தாலே, நம் முன்னோர் எத்துணைச் சிறந்த விஞ்ஞான அறிவு படைத்து விளங்கினர்கள் என்ற உண்மை புலப்படும்.

### அறுபத்துநான்கு கலைகள்

1. உள்ளக் குறிப்புகளையும், அவற்றை வெளிப்படுத்தற்குரிய கண் முதலிய உறுப்புத் தொழில்களையு முடைய ஆடல்.
2. பலவகை இசைக்கருவிகளைச் செய்வதிலும், அவற்றை வாசித்தலிலும் உள்ள அறிவு.
3. ஆடவர் மகளிர் ஆகிய இருதிறத்தினர்க்கும ஆடை அணிகலனகளால் அழகு மிக்க ஒப்பனை செய்தல்.
4. பலவகை உருவங்களைத் தோற்றுவிக்கும் செயறகண் உளள அறிவு.
5. அமளி அமைத்தல், கம்பளம் விரித்தல், மலர் முதலியன கட்டுதல் ஆகியவை.
6. சூது முதலிய பலவகை விளையாட்டுக்களால் உலகத்தை மகிழ்வித்தல்.
7. பலவகை இருக்கைகளாலும், புணர்ச்சிகளாலும் சுரதத்தை யறிதல்.
8. மலர்களில் உள்ள தேன்களானும் குடிநீர் முதலியவற்றையும், கள் முதலியவற்றையும்உண்டாக்கல்.
9. உடலில் தைத்த அம்பு முதலியவற்றை வருத்தமுறாது மெல்ல வெளிப்படுத்துதலிலும், நரம்புக் கொப்புளங்களை அறுத்து ஆற்றுதலிலும் உள்ள அறிவு.
10. பெருங்காய முதலிய மணப் பொருள்கள், உப்பு முதலிய சுவைப் பொருள்கள் ஆகிய இவற்றின் சேர்க்கையால் சோறு, கறி முதலியனவாக்கல்.
11. மர முதலியவற்றிற் பழ முதலியன உண்டாகச செயதலும் அவற்றைக் காத்தல் முதலிய செயல்களும்.
12. மலைக் கற்களையும், பொன் முதலிய உலோகங்களையும் பிளத்தலும், அவற்றை நீருககலும்.
13. கருப்பஞ்சாற்றினுற் பாகு, வெல்லம் சர்க்கரை முதலியன செய்யும் அறிவு.
14. பொன் முதலிய உலோகங்களையும், மூலிகைகளையும் ஒனறோடொனறு சேர்க்கும அறிவு.
15. கலப்பாக உள்ள பொன், வெள்ளி முதலிய உலோகங்களைத தனித்தனியே பிரித்தெடுக்கும செயல.
16. உலோக முதலியவற்றின் கலப்பைப் புதிய முறையில ஆராயநதறிதல்.
17. உப்பு முதலியவற்றை ஆக்கலும், அவற்றைப் பிற பொருளகளினின்று வெளிப்படுத்தலும்.
18. அடி முதலியவற்றின் வைப்பு முறைகளை மேறகொண்டு வாள் முதலிய படைகளாற் குறிவைத்தெறிதல்.
19. உறுப்புச சந்திகளில் தாக்குதல், பிடித்திழுத்தல முதலிய செயல் வேறுபாடுகளால் செய்யப்படும் மற்போர்.

20. ஓரிடத்தைக் குறிவைத்து எந்திரம் அம்பு முதலியவற்றை அங்குச் செலுத்து தல்.

21. போர்ப்பறை முதலியவற்றின் குறிப்புக் களால் படைகளின் அணிவகுப்பு முதலி யன செய்தல்.

22. யானை, குதிரை, தேர் இவற்றின் கதி விசேடங்களாற் போரிற் கலத்தல்.

23. பல்வகை இருக்கைகளாலும் முத்திரை களாலும் தெய்வங்களை மகிழ்வித்தல்.

24. தேர் செலுத்துந் திறமையும் யானை குதிரைகளுக்கு நடை கற்பிக்குந் தொழிலும்.

25. மண்பாண்டம் முதலியன செய்தல்.

26. மர வேலைகள் செய்தல்.

27. கல்லாற் பொருள்கள் இயற்றுதல்.

28. பொன்னால் பொருள்கள் செய்தல்.

29. வெள்ளியினால் பொருள்கள் செய்தல்.

30. ஊருணி, வாவி, மேன்மாளிகை யமைத் தலும், நிலத்தை மேடுபள்ளமின்றிச் சமனாகச் செய்தலும்.

31. நாழிகை வட்டில் முதலிய பலவகை எந்திரங்களையும், வாச்சியக் கருவிகளை யும் செய்தல்.

32. மிகுதி, குறைவு, சமனாகிய அளவு களால் சேர்க்கப்பட்ட பல்வகை வண் ணப் பொருள்களால் ஆடை முதலியவற் றிற்கு நிறந் தீற்றல்.

33. நீர், நெருப்புக் காற்றுகளின் சேர்க்கை யாலும், அவற்றைத் தடைப்படுத்திச் செலுத்தலாலும் செய்யப்படும் எந்திரத் தொழில்.

34. தோணி தேர் முதலியன செய்யும் அறிவு.

35. நூல் நூற்றல், கயிறு முறுக்கல் முதலி யன செய்யும் அறிவு.

36. பலவகை நூல்களின் இயைபால் ஆடை நெய்தல்.

37. அரதனங்களைச் சாணை தீர்த்தல், துவாரமிடல் முதலியன செய்தற்கண் உள்ள அறிவின் ஏற்றத் தாழ்வு.

38. பொன் முதலிய உலோகங்களின் உண்மை நிலையை ஆராய்ந்தறிதல்.

39. செயற்கைப் பொன், செயற்கை அர தனங்களைச் செய்யும் அறிவு.

40. பொன் முதலியவற்றால் அணிகலன்கள் செய்தல்.

41. உருக்கிய பொன் முதலியவற்றால் மற்றை உலோகப் பொருள்களுக்குப் பூச்சிடல்.

42. தோல்களுக்கு மென்மை முதலிய பதனி டல்.

43. பசு முதலிய உடல்களினின்றும் தோலு ரித் தெடுத்தல்.

44. பசு முதலியவற்றினின்றும் பால் கறத் தல் முதல் நெய்யுருக்குதல் வரையுள்ள செயல்களின் அறிவு.

45. குப்பாயம் முதலியன தைத்தற்கண் உள்ள அறிவு.

46. நீரிற் கை முதலியவற்றால் நீந்திக் கடத் தல்.

47. இல்லத்தின் கண் உள்ள பாண்டம் முதலியவற்றைத் தூய்மையுற விளக்கும் அறிவு.

48. ஆடைகளை யொலித்தல்.

49. மயிர் களைதல்.

50. எள், இறைச்சி இவற்றினின்றும் நெய் வெளிப்படுத்தல்.

51. கலப்பை முதலியவற்றால் உழுதல்.

52. மர முதலியவற்றில் ஏறுதல்

53. ஒருவருக்கு மனமுவக்கப் பணிவிடை செய்தற்கண் உள்ள அறிவு.

54. மூங்கில் புல் முதலியவற்றால் பெட்டி முதலியன செய்தற்கண் உள்ள அறிவு.

55. காசபாத்திரம் முதலியன செய்தற்கண் உள்ள அறிவு.

56. நீர் கொணர்தல் நீர் தெளித்தல் முதலியன.

57. இரும்பினால் அம்பு வாள் முதலிய ஆயுதங்கள் செய்யும் அறிவு.

58. யானை, குதிரை, எருது, ஒட்டகம் ஆகிய இவற்றின் பிடர்க்கண் இடும்தவிசு முத லியன அமைக்கும் அறிவு.

59. குழந்தைகளை வளர்த்தலும் தாங்குதலும் குழந்தைகளோடு விளையாடுதலும்.

60. ஒருவன் குற்றஞ் செய்யின் அவனை அதற்குத்தக ஒறுத்தல்.

61. பல தேயங்களிலும் வழங்கும் எழுத்துக் களை நன்கு எழுதப் பழகும் அறிவு.

62. வெற்றிலை பாக்கு முதலியவற்றைச் சித்தப்படுத்தல், பேணுதல் முதலியன.

63. இக் கலைகளைக் கொள்ளுதற்கண் விரைவுத் தன்மை மேற்கொள்ளுதல்.

64. இக் கலைகளைக் கொடுத்நற்கண் தாழ்த்தற்றன்மை மேற்கொள்ளுதல்.

(ஆதாரம் : பண்டிதமணி மொழிபெயர்த்த சுக்கிர நீதி.)

**ஆதியில் அநுட்டித்து வந்தபடி**
**பூங்கொன்றை வேலங்குடியில் நகரத்தார் நிர்ணயஞ் செய்த**

# சாதிமுறை நியாயங்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம், பிராமணர், குலதேவதை இவர்களை வணங்கிப் பூசிக்கிறது.

கோவில்களுக்கும் குருஸ்தானங்களுக்கும் உள்ள கிராமம் முதலியவற்றை நகரத்தார் விசாரணையில் வைத்துக்கொண்டு அவற்றால் வரும் ஊதியத்தை அந்த அந்தத் தருமங்களுக்கே உபயோகப்படுத்துகிறது

சாதிமுறை நியாயங்களில் தவறி நடக்கிறதில்லை. நற்கருமங்களைச் செய்கிறது.

புருஷர்களும் பெண்களும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற குருஸ்தானங்களிலேயே தீட்சாகிரியை முதலியவைகள் வழக்கப்படி செய்துகொள்ளுகிறது.

வேறொருவரிடத்தும் தீக்ஷாகிரியை முதலியவை செய்துகொள்ளக் கூடாது.

சிவமதத்திலேயே யிருக்கிறது. அன்னிய மதங்களிலே சேரக்கூடாது.

ஏக கோத்திரத்தில் விவாகஞ் செய்துகொள்ளுகிறதில்லை. (கோத்திரமென்றது—கோவில்களும், உள் பிரிவுகளும்) சுயகோத்திரத்தில் புத்திர சுவீகாரம் செய்துகொள்கிறது.

விவாகங்களில் மாப்பிள்ளை தொட்டுக்கொடுக்க நம்மவர்களில் ஒரு பெரியோர் வாழ்த்தித் திருமங்கிலியம் பூட்டுகிறது.

இரத்தினம், சுவர்னம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது.

சீவவதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை. சத்தியசந்தர்களிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது.

தரும வட்டி வாங்குகிறது. குதிரை வியாபாரமும் வெற்றிலை முதலிய அழுகற் சரக்கு வியாபாரமும் செய்யக் கூடாது.

குடிவாரத்திற்கு உழுது பயிரிடுகிறதில்லை. ஊரில் அம்பல உம்பள நிலைமை பெற்று வேலைகள் பார்க்கக் கூடாது.

திருட்டு வியாபாரஞ் செய்யக்கூடாது. பிறன் மனைவியைச் சேரக்கூடாது, தாசிகளிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடாது.

நகர முறைமை தவறினவர்களையும், ராச தெண்டனைக் குட்பட்டவர்களையும், சோரஞ் செய்தவர்களையும் சிநேகிக்கக் கூடாது.

கடலுக்கு மேற்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு இந்நான் கெல்லைக் குட்பட்ட வேளாளர் பூமியாகிய இந் நாட்டிலேயே குடியிருக்கிறது.

வேறிடங்களிற் குடும்பத்தோடு போய்க் குடியிருந்தல் கூடாது.

பெண்டுகள் சுவாமி தெரிசனம் தீர்த்த யாத்திரைகளுக்குப் புருஷர்களோடு போய் வர வேண்டும். இதர காரிய நிமித்தம் அன்னிய தேசங்களுக்குப் பெண்டுகள் போகிறதில்லை.

எந்த விஷயங்களிலும் முன் வழக்கப்படி நடந்து கொள்கிறது.

நகரக் கூட்டம் கோவில் வாசலிலாவது மடத்து வாசலிலாவது கூடிச் சாதி நியாயம் பேசுகிறது.

மேற்கண்ட ஒன்பது கோவில் நகரத்தாருக்கும் அவரவர்களுக்கு உரிய கோவில்களிலிருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும், விபூதிப் பிரசாதமும் வந்துதான் கலியாணம் நடத்தல் வேண்டும்.

கலியாணம் நடக்கிற விவரத்தைப் பற்றிக் கோவில் வாசல்களில் தாம்பூலம் வைத்து முன்னமே தெரிவித்தல் வேண்டும்.

இரணியூர்க் கோவிலாரும், பிள்ளையார் பட்டிக் கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தாரால் தம்முள் கலியாணஞ் செய்துகொள்ளக் கூடாது. மற்றையக் கோவில்களில் செய்துகொள்ளலாம்.

செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர் மு.அ. முத்தையா செட்டியார்

# திருத்தசாங்கம்

### 1. நாமம்

தேனுருஞ் சோலைச் சிறுகிளியே வள்ளல்எங்
கோனுமம் நீயுவந்து கூறிடுவாய்—மீன்விழியார்
நாடி யணிகின்ற முத்தையா நல்லோர்கொண்
டாடி மகிழ்வான் பெயர்.

### 2. நாடு

மாமரத்தின் கொம்பில் மகிழ்ந்திருக்கும் கிள்ளாய்எங்
கோமகனின் நாடெதுவோ கூறிடுவாய்—தாமரையாள்
பொன்கொஞ்சு மங்கையர்கள் பூமஞ்ச ளோடிலங்கு
தென்செட்டி நாடென்று தேர்.

### 3. ஊர்

சொன்ன மொழிமறவா தோதும் சிறுகிளியே
மன்னன் திருவூர் மகிழ்ந்துரையாய்—இன்னிசைசேர்
பூநாடு வண்டும் புலவோரும் தேடிவருங்
கானடு காத்தானே காண்.

### 4. ஆறு

இன்பப் பொழிலின் எழில்சேர் மணிக்கிள்ளாய்
அன்பு மிகவுடையான் ஆறுரையாய்—துன்பம்
துடைக்கும் அறத்தாறு தோன்றல் இவனுக்
குடைத்தாகும் நல்லா றுணர்.

### 5. மலை

விண்ணில் உலவு மணிக்கிள்ளாய் வீங்குபுகழ்
அண்ணல் மலையென் அதுகூறாய்—வண்ணம்
பொலியுந் தமிழ்காத்த அண்ணு மலையே
நிலவு மலையா நினை.

### 6. தேர்

பால்பருகும் பச்சைப் பசுங்கிளியே எம்மரசர்
கால்வைத் தேறுந்தேர் கழறிடுவாய்—சீலம்
மிகவுடைய கோமகனை மேலேற்றிக் கொள்ளும்
புகழ்என்னும் பொற்றேரே காண்.

நெசவாளர்

அதிகம் விரும்பும்

**60 நிர், 40 நிர், 26 நிர்.**

**உயர்தர நூல் உற்பத்தியில்**

# திருவேபதி மில்ஸ்

**தனி இடம் பெற்றது.**

**திருவேபதி மில்ஸ் பிரைவேட் லிட்**

**கண்ணனூர்**

*பதிவு அலுவலகம் :*

*90, மில்ரோடு, கண்ணனூர் (கேரளா)*

*நிர்வாக அலுவலகம் :*

*10, லீத் காசில் ரோடு, சாந்தோம்,*
*சென்னை—28*

*மானேஜிங் டைரக்டர்*
**S. RM. S. நாராயணன் செட்டியார்.**

### 7. படை

பழங்கொத்தித் தின்று பசிதீரும் கிள்ளாய்
வழங்குகொடை வள்ளல் படையென்—இளங்குருதி
கொந்தளிக்கும் வீரர் குழுமிநின் றார்ப்பரிக்கும்
**செந்தமிழ் மாப்படை**யான் வேந்து.

### 8 முரசு

வழங்கு மொழியிசைத்து வாழ்கிளியே அண்ணல்
முழங்கு **முரசியம்பாய்** முன்னே—துளங்கும்
**இசைமுரசே** தன்முரசாய் ஏற்றான் தமிழ்த்தாய்
இசைநாட்டும் கோமான் இனிது.

### 9. மாலை

கண்ணுண் பழமதனைக் கவ்விவிடும் கிள்ளாய்எம்
அண்ணல் புயமாலை யாதோசொல்—எண்ணும்
செயலெல்லாம் வெல்வான் **செயமாலை** யேநற்
புயமாலை யாகும் புகல்.

### 10. கொடி

செட்டிநாட் டெம்மரசர் தேரும் **கொடி**யென்ன
பட்டுடற்கிள் ளாய்நீ பகர்ந்திடுவாய்—இட்டமுடன்
பீடு மிகுந்த மகராசன் வாசலிலே
ஆடுந் **தருமக் கொடி**.

ஓர் அரசர்க்குரிய அங்கங்கள் பத்து. அவையாவன பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, தேர், படை, முரசு, மாலை, கொடி என்பன. மன்னர்க்குரிய இப்பத்து அங்கங்களும் இன்னின்னவென வகுத்துக் கூறிச் சிறப்பித்துப் பாடுவதே தசாங்கம் என்பதாகும்.

நம் செட்டி நாட்டரசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இத் தசாங்கம் பாடப் பெற்றுள்ளது. பெயர் முத்து, நாடு செட்டிநாடு, ஊர் கானாடுகாத்தான், ஆறு செட்டிநாட்டில் கிடையாதாகையால், அறத்தாறு ஆகிய ஒழுகலாற்றைக் கூறப்பெற்றது. மலையாக தமிழையும் தமிழிசையையும் காத்த அரசரின் தந்தையாராகிய அண்ணாமலை மன்னரையே குறிப்பிடப் பெற்றுள்ளது. வாடைக் காற்றைத் தடுத்து நிறுத்தி நாட்டு மக்களை மலை காப்பது போல, பகையைத் தடுத்துத் தமிழைக் காத்த அண்ணாமலையார் மலையாகக் கூறப் பெற்றார். அவர் பெயரும் மலையென முடிவது காண்க. தேராகப் புகழ் கொள்ளப் பெற்றது. தேரில் ஏறிவரும் அரசர் யாவருக்கும் விளங்கித் தோன்றுதல் போல, புகழ் மிக்க நம் அரசரும் யாவருக்கும் நன்கு சிறந்து காணப்படுவதை நினைவு கூர்க. அதுபோலவே படையும் இளந்தமிழ் வீரர் படையாகக் கூறப் பெற்றது. முரசாக இசைகொள்ளப் பெற்றது. எடுத்த செயலெல்லாம் வெற்றிபெறத் தொடுத்து முடிக்கும் நம் அரசருக்குச் செயமாலையே மாலையாகக் கூறப்பெற்றது. கொடி தருமக் கொடியாகக் கூறப்பட்டது. தந்தையாரைப் போலவே தாமும் தொடர்ந்து அறப் பணிகளில் ஈடுபட்டுவரும் அரசர் வீட்டு வாசலிலே தருமக் கொடி பறந்தாடிக் காட்சி தருவதாகக் கூறிப் பாட்டு நிறைவெய்துகிறது.

திருத்தசாங்கம் இறைவன்மீதே பாடப் பெறுவதொன்றாகும். புலவர் சிலர் மன்னர்கள் பேரிலும் ஜமீன்தார்கள் பேரிலும் திருத்தசாங்கம் பாடி நிறையப் பரிசுப் பொருள்களைப் பெற்றிருக்கிறார்கள். பாரதியார் பாரதமாதா திருத்தசாங்கம் ஒன்று பாடியுள்ளார்.

செட்டி நாட்டரசரின் உயர் பண்புகளை அறிந்துணர்ந்து அவரைச் சிறப்பிக்கக் கருதி நம் புலவர் ஒருவர் இத்திருத்தசாங்கத்தை இயற்றியுள்ளார். அட்சர லட்சம் பெறக்கூடிய இப்பாடல் தமிழ் ரசிகர்களுக்குச் சிறந்த ஒரு விருந்தாகும். பாட்டுடைத் தலைவராகிய நம் அரசர்க்கோ ஏட்டிடை நிலைத்த சிறப்பைத் தருவதாகும்.

# பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

பதிவு அலுவலகம்
82-83, கீழ ஆவணி மூல வீதி
மதுரை.

மத்ய அலுவலகம்
33, வடக்கு சித்திரை வீதி
மதுரை

## தமிழ் நாடு, மற்றும் கேரள மாநிலங்களில்
## 61 கிளைகள் பணியாற்றி வருகின்றன.

| | | |
|---|---|---|
| சேவிங்ஸ் கணக்கு | தினசரி இருப்பின்பேரில் 4½% வட்டி கிடைக்கிறது. வாரம் ஒன்றுக்கு ரூ 5000/- வரை திரும்பப் பெறலாம். | 4½% |
| தவணை டிபாசிட் | காலத்திற்கேற்ப அதிகபட்சம் 8% வட்டி வரை அளிக்கப் படுகின்றது. | 8% |
| ரெகரிங் டிபாசிட் | ரூ 5/- ம் அதன் பெருக்குத் தொகைகளும் 12, 30, 45, 60, 80 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 8½% வட்டி வரை கிடைக்கிறது. | 8½% |

முழு விபரங்களுக்கு உங்கள் அருகாமையில்
உள்ள கிளையை அணுகவும்

**இயக்குநர் குழு**

திரு. கருமுத்து தியாகராசன், தலைவர்
திரு. உ. ராம. மெ. சுப. சேவ. அ. அண்ணாமலை செட்டியார்
திரு. ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார்
திரு. பி. கு. நா. கும. வயிரவன் செட்டியார்
திரு. K. திருமலைசுவாமி ஐயர்
திரு. சி. செ. வீர. நா. சுப்பிரமணியன் செட்டியார்

S. அழகுசுந்தரம்
உதவி காரியதரிசி

T. K. ராமசுப்பிரமணியம்
காரியதரிசி.

சாத்தப்பா சுப்பிரமணியன்
பொதுநல உறவு அலுவலர்

# பேரின்பம் கண்ட தெய்வமகள்

நாகமுத்தையா பி.காம்.

காவிரிநீர் ஓடிக் கலக்கின்ற பேரழகைப்
பாவிரித்துக் காட்டுமொரு பட்டினமே பூம்புகார்.

போகம் மிக நீளப் புகழ்கொள்ளும் அப்பதியில்
போக(ம்)உரு வுற்றுப் புறப்பட்டாற் போலங்கே

கோவலன் என்னுமொரு குடிமகன் வாழ்ந்தகதை
பாவளத்தால் என்னுளத்தைப் பற்றி இழுத்ததம்ம!

நூல்முழுதும் கற்றேன் நுவன்றேன் கண் நீர்வடித்தேன்.
வாலைக் குமரியவள் வந்தாள் என் முன்னிலையில்!

'காம உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்துதல்தான்
நேமம் எனக்கருதி நீளும் மகிழ்விழந்தாய்!

ஆடிக் களிப்பதிலே ஆர மூகைத் துய்ப்பதிலே
பாடித் திரிவதிலே பற்றுள்ளம் கொண்டவனைப்

பக்குவமாய்த் தேற்றிப் படியு(ம்)வகை தேராமல்
தக்க துறவுள்ளம் தான்மேல் எனத்துணிந்தாய்

தாமரைப்பூப் போலத் தளிரோடி நின்றாலும்
பூமணக்கும் மாதர் புகழ்ந்துன்னைப் பேசுகையில்,

'கற்பின் தலைசிறந்த காரிகைநீ,' என்றார்கள்
'பொற்பில் வடமீனைப் போன்றவள்நீ,' என்றார்கள்.

மேலுமவர் கோவலனை மேம்படுத்திப் பேசுகையில்
'மூளுகின்ற காதல் முதலாளி,' என்றார்கள்

'கண்டாலே காதலெழும் காளையவன்,' என்றார்கள்
'கொண்டாடும் காதலின் கோமகனே,' என்றார்கள்

கோவலனை நீமணந்த கோலத்தைக் கண்டவர்கள்,
'தாவி அணைக்கும் தளிர்கரத்தைப் போக்காதே.

காதலின் மன்னன் களியாட்டம் மாபெரிது
தீதென்று அவன்கையைத் தள்ளாதே,' என்றார்கள்

என்னென்ன சொன்னார்கள் ஏனவற்றைச்சொன்னார்கள்
என்றெல்லாம் உன்றன் இதயத்தைக் கேட்டாயா?

ஏதும் அறியாத ஏழைச் சிறுமகளே,
தோதாகக் கோவலன்பால் தொட்டுப் பழகவில்லை!

'இன்பத் திளைப்பில் இடையறு தாழ்ந்திருப்போன்
அன்ன நடையாரின் ஆணைக் கடிபணிவோன்

கைப்பொருளை நீக்கிக் கவலைமிகக் கொள்வோன்
மெய்ப்பொருளைத் தேராமல் மேற்புல்லை மேய்ந்திடுவோன்

பண்பு புரியாமல் பட்டென்றே ஐயுறுவோன்
பெண்ணின் அணைப்பைப் பெரிதென்றே எண்ணிடுவோன்

இந்தக் குணத்தையெலாம் ஏற்றிலங்கு கோவலனை
சொந்தம் என்றாய்; இன்ப சுகத்தை மறுத்துவிட்டாய்

வேகம் கடக்க விரும்பும் கணவனவன்
தாகம் தணிக்கத் தளிர்க்கொடியே நீமறுத்தால்

மோக வெறியுடையோன் மோசம் புரிந்திடப்
போகாமல் என்செய்வான்? போய்நின்றான் வேற்றில்லம்

வீசிவரும் யானையினை வீழ்த்தும் திறனுடையோன்
ஆசைக் களிற்றை அடக்க வழியின்றி!

அந்தணரை ஓம்புதலும் ஆன்றோர் புரப்பதுவும்
பந்தம் அகன்றவரைப் பாசமொடு போற்றுவதும்

நல்ல தெனவெண்ணி நல்லாசை நீமறந்தாய்
சொல்லாமல் சென்று சுகங்கண்டான் நின்கணவன்!

சிற்றின்பப் போக்கைச் சீண்டாத காரணத்தால்
உற்றாய் உலகில் உறவொண்ணாத் துன்பமெலாம்!

விட்டுப் பிரியா விருப்பத்தை மையமெனக்
கட்டிப் புரண்டாள் காரிகையாள் மாதவியோ!

காதலன் பேணக் கலவி புலவியெலாம்
போதும் எனவுரைத்த போதும் நிறுத்தாமல்

அள்ளியள்ளித் தந்தாள் அருமை தெரிந்தவளாம்
கள்ளவிழ் கூந்தல் கடிமண மாதவிதான்!

காற்சிலம்பு தந்ததுவும் கால்வலிக்கச் சென்றதுவும்
ஆர்த்தெழுந்து மாமதுரை ஆற அழித்ததுவும்

போற்றிப் புகழப் பொருந்துவதே என்றாலும்
ஏற்றுகுல பத்தினியர்க் கேற்ற இயல்பதுதான்!

எட்டுணையும் இல்லை புதுமைஎன்றும் தொட்டார்க்குப்
பட்டாடை தான்மாற்றிப் பள்ளிக் கழைக்கும்

குலத்திடை வந்தாள் குலவிளக்காய் வாழ்ந்தாள்
நிலத்திடை நீண்ட பெருமையென்றும் பேசிடுவர்.

கட்டிய இல்லாள் கவலையொடு வீற்றிருக்கத்
தொட்டவனை நல்ல துணையென்று சொல்லித்தன்

உள்ளத்தில் மூண்ட உபாதையைத் தீர்த்தற்குப்
பள்ளிக் கழைத்தவளோ பத்தினியின் மேம்பட்டாள்?

இன்னும் இதுபோல எத்தனையோ நின்பெருமை
என்றாலும் என்றன் இனத்துதித்த பொற்கொடியே,

ஒன்றை உரைக்கின்றேன் உண்மை புரிந்திடுவாய்,
'ஒன்றி உறவாடி உள்ளத்தை ஈந்ததுபோல்

ஓங்கெழில் நல்லுடலை உய்த்துவக்கத் தந்திருந்தால்
பாங்காய் மகவொன்றைப் பைங்கிளியே உன்வயிற்றில்

பெற்றெடுக்கும் வாய்ப்பதனைப் பெற்றிருப்பான் கோவலனும்;
உற்றிருப்பாய் நல்ல உடலின்பம் நீதானும்!

சிற்றின்பம் நீ மறுத்தாய் சேர்ந்ததுன்பால் துன்பமெலாம்
மற்றெதுவும் காரணமென் றுரர்த்தல் அழகல்ல!

கோவலனைக் கொன்று குறைசேர்த்த நேரத்தில்
கோவலனும் நல்ல குறையுடையான், செய்திருப்பான்

குற்றமென நீ நினைத்தே கோபமுடன், சூரியனை
கற்புடைய பெண்குலத்தைக் காட்டிப் பதில்கேட்டாய்.

"சொல்லுங்கள் என்கணவன் சூது புரிந்தவனே?
நல்ல படியாய்ந்து நாடும் பதிலுரைப்பீர்?"

இப்படிக் கேட்டுவிட்டு, இல்லைஎனக் கண்டாய்நீ
அப்புறந்தான் ஆவேசம் ஆட்கொள்ள வீறுற்றாய்

கொண்டவனின் உள்ளம் குதுகலிக்க வாழ்ந்திருந்தால்
உண்டாமோ இந்த உறுத்தல் துயரெல்லாம்?"

என்றேன்நான் என்னருகே என்ஆச்சி கண்ணகியாள்
நன்றே முறுவலித்து நானிருந்த பக்கமுற்றாள்.

தம்பிநீ, சொன்னதெலாம் தாழாமல் நான்கேட்டேன்
இம்மண்ணில் காமத்திற் இல்லைஇணை என்றாய்நீ

சிற்றின்ப ஆட்டத்தில் சேர்ந்திருந்தால் நான்அன்று
பெற்றதுயர் எல்லாம் பெறாமல் தவிர்த்திருப்பேன்

மாதவிஎன் வாழ்வை மறித்திருக்க ஒண்ணாது.
போதவிழும் இன்பப் புகழோடு வாழ்ந்திருப்பேன்

என்றெல்லாம் கூறுகின்றாய் என்றாலும் ஒன்றுரைப்பேன்
நன்றதனை என்மகனே நாளும் நினைத்திடுவாய்

சிற்றின்ப வேட்கை சிலநாளில் ஓய்ந்துவிடும்
பற்றற்ற பேரின்பம் பன்னாட்கள் வாழ்ந்துவரும்

பேரின்பங் கண்டாரைப் பேருலகம் போற்றிடுமாம்
சீரில்லாச் சிற்றின்பம் சேர்க்காது போற்றுதலை.

மாதவிஎன் வாழ்வை மறிக்கவில்லை என்றுரைத்தால்
காதலிலே நான்சிக்கிக் கட்டுண்டேன் என்றுரைத்தால்

நல்விளங்கோ; பாவேந்தன் நற்சிலம்பைப் பாடுவனோ
தொல்லுலகோர் என்னைத் துதித்துக் கொண் டாடுவரோ

கற்றார்க்கு நல்ல கலைவடிவம் தந்தவர்கள்
இன்றைக் கெனக்குமோர் இன்சிலையைக் கண்டார்கள்.

நல்விளங்கோ காணாத நற்பெருமை நானுற்றேன்
நல்வழியை நீஅறிவாய் நான்வருவேன்," என்றுரைத்து

மூத்தவளும் போய்மறைந்தாள் முற்றுண்மை கண்டேன்நான்
காத்திடுவாள் அன்னாள் கனிந்து!

*With the best Compliments of*

## Jayant Packaging Private Limited

Super 'A' 12 & 13, Industrial Estate
GUINDY, MADRAS-32

*MANUFACTURERS OF :*

Singlefaced Corrugated Rolls, Doublefaced Corrugated Boards of all grades, Heavy Duty Corrugated Containers, Printed cartons, Tubes and set up boxes and all kinds of paper Packaging Requisites.

Telephone : 801650 Telegram : " JAYANTPACK "

*With the best compliments of :* *Phone : 23580*

DRINK
&
ENJOY




CITY
COFFEE
WORKS

H. O. 2/39 MANNADY STREET
B. O. 2/217 THAMBU CHETTY STREET } MADRAS-1

# கண்திறந்த வள்ளல்

கவிஞர் கண்ணதாசன்

அறவலியும் பொருள்வலியும் அரண்வலியும்
புயவலியும் அடுகளத்துத்
திறவலியும் மிகவுடையான் திகைத்திருந்த
கொடிவளரத் தேரளித்தான்
மறவர்குலச் சுடரொளியான் மனிதகுலம்
உளவரைக்கும் பெயர்வளர்த்தான்
தருவதலாற் பெறுவதிலாத் தமிழாளன்
பாரிபுகழ் படித்தறிந்தோம்.

கொற்றவர் போம் வாசலினான் குன்றெடுத்த
முள்ளூரான் கோவிலூரான்
மற்றொருவர் இல்லையெனத் தன்னாவி
உளவரைக்கும் வழங்கி வந்தான்
கற்றவர்க்கும் பெரியோர்க்கும் கண்மலரப்
பொருளீந்தான் கனிந்து கண்டான்
நற்றிணையிற் புகழ்மணக்கும் நன்னாடன்
காரியையும் கேட்டறிந்தோம்.

கலைமிகுந்த தமிழிடத்துக் கலைபடிந்து
போனதெனக் கருத்திற் கொண்டு
கலையெடுத்து வருகவென அவ்வைக்குக்
கலைக்கொட்டுக் கனிந்தளித்தான்
பழயநகர் நாடாண்ட பண்பாளன்
பற்றறுத்த பொருள்படைத்தோன்
மழைக்கரத்துப் பேராளன்—மற்றொருவன்
காரியையும் மனத்திற் கொண்டோம்.

கொல்லியெனும் மலைநாடன் கொல்புலியான்
'அகம்'புகழும் வல்வில் லோரி
இல்லையென வருவார்க்கும் இல்லையெனா(து)
எடுத்தெடுத்தே ஈந்தளித்து
நல்லிசையும் கூத்தாட்டும் நடத்தவரும்
கலைஞருக்கு வழிதிறந்தே
எல்லையுள வரைதந்தான் இன்றுவரை
வாழ்வதையும் இயம்பக் கேட்டோம்.

மனைவியரின் மங்கலநாண் தனைத்தவிர
மற்றெல்லாம் ஈந்த வள்ளல்
கனிமொழியின், தமிழ்வேளிர் குலந்தந்த
கலைவேந்தன், கற்ப கக்கா
வனக்களிறு கண்டற்றே மனக்களிறு
துதித்தெழும்பக் கவிபு னைந்தான்
இனியமொழி முடமோசி எழுத்துவழி
நின்றுலவும் ஆயைக் கேட்டோம்.

குதிரைமலை எழினியையும் நள்ளியையும்
மலையனையும் பேகன் என்பான்
கதகதக்க மயிலுக்குப் போர்வைதரு
கனிவினையும் பிற்றை நாளில்
பதிமுழுதும் பஞ்சமெனத் துடிக்குங்கால்
பொருளீந்த சீதக் காதி
நதியினையும் பிறர்சொல்லிக் கவியுரைக்க
நாம்கேட்டோம், கண்டோ மில்லை.

கண்டறிய நானென்று தலைமுறைக்குக்
கண்திறந்தான் ஒருவ னென்றால்
"எண்டிசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கு" பெற்ற வள்ளல்
பண்டொருநாள் மீன்கொடியிற் பார்புரந்த
பாண்டியனன் வழியில் வந்தோன்
கொண்டதெலாம் கல்விக்கே கொடுத்துவந்த
அழகப்பன் தவிர யாரே?

கல்வியெனில் முகமலரும் கற்றவர்கள்
தமைக்கண்டால் சிரம்வ ணங்கும்
செல்வநிலை தேய்ந்திடினும் உள்ளநிலை
தேயாமற் சிரித்து நிற்கும்
பல்பொருளும் கல்வியுருப் பற்றிவிட
மற்றோர்க்கும் பாதை காட்டி
வல்முடிவிற் போய்ச்சேர்ந்தான் அழகப்பன்!
அவன்நாமம் வாழ்க மாதோ!

# நகரத்தார் சங்கம், கோவை

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கிணங்க கப்பலேறிக் கடல் கடந்து செப்பவொண்ணுப் பொருள் கொணர்ந்து சிறப்ப நிறை வீடுகளைக் கட்டுவித்தவர்கள் நம் நகரத்தார்கள். கோவில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்பதற்காக தாம் சென்ற இடமெல்லாம் திருக்கோவில் அமைத்து இறை பணி ஆற்றியவர்கள் நம் நகரத்தார்கள். தர்மம் தலை காக்கும் என்ப தால் அன்னசத்திரம் ஆயிரமாயிரம் கட்டிய வர்கள் நம் நகரத்தார்கள். குந்தித் தின்றால் குன்றும் குறையும் என்பதற்காக வட்டித் தொழிலையும் இன்னபிற தொழில்களையும் கெட்டித்தனமாகச் செய்து செட்டோடு, சிறப்போடு பல்நலமும் பெற்றுப் பாங்குடன் வாழ்ந்தவர்கள் நம் நகரத்தார்கள்.

அந்த நகரத்தார் பரம்பரை இன்று நலி வடைந்து பொலிவிழந்து சிறப்பிழந்து ஒற்றுமை குறைந்து பெற்ற குழந்தைகளுக் கல்வி கொடுக்கவும், பருவமடைந்த பெண் ணுக்கு உரிய காலத்தே திருமணம் முடிக்க வும் கூட இயலாத நிலைக்கு இலக்காகி இருக் கிறது. இப்படிப்பட்ட அவல நிலையை நீடிகக விடக்கூடாது. அந்த நிலையை மாற்றவேண்டு மானல் ஆங்காங்கே தொழில் காரணமாகவும் வேலை நிமித்தமும் வெளியூர்களில் வாழ்கின்ற நகரத்தார்கள் ஒன்றுபட்டு சமூக நலச் சங்கம் ஒன்றினை நிறுவினல்தான் இயலும். அதன் மூலம் நம் சமூகக் குழந்தைகளுக்கு இயன்ற வரை கல்வி வசதியும், திருமண உதவியும், வேலையின்றி இருக்கும் நம் சமூக இளைஞர் களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுத்தும் செயல்படலாம். இந்த எண்ணங்களின் அடிப்படையில் எழுந்ததுதான் சென்னை, மதுரை, திருச்சி நகரத்தார் சங்கங்களின் துவக்கம். அதன் வழியே தோன்றியதுதான் கோவை நகரத்தார் சங்கம்.

இவ்வாறு சங்கம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் 10, 12. ஆண்டு களுக்கு முன்பே எழுந்தது. திருவாளர்கள் உ. அ. பெரி. மு. அருணசலம் செட்டியாரவர் கள், பி.எல். கண்ணப்ப செட்டியாரவர்கள், அரு. லெ வெ நடராசன் செட்டியாரவர்கள் போன்ற பலர் அன்றே பெரிதும் முயன்றார் கள். இங்ஙனம் முன்பே இச்சங்கத்திற்கு விதைக்கப்பட்ட வித்து முளைவிட்டு, 9-10 64ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு எண் 90/1964.)

திருப்போரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் இச் சங்கத் தின் தொடக்க விழா 17-3 65 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் இராஜா சர். மு. அ. முத்தையா செட்டியாரவர்கள் இச் சங்கத்தைத் தொடங்கிவைத்தார்கள் அவ்வமயம் செட்டிநாட்டு அரசியார் ராணி மெய்யம்மை ஆச்சி அவர்கள் திருவிளக்கு ஏற்றி வைத்தார்கள். கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள் இவ்விழா வுக்குத் தலைமை தாங்கினர்கள். தொழில் மேதை, காஞ்செனறு அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் சிறப்புரை வழங்கி ஞர்கள்.

குணக்குன்றாக விளங்கும் திரு. அரு. லெ. வெ. நடராசன் செட்டியாரவர்கள் தலைவராக வும், திரு பி எஸ். எஸ் சோமசுந்தரம் செட்டியாரவர்களும், திரு PL. S. RM இராமனுதன் செட்டியாரவர்களும் துணைத் தலைவர்களாகவும், திரு. AL. சிங்காரம் செட்டியாரவர்கள் பொதுச் செயலாளராக வும், திரு. NK நாகப்ப செட்டியாரவர்கள் நிருவாகச் செயலாளராகவும், திரு SM. ரெங்கனுதன் செட்டியாரவர்கள் பொருளாள ராகவும், இவர்கள் உள்ளிட்ட 16 பேர் கொண்ட செயற்குழுவினரும் பொறுப் பேற்று முதல் ஆண்டுப பணிகளைச் சிறப்புற ஆற்றினர்கள்.

இரண்டாம் ஆண்டிற்கு உயர்திரு. P. S. S. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைவராகவும், திரு. PL. S. RM. இராமனுதன் செட்டியாரவர்களும், திரு. S. MR முருகப்ப செட்டியாரவர்களும் துணைத் தலைவர்களாக வும், திரு. KR. ஆண்டியபப செட்டியாரவர்

கள் பொதுச் செயலாளராகவும், நகரத்தார் சமூக நலனில் பெரும் அக்கரை கொண்ட வரும், சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபடுபவருமாகிய திரு. NK. நாகப்ப செட்டியாரவர்கள் மீண்டும் நிருவாகச் செய லாளராகவும், திரு. S. ST. சிதம்பரம் செட்டியாரவர்கள் பொருளாளராகவும் இவர்கள உள்ளிட்ட 25 பேர் கொண்ட செயற்குழுவினரும் பொறுப்பேற்று ஆக்க வேலைகளால் ஊக்கமுடன் ஈடுபட்டு சங்கத் தின் வளர்ச்சிக்கு அடிகோலினார்கள்.

10-1-67 ல் சங்கப் புரவலர் உயர்திரு. இராஜா சர். மு. அ. முத்தையா செட்டியா ரவர்களுக்கும், ராணி மெய்யம்மை ஆச்சி அவர்களுக்கும மணி விழா நினைவு விழா கோவை அலங்கார் ஓட்டலில் வெகு சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கோவை நகரத்தார்கள் அனைவரும் வந்திருந்த துடன், கோவை மாவட்டததிலுள்ள எல்லா இன்த்துப் பிரமுகர்களும் வருகை தந்து சிறப் பித்தார்கள். அது சமயம் ராணி மெய் யம்மை ஆச்சி அவர்கள நம் சங்கக் கட்டிட நிதிக்காக ரூபாய் 25,000 (இருபத்தி ஐயா யிரம்) தருவதாக மனமுவந்து வாக்களித்தார் கள். அன்னாரது பெருந்தன்மைக்கு நம் நன்றி என்றென்றும் உரியதாகும்.

3-9-67 ல் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா சிறப்புற நடைபெறறது. விழாவிற்கு, மதுரை விசாலாட்சி ஆலை அதிபர் உயர்திரு. லெ. நாராயணன் செட்டியாரவாகள தலைமை ஏற்று நடத்தித் தந்தாாகள. அவாகளும சங்கக கட்டிட நிதிககாக ரூ. 1001 (ஆயிரத்தி ஒன்று), நன் கொடை தருவதாக அன்புடன் தெரிவித் தார்கள விழாவினில், பேராசிரியர், டாக்டர். மெ. சுந்தரனார் அவர்களும், அண்ணாமலைப் பலகலைக் கழகத் தமிழ விரிவுரையாளர், சோம இளவரசு அவாகளும், தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்கள், தமிழண்ணல் இராம. பெரியகருப்பன் அவாகளும, முத்தமிழ் மணி. கதி. சுநதரம் அவாகளும, அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளா ரெ. சிங்கார வடிவேலன அவாகளும கலந்துகொண்டு சொறபொழி வாற்றினார்கள். அன்று காலையில் நடநத பேரவைக் கூட்டத்தில், நடப்பு ஆண்டுக் குரிய செயற்குழுவினர்களைத் தேர்ந்தெடுக் கப்பட்டது. திரு. அரு. லெ. வெ. நடராசன் செட்டியாரவர்கள் தலைவராகவும், திரு. S. MR. முருகப்ப செட்டியாரவர்களும், திரு. SM. KR. கருப்பன் செட்டியார் அவர்களும் துணைத் தலைவர்களாகவும், முன்பு நிருவாகச் செயலாளராகப் பணி புரிந்த திரு. NK. நாகப்ப செட்டியாரவர்கள் பொதுச் செய லாளராகவும், நாச்சியார்புரம் திரு S. V. N. நாகப்ப செட்டியாரவர்கள் நிருவாகச் செய லாளராகவும், திரு. S. ST. சிதம்பரம் செட்டியாரவர்கள் பொருளாளராகவும், இவர்கள் உள்ளிட்ட 22 பேர் கொண்ட செயற்குழுவினரும் பொறுப்பேற்றுப் பணி புரிந்து வருகிறார்கள்.

தற்போது 63 ஆயுள் உறுப்பினர்களும், 397 ஆண்டு உறுப்பினர்களும் சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். மேலும் அங்கத்தினர் கள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் சங்கத்தின் நிதி நிலைமைக்கேற்ப நம் சமூகக் குழந்தைகளுக்கு படிப்புக்காக உதவித் தொகை ரூபாய் ஐம்பது அன்பளிப்பாகவும், கல்லூரியில் படிப்பவர் களுக்கு ரூபாய் 300 முந்நூறு திரும்பப் பெறும் கடன் உதவித் தொகையாகவும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பல பணிகள் செய்ய கோவை நகரத்தார் சங்கம் பெரிதும் முயன்று வரு கிறது. சங்கத்திற்கென ஒரு தனிக் கட்டிடம் கட்டவும் முயறசி செயயபபட்டு வருகிறது.

நகரத்தார் பெருமக்களின் பெரும் ஒத்து ழைப்பும, நன்கொடை உதவியும மேலும் மேலும் கிட்டப்பெற்று சங்கம் தனது லட்சி யங்களை நிறைவேற்றி வெற்றிபெறவும், நகரத்தார் சங்கங்கள் இணைந்து செயலாற்றி, நம் சமூகம இன்னல் அகன்று இன்பம் பெற் றுப் புது வாழ்வு காணவும பேரூர்ப் பெருமான் திருவருள ஆணை நிற்குமாக.

இங்ஙனம்,

**S. V. N. நாகப்பன்**
நிருவாகச் செயலாளர்.

# நடந்து காட்டும் தலைவர்

அமரர் சொ. முருகப்பா

ஆற்றல் நிறைந்தவெம் அம்மான் கண்டாய்
　　அன்புசால் நெறிகண்டாய் அண்ணல் கண்டாய்
போற்று கதராடைப் புனிதன் கண்டாய்
　　பொறுமையின் நிறங்கண்டாய் புவியோ ரெல்லாம்
ஏற்று புகழ்படைத்த எம்மான் கண்டாய்
　　இந்தியர்தம் வாழ்வுக்கா எழுந்தான் கண்டாய்
சாற்று புகழார்போர்பந்தர் மேவும்
　　தண்ணளியார் காந்தியெனும் தலைவன் தானே.

துரிசற்ற மக்கட்குத் தோழன் கண்டாய்
　　தூய்மைசால் நெறிகண்டாய் துறவி கண்டாய்
பரிசுத்த வாழ்வில்லம் பரிப்பான் கண்டாய்
　　பாருற்ற எளியாரின் அடியான் கண்டாய்
தெரியாத உயிர்களிடம் கருணை காட்டிச்
　　சிறைபுகுந்து வாழ்வளித்த செல்வன் கண்டாய்
சரியான வழியிதென்று நடந்து காட்டும்
　　தண்ணளியார் காந்தியெனும் தலைவன் தானே.

## திருமால் வினா

“செல்வம் யாரிடத்திலே சேர வேண்டும்?” என்று கேட்டார் திருமால் “செட்டியாரிடத்திலே தான்” என்று புன் சிரிப்புடன் விடை கூறினாள் திருமகள். “ஏன் அப்படிச் செய்கிறாய்?” என்று மறு வினாக் கிளம்பியது காக்கும் கடவுளிடமிருந்து ‘தன்னிடம் சேர்ந்த பொருளை வீணாக்காமல் பயனுள்ள செயல்களுக்கே செலவிடுபவர் செட்டியார். தன் இன்பத்துக்காக என்று கருதாமல் உலக மக்களின் துயர் தீர்ப்பதற்காக அள்ளிவழங்குவர் தனவணிகர். தருமம் செய்வதே தம் கருமம் என்று நினைக்கும் அவர்களிடமே பொருள் சேர வேண்டும். ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு” என்றாள் திருமகள்.

“வள்ளுவரே, உன் பக்கமா?” என்று கேட்டுத் திருமால் தம் வினாவை நிறுத்திக் கொண்டார்.

# நகரத்தாரும் கலையும்

புலவர் நாகசண்முகம்

நீலத்திரைக்கடலோரத்திலே நின்று நித்தம் தவம்செய்யும் குமரி, வட மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக்கிடப்பது நம் தாய்த்திரு நாடு; தமிழ்ப் பெருநாடு.

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்று உணரமுடியாத இயல்பினைப் பெற்றவள் நம் தமிழன்னை.

தேன் தமிழை, தெவிட்டாத கனிச்சுவையை அந்தக் கற்கண்டைத் தம் உயிராய் உணர்வாய்க் கொண்டு மாட்சியோடு ஆட்சி புரிந்துவந்த முடியுடை மூவேந்தர்கள் காலம் தொட்டு, மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலம் வரை புகழ்மணக்கும் மரபாக, கலையார்வம் மிகுந்த பரம்பரையாக நம் நகரத்தார் மரபு விளங்கி வருகின்றது.

சுருங்கச் சொன்னால், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி என்று சிறப்பிக்கப் பெறும் மரபுகளுள் நம் மரபும் ஒன்றாகும்.

இயல்பாகச் சில மண்ணுக்கு வளமிருக்கும். இயல்பாகச் சில ஆற்றுக்கு வளமிருக்கும், அதுபோல இயல்பாகவே செல்வ வளம் நிறைந்த மரபு நம் மரபு. வாணிபத்தைத் துணையாகக் கொண்டவர்களிடம் வளம் இருப்பது இயல்புதானே?

பொங்கும் கடல்சூழப் பொலிவோடு விளங்கிய திருநகர், பூம்புகார்ப் பெருநகர். அந்த வளநகருக்கு நலமசேர்த்ததில் நம் முன்னோருக்குப் பெரும் பங்குண்டு

எழில் நிறைந்த நகரை, ஏற்றம் மிகுந்த அந்தத் திருநகரை கடல் சுவைத்துப் பார்க்க விரும்பிறறு; பொங்கிற்று; பூரித்தது; அணைத்துக் கொண்டது. அழிந்தது நகரம்! கொடுமையின் எல்லை! இயற்கையின் ஊழிக் கூத்திறது. அதன் கோரப் பசிக்கு, கொடிய ஆசைக்கு - புகழ்மணம் பரப்பிய புகார்நகரம் பலியாயிற்று.

கடல்கோளிலிருந்து மீந்த மக்கள் சோர்ந்த உள்ளத்தோடு அங்கிருந்து நடந்தார்கள். நம் முன்னோர்களும் தான்!

பாண்டியப் பெருநாட்டில், கடல் வந்து தம்மைத் தீண்டமாட்டாது என்று எண்ணத்தக்க செம்மண் பரப்பான நிலத்தில் அவர்கள் குடியேறினார்கள்.

சுருங்கச் சொன்னால், காடு கெடுத்து நாடாக்கி வாழ்கின்ற வாழ்க்கையைப் பெற்றார்கள். இதில் வியப்பு என்னவென்றால், காடு கெடுத்து நாடாக்கிய பெருமக்கள் நாட்டார் என்ற பெயரைத்தான் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நகரத்தார் என்ற பெயரைப் பெற்றார்கள். காரணம்......?

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து, கடல் கோளால் பொருள் இழந்து வந்த போதும் அவர்கள் புகழ்சேர்க்கும் கலையுணர்வை இழக்காமல் வந்ததுதான் !

மணிமுடி புனைந்து வாழ்ந்த மன்னர்களுக்கு அணியெனத் திகழ்ந்த மாநகரங்களைப் பற்றி வருணிக்கின்றபோது மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் என்று வருணிப்பார்கள்.

அப்படிப்பட்ட மாளிகைகளை நம் முன்னோர்கள் அமைத்தார்கள். கட்டிடக் கலைக்குப் பெருமை தரத்தக்க மாளிகைகளைச் சமைத்தார்கள். இதனால் அவர்கள் அமைத்த சிற்றூர்களெல்லாம் பேரூர்களாகக் காட்சி தந்தன; நகரங்களாக விளங்கின; இன்றும் விளங்குகின்றன.

காட்டைக் கெடுத்து நாடாக்கியவர்கள் அத்தோடு நின்றுவிடாமல் அழகுமிகு நகரங்களையும் அமைத்தார்கள் என்றால் அந்த மரபினர் நகரத்தார் என்ற பெயரைப் பெற்றதில் என்ன வியப்பிருக்கிறது!

நாடாண்ட மன்னர்கள் மேற்கொண்ட நற்செயல்கள் பலவற்றை அவர்களுக்குப் பின் குடிமக்களாக இருந்த நிறைவேற்றிய பெருமை, நற்றமிழ் நாட்டில் நகரத்தார் மர

பையே சேரும் என்பது கல்வெட்டுகளிலே பொறிக்கப்பட வேண்டிய பேருண்மையாகும்.

கலைமலிந்த காஞ்சிப் பெருநகரை நிலைக்களமாகக் கொண்டு ஆண்ட மகேந்திர வர்ம பல்லவன், அவன் திருப்புதல்வன் நரசிம்ம வர்ம பல்லவன் - ஆகிய இருவரும் கட்டிய கற்கோயில்கள் பலவாகும். அவையனைத்தும் கலைக்கோயில்களு மாகும்.

சோழப் பெருவேந்தர்களில் ஒருவனுன இராசராச சோழன் கண்ட தஞ்சைப் பெரிய கோயில், கலைத்தாய்க்குச் சிறந்த மணிமுடியாகும். அவன் மகன் இராசேந்திரன் கண்ட கங்கைகொண்ட சோழபுரத்துப் பெருங் கோயில் அத்தாய்க்குச் சிறந்த அணிகலன் ஆகும்.

அந்தக் கோயில்களுக்குப் பிறகு எல்லையற்ற கோயில்களைக் கட்டிய பெருமை நம் இனத்தார்க்கே உரியதல்லவா?

கோயில்கள் என்ருல் நாற்புறமும் சுவர், நடுவே ஒரு கோபுரம் என்ற நிலையில் கட்டப்பட்ட கோயில்களா அவை? அல்ல.

விண்ணுயர்ந்த கோபுரங்கள்; கண்கவரும் ஓவியங்கள்; கருத்தை யள்ளும் சிற்பங்கள்; அங்கே கலிதீர்க்கும் தெய்வங்கள்.

இப்படிப்பட்ட கோயில்கள்!

இந்தக் கோயில்களைக் கட்டுவதற்கு அறவுணர்வு மட்டும் காரணமல்ல; கலையுணர்வும் காரணம்.

இச்செயல் என்று இல்லாமல் எச்செயலில் பங்குகொண்டாலும் அச்செயலின் எல்லையைக் காணுகின்ற திறமையினை, திட்பத்தினை நம்மவர்கள் பெற்றிருந்தார்கள்; இன்றும் பெற்றிருக்கிருேம்.

நம்மவர்கள் கலைவளர்ச்சிக்குப் பாடுபட்டிருக்கிருர்கள்; கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டிருக்கிருர்கள்; சுருங்கச் சொன்னுல் முத்தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டிருக்கிருர்கள்.

தனிப்பட்ட எவரும் தொடக்கப் பள்ளிகளைக் கூட, கட்ட முன்வராத நிலையில், முன்வர முடியாத நிலையில் **நம் குலத் தலைவர் அண்ணுமலை அரசர்** பல்கலைக் கழகம் ஒன்றையே தோற்றுவித்தார்! செயற்கரிய செயல்! செம்மையான செயல்! நலம் பயக்கும் செயல்! நாடே போற்றிமகிழும் நற்செயல்!

நமது தாய்த்திரு மொழி இயலிசை நாடகமெனும் முப்பிரிவுகளை யுடையது. எனவே முத்தமிழ் என்ற பெயரைப் பெற்றது. நமது மொழியில் இசை என்ற ஒரு பெரும்பிரிவு இயல்பாக அமைந்திருந்தும் தமிழிலே இசை இல்லை என்று கூறுவார் இருந்தனர். அவர்கள் நம் மண்மீது வசித்தனர்; நம்மொழி பேசினர்; நம்மால் வாழ்ந்தனர்; ஆயினும் நம்மொழியில் நலமில்லை; இசையில்லை; வளமிலை என்று ஏசினர். நாம் நீண்ட பெரும் தூக்கத்தை விட்டு நீங்காதிருந்தோம்.

தமிழன்னை நொந்தாள்; 'சொற்றமிழ் பாடுக' என்று தூய்மறை பாடும் இறைவனே சொல்லியிருக்க, தமிழிலே இசையில்லை என்று சொல்லும் இழிநிலையும் வந்ததே என்று வெந்தாள்; கலங்கினுள்; கண்ணீர் சிந்திளுள்; மருண்டாள்; மயங்கினுள்;

மாதாவின் துயர்தீர்க்க ஒரு மகன் எழுந்தார். அந்தத் திருமகன் யார்? வேறு யார்? நம் குலப் பெருமகன் தான்! அண்ணுமலை அரசர் தான்!

பாண்டியப் பெருமன்னர்கள் தமிழ் வளரச் சங்கங்கள் கண்டதுபோல், அண்ணுமலை அரசர் தமிழிசை வளரச் சங்கம் ஒன்று கண்டார்.

அதுதான் தமிழிசைச் சங்கம்! அச்சங்கம் இசையை வளர்க்கிறது. கலையை வளர்க்கிறது. தமிழிசை தலையாய இசையென்பதை நிலைநாட்டி வருகின்றது.

கோயில்கட்டும் பணியிலிருந்து வீடுகட்டும் பணிவரை நம்மவர்களின் எல்லாச் செயல்களும் கலையழகு நிரம்பியவை யாகும்.

சுருங்கச் சொன்னுல், நம் தாய்மார்கள் முடைகின்ற ஓலைப் பெட்டிகளே நம் மரபினரின் கலையுணர்விற்குத் தக்க சான்றல்லவா?

தமிழகத்தில் கலைவளர்ச்சி என்ற நெடிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பல இடங்கள் நம் மரபினருக்கு உண்டு.

தமிழகத்தில் கலைவளர்ச்சி என்ற நெடுங் கதையில் நகரத்தார்கள் துணைப் பாத்திரங்களல்லர்; முதற் பாத்திரங்கள்.

வைரத்திற்குப் பட்டை தீட்ட வேண்டியிருக்கிறது. சங்கத்திற்குக் கூட மெருகு தேவைபபடுகிறது. எனவே நமது பழஞ் சிறப்புக்களால் ஏற்படுகின்ற பெருமை நமது புதிய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைய வேண்டும். நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த முறையில் நம் மரபினரின் நலம் காக்கத் தோற்றுவிக்கப்பட்ட நல்லதோர் அமைப்பே **நகரத்தார் சங்கமாகும்.**

அச் சங்கத்தின் மூலம் நல்ல பல செயல்கள் திட்டமிடப்பட்டுப் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இச் சங்கத்தின் தோற்றத்தால் நம் மரபினரிடையே, குறிப்பாக இளைஞர்களிடையே நல்ல உணர்ச்சியும் எழுச்சியும் தோன்றியிருக்கின்றன.

இஃது உண்மை என்பதை எடுத்துக் காட்டுவது போல, அண்மையில், பொங்கற் புதுநாளில், தென் சென்னையை நிலைக்களமாகக் கொண்டு, **'நகரத்தார் கலைக் கழகம்'** என்று ஓர் அமைப்புத் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இந்த முயற்சி தொடர்பாகப் பெரியோர் ஒருவரைச் சந்தித்த போது, (அவர் நம் மரபினர் தான்!) "கலையிலே நாட்டார் கலை நகரத்தார் கலை என்று இருக்கிறது?" என்று கேட்டார்.

கலையிலே நாட்டார் கலை நகரத்தார் கலை என்றில்லை. ஆனால் கலையை வளர்ப்பதில் நாட்டார்க்கும் பங்குண்டு; நகரத்தார்க்கும் பங்குண்டு; ஏனைய எல்லா மரபினர்க்கும் பங்குண்டு

கலையை வளர்த்த மரபினர், கலையை வளர்த்துக் கொண்டிருக்கின்ற மரபினர் அதற்கென்று ஓர் அமைப்பினை வகுத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? அஃது எவ்வாறு தவறாகும்?

கலை என்பது பெருங்கடல். நம் மரபினரின் கலைத்தொண்டு பேராறு; ஜீவ நதி.

நகரத்தார் கலைக் கழகம் என்ற அமைப்பிற்குக் கலைப்பெருஞ் செல்வர் திரு. ஏ. எல். எஸ். அவர்கள் தலைவராகவும், நகரத்தார் சங்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரும் நல்லுழைப்பாளரும் நலர்சேர் கவிஞருமான திரு நாக முத்தையா அவர்கள் பொதுச் செயலாளராகவும், அன்பும் அமைதியும் திடமும் திட்பமும் கொண்ட வழக்கறிஞர் திரு. எஸ். பி. எல். பழனியப்பா அவர்கள் பொருளாளராகவும், இனிமையும் எழுச்சியும் நிறைந்த திரு. மெ. முருகப்பா அவர்கள் செயலாளராகவும், கலையார்வமும் சலியாத உழைப்பும் கொண்ட திரு க. ஜெயம்கொண்டான் அவர்களும் திரு. சேதுசுந்தரம் அவர்களும் துணைச் செயலாளர்களாகவும் பங்கேற்றுள்ளார்கள்.

நகரத்தார் கலைகழகத் தொடக்க விழாவில் தலைமை தாங்கிய கலைப்பெருஞ் செல்வர் திரு. ஏ. எல். எஸ். அவர்களும், விழாவினைத் தொடங்கி வைத்த பொற்புடைப் பெருஞ் செல்வர் திரு. சி. வி. சிடி. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், வாழ்த்துரை வழங்கிய நம் குலத்தலைவர் நற்றவப் பெருஞ் செல்வர் செட்டிநாட்டரசர் ராஜா சர் திரு முத்தையா செட்டியார் அவர்களும், கவிப் பெருஞ் செல்வர் திரு கண்ணதாசன் அவர்களும் தொழிற்பெருஞ் செல்வர்களான திரு. ஆ. நாகப்பச் செட்டியார் அவர்களும், திரு. வி. எஸ். சிவலிங்கம் செட்டியார் அவர்களும் இம்முயற்சியினை வெகுவாகப் பாராட்டியதோடு, தங்களுடைய முழுமையான ஆதரவு இந்த அமைப்பிற்கு உண்டு என்றும் உறுதிகூறினார்கள் அதற்கு எடுத்துக் காட்டாக அவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் வெண்பொற் காசுகள் அளித்துச் சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சி, நகரத்தாரின் கலையுணர்ச்சிக்கு - அவர்களுடைய மரபுப் பெயரால் தொடங்கியுள்ள புதிய முயற்சிக்குப் பெருக்கம் தருவதாகும்.

நகரத்தார் கலைக் கழகத் திட்டங்களில் ஒன்று, விரைவாகவும் அழகாகவும் தென் சென்னையில் ஒரு மன்றம் அமைப்பது என்பதாகும்.

**மொழி என்றால் தமிழ் நினைவிற்கு வரும்.**
**இனிமை என்றால் தமிழிசை நினைவிற்கு வரும்.**
**அறம் என்றால் வள்ளுவம் நினைவிற்கு வரும்.**
**மன்றம் என்றால் ராஜா அண்ணாமலை மன்றம் நினைவிற்கு வரும்.**

எழில்பெற்ற, ஈடற்ற அம்மன்றம் போல் ஒன்று தென் சென்னையிலே உருவாக வேண்டும்.

அம் மன்றம் நம் நலம் காக்கும், வளம் காக்கும் வள்ளல் பெயர் கொண்டு விளங்க வேண்டும்.

ஆமாம்......?

## ராஜா முத்தையா மன்றம்

என்ற பெயர்கொண்டு திகழ வேண்டும்.

இன்று எண்ணத்திலே உருவான **ராஜா முத்தையா மன்றம்** விரைவிலே காட்சிப் பொருளாய் - கருத்தைக் கவரும் கலையரங்காய் - தென் சென்னை போற்றுகின்ற பொன் வண்ண மாளிகையாய் உருவாகும் என்பது உறுதி.

வாழ்க தமிழ்! வளர்க கலை!

# விடுகவிகள்

திரு. ரெ. முத்துக்கணேசன்

தமிழர்களுடைய வாழ்வு வளம் பெற்றது. தமிழர் தம் நெஞ்சங்கள் நிறைந்தன. அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பிறருக்குத் தெளிவாகக் கூறத் தொடங்கினர்; அதற்குத் துணையாக மொழிகளில் எளிமையைக் கையாண்டனர். சொற்களைப் புதியனவாக வாழ்க்கைக்கு வேண்டிய வண்ணம் ஆக்கிக் கொண்டனர்; அச்சொற்களை அழகுறவும் மொழியத் தொடங்கினர், மனித சமுதாயத்தில் ஒரு சிலர் அழகுறப் பேசியவற்றைப் படித்தவர்களும் பாராட்டினர்; பாமரரும் பாராட்டினர். அவ்வாறு பாராட்டப்பெற்றவர்கள் மகிழ்ந்து மேலும் தங்கள் தங்கள் அறிவை பெருக்கிக் கொண்டனர். அவர்கள் தம் கற்பனை விரிந்தது, அவர்கள் தாங்கள் வெளியிடும் சொற்களிலே தங்களுடைய கற்பனையைக் காட்டினார்கள். தாங்கள் எண்ணிய கருத்துக்களை உவமைகாட்டிக் கற்பனையோடு பேசும்பொழுது மற்றவர்கள் மிகவும் அனுபவித்துப் பாராட்டினார்கள். கேட்டவர்கள் அறிவும் வளரத் தொடங்கிற்று. மக்களுடைய இலக்கிய உணர்வும் மலர்ந்து பரவியது. இவ்வாறு சொற்களிலே அழகுணர்ச்சியும் கற்பனையும் கலக்கவே தமிழ்மொழி மேலும் இலக்கிய வளமையைப் பெற்றது மலையிலிருந்து வீழும் அருவியைக் கண்டான் தமிழன்; காட்டில் தானே மலர்ந்து மணக்கும் முல்லையை முகர்ந்தான் தமிழன்; மகிழ்ச்சியில் தோகையை விரித்தாடும் மயிலினது ஆட்டத்தை அனுபவித்தான் தமிழன்; மங்கையின் பார்வையில் மட்டில்லாத இன்பத்தைத் துய்த்தான் தமிழன்; இவ்வாறு இயற்கையில் தோய்ந்த தமிழனது அறிவு தான் எண்ணியவற்றை அழகுறச் சொல்வதற்குக் கற்பனையைக் கருவியாக்கத் தொடங்கிற்று. பனியும் தென்றலும் மறைவாக மலரை வளர்ப்பது போன்று, இவ்வியற்கையில் உதித்தகற்பனை மனிதனது எண்ணங்களை வளர்த்தது. அவ்வெண்ணங்களுக்கு வடிவினை வழங்கியது; அவ்வெண்ணங்களைப் பிறர் மனத்தில் வடியச் செய்ய வழி முறைகளை வகுக்கத் தொடங்கியது; இவ்வாறு கற்பனையறிவால் வளர்ந்த தமிழன் அறிவு வளம்பெறப் புதிர்களைப் போடத் தொடங்கினான். அப்புதிர்களை விடுவிக்குமாறு பிறரைக் கேட்டான். அக்காலத்தே வீட்டிற்குள் நடுவில் முற்றம் அமைத்து வீடுகட்டுவார்கள். அறை வீடுகள் சுற்றியிருக்க நடுவில் முற்றம் இருக்கும் இதனை அறிந்தான் மனிதன். தன் விரல்களோடு கூடிய உள்ளங்கையை அதற்கு ஒப்புமை கண்டான். முற்றமும்—உள்ளங்கையும் ஒரு வகைக் கற்பனையைத் தோற்றுவித்தன. அக்கற்பனை அவனுள்ளத்தே ஒருபுதிராக வடிவெடுத்தது. உடனே அவன், "ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம், அது என்ன?" என்ற புதிரைப் போட்டான்; அதற்குவிடை கூறமற்றவன் சிந்தித்தான். அறை வீடுகளுக்கு நடுவில் அமைந்திருப்பது முற்றம். அதுபோல் ஐந்து விரல்களுக்கும் நடுவில் அமையப் பெற்றிருப்பது உள்ளங்கையாகும். ஆகவே உள்ளங்கை என்று அப்புதிரை விடுவித்தான். இவ்வாறு ஒருவருக்கொருவர் பொழுது போக்காகத் தொடங்கிய புதிர்மொழி கவிநயம் தோய்ந்ததாயிருந்தது; கற்பனை செறிந்ததாய் இருந்தது; அறிவையும் வளர்ப்பதாயிருந்தது; அப்புதிர்மொழியைமிகவும் பாராட்டித் தமிழினம் இலக்கியமாக வளர்க்கத் தொடங்கிற்று; அவ்விலக்கியப் புதிர்மொழிகளே விடுகவிகள் என்ற பெயரினையும் பெற்றன.

இவ்வாறு பிறந்த விடுகவிகள் ஆயிரம் ஆயிரமாகப் பெருகின. இவ் விடுகவிகளின் எளிமைத் தன்மை புலவர்களின் உள்ளத்தை ஈர்த்தது; உவமைகளைக் கூறிப் பொருளை மறைத்துப் பேசும் தன்மையும் அவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அங்ஙனம் கொள்ளைகொண்ட விடுகவிக்கு இலக்கணம் வகுக்கத் தொடங்கினர் புலவர் பெருமக்கள். அவ் விடுகவியைப் "பிசி"—என்ற பெயரால் அழைக்கத் தொடங்கினர்; அதனை இரண்டு வகையாகப் பிரித்தனர். "தான் கூற வந்த பொருளை மறைத்து அப்பொருளுக்கு ஒப்புமையான வேறொரு பொருளை வெளிப்படையாகக் கூறித் தான் கருதிய பொருளைக் கேட்டல்" ஒருவகையாகும். "தான் கூறவந்த ஒரு பொருளை மறைத்து, தெளிவாக அதன் கருத்து வெளிப்படுமாறு வேறொரு பொருளைக் காட்டிப் பேசுவது மற்றொரு வகையாகும். இதனைத் தொல்காப்பியர் :

" ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோற்றுவது கிளர்ந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசி வகை நிலையே !"
(தொல்—பொருள்—செய்—488)

என்று விடுகவிக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

*With Compliments :*

# M. NILAKANTAN & BROS.,

**Engineers & Contractors,**

*14/31, ELDAMS ROAD, MADRAS-18.*

**AND**

**ALLIED CONCERNS**

1. M. Nilakantan & Co.
2. M. Krishnamoorthy & Co.
3. M. Subramaniam & Co.
4. Bharadwaja & Co.
5. T. V. Viswanathan & Co. Tiruchirapalli.

**Specialists in design and construction of Pre-stressed Concrete and R. C. C. Structures.**

**MADRAS : TUTICORIN: TIRUCHIRAPALLI : VISAKHAPATNAM :**

| Phone : | | | | |
|---|---|---|---|---|
| Off. | 74154 | 637 | 935 | 3128 |
| Res. | 85515 | | | |

மேலே கண்ட இருவகை இலக்கணத்திற்கும் எடுத்துக்காட்டுக்களை நாம் பார்ப்போமாக ! மக்கள் அன்றாட வாழ்க்கையிலே காணும் பொருள்களில் சுண்ணும்பு ஒன்றாகும். பெரியவர்கள் வெற்றிலை பாக்கோடு சேர்த்துச் சுவைக்கும் பொருளுமாகும். இச்சுண்ணும்பைப் புதிர்ப்பொருளாக்க முனைகின்றார் ஒருவர். அவர் போடும் விடுகவி—

"வேகாத வெய்யிலிலே
வெண்ணெய் பிசைந்து வைத்தேன்
உருக வில்லை ஒட்ட வில்லை
உலர்ந்துவிட்டது !"

இதற்குச் சுண்ணும்பு என்று மற்றவர் விடுவிக்கின்றார். இதில் வெண்ணெய் உருகும் தன்மையது; வெய்யில் பட்டவுடன் உருகி ஓடும்; ஆனால் வெண்ணெய் போன்று வெண்மையில் ஒப்புமை உடையது சுண்ணும்பு; சுண்ணும்புக்கு ஒப்புமைப் பொருளாக வெண்ணெயைக் கூறுகின்றார்; பின் வெண்ணெயின் உருகுந்தன்மையை எடுத்துக்கூறி உருகாத தன்மைவாய்ந்த சுண்ணும்பை மறைத்து வைத்துப் புதிர் என்ன என்றுகேட்கிறார். ஒப்புமையுடைய வெண்ணெயை எடுத்துக்கூறித் தான் கருதிய பொருளாகிய சுண்ணும்பை, மறைத்துக் கூறியதினால் இவ் விடுகவி ஒப்பொடு புணர்ந்த உவமை என்ற முதல்வகையைச் சார்ந்ததாகும். இவ்வகை விடுகவிகள் புலவர்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தன எனலாம். சங்க கால இலக்கியங்களிலும், பிற்காலத்தே எழுந்த சிற்றிலக்கியங்களிலும், சிலேடைச் செய்யுள்களிலும் உவமைப் பொருள் செறிந்த இவ் விடுகவி வகையினை நாம் அறிந்து இன்புறலாம். இவ்வகையில் அமைந்த பாவடிகள் கருத்துச் செறிந்தனவாய் கலை படிந்த உண்மைகளைக் காட்டுவனவாய் அமைந்திருக்கும்; மேலும் தலைவனைப் பிரிந்து தலைவி வாடுங் காலத்து செவிலித் தாய்மார் விடுகவி போட்டுப் பொழுது போக்குவர். இவ்வாறு விடுகவியைச் செவிலிக்கு உரிமையாக்கி இலக்கியம் படைத்தனர் புலவர் பெருமக்கள்.

அடுத்து மற்ற வகையைப் பார்ப்போம், தமிழகத்தில் கற்களால் ஒளிஉண்டாக்கிய காலம் கடந்துவிட்டது! திரி அமைத்து எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி ஒளிகண்டனர் மக்கள்; அதன் பின் அயலார் தமிழகத்துக்கு வந்தனர்; அவர்கள் கூட்டுறவால் மெழுகு திரி விளக்கும் வந்தது. அவ்விளக்கு எரியும பொழுது மெழுகு உருகும்; உருகி உருகி மெழுகு முழுவதும் கரைய அவ்விளக்கு ஒளிதந்து பின் மறையும். இதனைக் கண்டு சிந்தித்தார் ஒருவர். இதன் கருத்தை உள்ளடக்கிக் கொண்டு விடுகவி ஒன்றைப் போடுகின்றார் :—

"எண்ணெய் வேண்டாத விளக்கு
எடுப்பார் கைவிளக்கு
கண்ணீர் விட்டுக் கலங்கிடும் விளக்கு
தன்னைத் தானே விழுங்கிடும் விளக்கு!"

அதற்கு மெழுகு திரி விளக்கு என்று புதிரை விடுவித்தார் மற்றொருவர். இவ் விடுகவியில் அமைந்திருக்கும்புதிரைப் பாருங்கள்.எண்ணெய் ஊற்றும் திரிவிளக்கைக் கண்ட மக்களுக்கு— அவ்விளக்கின் மற்றைய தன்மையை உணர்ந்த மக்களுக்கு வேறொரு விளக்கின் தன்மையைக் கூறுகின்றார். தான் கருதியது மெழுகு திரி விளக்கு என்பதைத் தெளிவாய்ப் புலப்படுமாறும் கூறுகிறார். எரிகின்ற விளக்கு எண்ணெயின்றி எரிகின்றது என்பதாலும், தானே உருகுவதைக் கண்ணீர் விடுகின்றது என்று கூறிய கற்பனையாலும், தன்னைத் தானே எரி பொருளாகக் கொள்கின்றது என்ற அதன் செயலினாலும் மெழுகு திரி விளக்கு என்பது வெளிப்படையாகத் தெரிகின்றதல்லவா! இதனால் இவ்விடுகவி "தோற்றுவது கிளந்த துணிவினாலும்"—என்ற இரண்டாம் வகையைச சார்ந்தது. இவ்வகை விடு கவிகளை, மக்களுக்கு அறிவுரை பகரும் பொழுது புலவர்கள இலக்கியங்களில் எடுத்தாண்டனர். காபபியங்களிலும் இவ்வகை விடுகவிகளின் தன்மை படிந்திருப்பதை நாம் கண்டு அறிவின்பம் பெறலாம்.

பொதுவாக மக்கள் இவ்விரு வகையும் படிந்த விடுகவிகளுக்கு, தாவரம்-மலை-ஆறு-மலர்கள் முதலிய இயற்கைப் பொருள்களையும் புதிராகக் கையாண்டனர் ; சமயத்துறையில் பாடல் பெற்ற தலங்களின் பெயர்களையும் எடுத்தாண்டனர்; அஃறிணைப் பொருள்களாகிய ஊர்திகள்-இசைக்கருவிகள்- நுண்கலைப் பொருள்கள் முதலியவற்றையும் விடுகவிகளில் இடம் பெறச் செய்தனர். மேலும நாள்தோறும் பழகும் விலங்கினங்களையும் மனிதர்களின் உடல் உறுப்புக்களின் பெயர்களையும் வைத்து விடுகவிகளை யாத்தனர். இவ்வாறு விடுகவிகள் மக்கள் சமுதாயத்தில் அன்றாடம் அவர்கள் வாழ்க்கையில் காணுகின்ற பொருள்களைப் பற்றியும் அவற்றின் நன்மைகளைப்பற்றியும் அறிவித்தன ; மக்களின் சிந்தனையைத் தூண்டின; கற்பனையை வளர்த்தன ; அறிவைப் பெருக்கும் ஆற்றல் வாய்ந்த கருவிகளாய் அமைந்தன ; தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழ்க் கவிதைகளுக்கும் அடிப்படைக் கருவூல மாயும் நிலைத்தன எனலாம்.

*With Best Compliments From*

# BAY'S MEDICALS

***DISTRIBUTORS FOR :***

MADRAS STATE

M/s Associated Drug Co., (P.) Ltd.
M/s Citadel Fine Pharmaceuticals
M/s Dorphin Loboratories
M/s Mars & Sons

## For all your Requirements in Electrical Line

Accessories for wiring Purposes
Bulbs and Tubes
Cables and Winding Wires
Domestic and Industrial Appliances
Engineering Tools
Fans of all types
Gift Articles
Heating Appliances and
Imported and Indigenous goods

*Please Contact :*

# RM.S. & Company Private Ltd.,

***16, BROADWAY, MADRAS-1*** ***Phone : 22160.***

**Branches At Madurai and Vijayawada**

# அன்றும் இன்றும்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் (பாலகவி)
தேவகோட்டை

"சிவத்துக்கு மேலொரு தெய்வமில்லை" என்பதை நன்கு தெளிந்து, சைவ நெறியை உறுதியாகக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த நமது முன்னோர்களது பெருமை, அளவிட்டுரைக்க முடியாது. முடியுடை மன்னர்களாகிய மூவேந்தர்களது ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பல காலம் முனனும் சிலகாலம் பின்னும், அரசர்களுக்கு இணையான எல்லா வளங்களுமம அமைய வாழ்ந்திருந்த ஒரே மரபு, தனவணிக மரபுதான் என்று, உறுதியிட்டுரைக்கத் தக்க பலசான்றுகள் உள்ளன.

கடவுட் கொள்கையிலும், முறையான சமய வாழ்க்கையிலும் தளர்ச்சி இல்லாதவர்களாய், உலகியலில் அறநெறி வழுவாத உயர்ந்த ஒழுக்கமுடையவர்களாய், அந்நாளில் அவர்கள் சிறந்திருந்தனுலேயே, அரசரும போற்றி மதிக்கும அளவுக்கு, அவர்கள் புகழ் மேலோங்கியிருந்தது, காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த நமது முன்னோர்களை "நெடுநுகத்துப் பகல் போல, நடுவு நின்ற நன்னெஞ்சினோர்" என்றும் "வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவும் ஒப்ப நாடிக், கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாதவர்" என்றும் சங்க இலக்கியம் பாராட்டுகின்றது.

அந்த நாளில் வாழ்ந்த, அரசர் முதல் ஆண்டிவரையுள்ள அனைவரும் "நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் நகர வணிகரே" என்பதை நன்கு தெளிந்து, நம்மவரோடு கொண்டிருந்த தொடர்புகளும், அவற்றுல் அவர்கள் அடைந்த நலங்களும் பண்டை நூல்களிற் பல படக் கேட்கப்பெறுகின்றன. நம் முன்னோர்கள் தொன்று தொட்டுச் சிவாலய தரிசனம், பரிபாலனம், சிவபுண்ணியச் செயல், சிவதீட்சைப்பேறு ஆகியவற்றுல் சிறந்து விளங்கினுர்கள். இவ்வுண்மையை நகரததார் சரித்திரம், இளைசைப் புராணம் முதலிய பழைய நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

திருநீறு, உருத்திராக்கமாதிய சிவசின்னங்களை அன்புவைத்து அணிவதிலும், திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதுவதிலும், ஆன்மார்த்த சிவபூசையை முறைப்படி செய்வதிலும் இவர்களுக்கு நிகராக, அந்த நாளில் வேறு யாரும் இருந்ததில்லை என்று கூடச் சொல்லலாம். உயர்ந்த மரபினர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுவோர், "விபூதி, உருத்திராக்கதாரணமும் திருவைந்தெழுத்துச் செபமும் பெண்களில் சுமங்கலிகளுக்கு உரியனவல்ல ; அமங்கலிகளுக்கே உரியன" என்று கூறிச், சிவபெருமானைக் கணவனுகப் பெற்ற நித்திய சுமங்கலிகளாகப் பெண்களை வாழவிடாமல், அழிந்து போகின்ற ஆடவர்களைக் கணவர்களாகப் பெற்ற அநித்திய சுமங்கலிகளாக வாழ வைத்திருக்கின்ற நம் நாட்டில், அச் சிவசாதனங்களை அணிதலும் சிவதீட்சை பெற்று ஸ்ரீ பஞ்சாட்சர செபம், சிவபூசை ஆதியவற்றைச் செய்தலும் நமது பெண் மக்களுக்கும் உரியனவென்று கொண்டு, ஒழுகி வந்த நமது முன்னோர்களின் ஞானநூலறிவு, மிக மிகப் போற்றற்குரியதல்லவா ?

கோடி கோடியாகப் பொருளையீட்டி, அதன் நிலையாமையுணர்வு வந்ததும், அத்துணைப் பொருளையும் சூறை விட்டுவிட்டு, முற்றத்துறந்து பெருஞானியாக வாழ்ந்திருந்த பட்டினத்தடிகள் நமது மரபினரென்பதை அறியாதார் யார்? வருவாயில் பெரும்பகுதியை அறவழியில் செலவழித்து, இம்மைக்கு உரிய புகழையும் மறுமைக்கு உரிய புண்ணியத்தையும் தேடிக் கொண்டவர் நமது முன்னோர்.

உயிர்களை முன்னிறுத்திச் செய்வதாகிய பதிபுணணியம் சிறந்த தென்னும் பேருண்மையை உணர்ந்து ஒழுகியவர், நமது மரபினரே ஆயினும், "பதிபுண்ணியத்திற்கு அடிப்படை பசுபுண்ணியமே" என்பதையும் தெளிந்து, அதனைச் செய்வதிலும் அவர்கள் பின்வாங்கினுர்களில்லை.

எங்கள் நல்லாசிகள்!

தி

## அட்வான்ஸ் இன்ஷூரன்ஸ் கம்பனி லிட்.

ரிஜிஸ்டர்ட் தலைமை ஆபீஸ்:
**251, Dr. தாதாபாய் நௌரோஜ் ரோட்,**
*கோட்டை, பம்பாய்-1*

தென்னிந்திய ரீஜனல் ஆபீஸ்:
**297, தம்பு செட்டி தெரு,**
*சென்னை-1. (போன்: 23355)*

ரீஜனல் மானேஜர்: **திரு A. சொக்கலிங்கம்**

எல்லாவிதமான பொது இன்ஷூரன்ஸ்கள் ஏற்கப்படும்.

தென்னிந்தியாவின் மற்ற முக்கிய ஆபீஸ்கள்:

பெங்களூர், கோயமுத்தூர், விஜயவாடா முதலியன.

*With Best Compliments From*

Grams: "MOTORHOUSE" Phones: 29384 & 25586.

## NEW STAR ENGINEERING COMPANY

## "MOTOR HOUSE"

**28, Thambu Chetty Street,**
***Post Box No. 1606, MADRAS—1.***

*Authorised Dealers:* "SIEMENS" Motors and Switchgear.

*Specialists:* CONDENSERS (Capacitors) for single phase and 3 Phase Motors—Voltmeters and Ammeters, Tongtesters, Meggars, Portable instruments, centrifugal and Float Switches, Slide Rails etc.,

*Stockists:* G. E. C., A. E. I., CROMPTON, KIRLOSKAR, E. C. E., PILOT, SUGUNA, Etc., Electric Motors, MEM, MEI, LT/LK, KILBURN, GEC, ECE, CROMPTON, Etc., Starters and Switches, DPF, SUBAYAH, BESIHI, PILOT, Domestic and Agricultural Pumpsets, WORTHINGTON-SIMPSON Monobloc Pumpsets, CONTACTOR, MEM, Main Switches etc,

# வள்ளி மணாளனே!

**இராகம்: தோடி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

இன்னிசைத் தேன்தமிழ் எந்தனுக் கருள்வாய்!
பன்னிரு கையாவுன் பாதம் பணிந்து பாட (இன்)

**அநுபல்லவி**

கன்னித் தமிழில் இசை கருத்துடன் வரையவும்
பண்ணியல் இலக்கணம் பதங்கள் தவறாமலும் (இன்)

**சரணம்**

சிந்தை தனில்ஒன்றும் செய்கையில் மற்றொன்றும்
செய்து நான் வாழ்வினில் தீவினை புரியாமல்
கந்தாவுன் புகழ்பாடிக் காலமெல்லாங் களிக்க
வந்தருள் செய்குவாய் வள்ளி மணாளனே! (இன்)

—சங்கீத பூஷணம் S. M. இராமநாதன்

வரவின் அளவறிந்து செலவு செய்வதிலும், சேமித்து வைப்பதிலும் நமது முன்னோர்கள் பெருமித முடையவர்களாய் இருந்தார்கள். பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்வு எவ்வளவு குறையுடையதாயிருக்கிற தென்பதை நன்குணர்ந்து, "தனவணிகர்"களாக வாழ்ந்த பெருமை, நம்மவர்களைச் சார்ந்ததல்லவா?

இன்று வாழும் நமது மரபினரில், சைவ நெறியில் உறைத்து நிற்பவர் எத்துணை பேர்? சமய வாழ்க்கையில் கருத்துச் செலுத்துபவர் எத்துணையர்? நடுவுநின்ற நன்னெஞ்சினோர் எண்ணிக்கை எவ்வளவு? தம்மவற்றையும் பிறரவற்றையும் ஒப்ப நினைப்பவர் உளரா? நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் கூறத்தக்கவர் எங்கே உள்ளனர்? சிவதீட்சைப்பேறு பெற்றுச் சிவபுண்ணியம் செய்வார் எத்துணையர்? திருநீறு உருத்திராக்கதாரணம் ஸ்ரீ பஞ்சாட்சர செபம் சிவபூசை நம்மவரால் மதிக்கப் பெறுகின்றனவா? வாசனைப் பொடியையும் மற்ற ஆடம்பரப் பொருள்களையும் மதிக்கும் நமது பெண்கள், மஞ்சள் குங்குமம் திருநீறு ஆதியவற்றை மதிக்கிறார்களா? பசுபுண்ணியமாகிய பொன் விலங்கை மாட்டிக் கொள்ளும் விருப்பத்தையன்றிப், பதிபுண்ணியமாகிய விடுதலையைப் பெறும் விருப்பம், நமது செல்வர்களுக்கு இருக்கிறதா? நம்மவரில் வரவறிந்து செலவு செய்பவர் எத்துணை பேர்? என்ற வினாக்களுக்கு விடைகள்காணும் பொறுப்பை அன்பர்களுக்கே தந்து, இவ்வினாக்களிற் குறிப்பிட்டவற்றில் "அன்று போல் இன்று நாம் ஆகுவோமானால் பெருமையடையலாம்" என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

நலமே தழைக.

*For your requirements of*

Bright Steel
M. S. Rounds
Dalmia Cement
" Charminar " Asbestos Sheet

*Contact :*

**Steel And General Traders**

(Props : S. RM. M. CT. M. Firm)
19, Sembudoss Street,
MADRAS—1.

T. Phone : 21871 Cable : IRONDEAL.

*With the best compliments from :*

**Productivity Elements Private Ltd**

B-14 Ambattur Industrial Estate
MADRAS-58

*Phone : 60275* *Grams :* PROTEL, Ambattur

*Manufacturers of :*

* *Bench centres*
* *Machine tools*
* *Dial stands*
* *Comparator stands*

# அன்புள்ள ஆச்சிக்கு

ஆறு. அழகப்பன் எம். ஏ., எம். லிட்.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

உ
சிவமயம்

ஆறு. அ. அ. செ. ஆ.
அண்ணாமலை நகர் செட்டி நாடு

பராபவ ஞு தைமீ 15உ.

அன்புள்ள செட்டிநாட்டு ஆச்சிக்குத் தம்பி அழகப்பன் எழுதிக்கொண்டது. இப்பவும் உபய க்ஷேமம், அவடத்தில் எல்லோருடைய க்ஷேமத் திற்கும் எழுதவேண்டியது. நான் தங்களுக்கு நீண்ட நாட்களாகக் கடுதாசி எழுதவேண்டும் என்று பிரியப் பட்டேன், தோதில்லை. இனி யும் எழுதாமல் இருப்பது நல்லா இல்லை என்று எழுதினேன். இக்கடுதாசியில் எழுதியுள்ள சேதிகள் உங்களுக்குத் தெரியவேண்டும். ஆனால் நீங்கள் படிக்கவில்லை; ஆதலால் செட்டி நாட்டு "பொண்டுகள்" பெரிய படிப்பான எட்டாவது படித்த ஒரு பெண்ணைக் கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்கவேண்டியது. இதில் உள்ள விஷயங்கள் உங்களுக்கு மட்டும் எழுதிய தில்லை. ஆத்தாள், அயித்தை, ஆயா, அப்பத் தாள், அம்மாமுண்டி, அண்ணமுண்டி, கொழுந் தினமுண்டி முதலிய எல்லாச் செட்டிநாட்டுப் பொண்டுகளுக்கும் எழுதியது. அவர்களையும் கேக்கச் சொல்ல வேண்டியது. கல்யாணம், திருவிழா முதலியவைகளில் ஆச்சிமார்களைக் கண்டால் அடுத்த வீட்டு விஷயங்களை அதிக மாகப் பேசுகின்ற பேச்சுக்களோடு பேச்சாக இதனையும் காதில் போட்டு வைக்கவும். நானும் இதனை எழுதுவதற்கு முன்பு பலசெட்டியார்களை எல்லாம் கலந்து இப்படி ஒன்று எழுதப் போகி றேன் என்று கூறினேன். அவர்கள் எழுதவேண் டிய கருத்துக்களாகக் கூறியதையும் விடாமல் இதில் எழுதியிருக்கிறேன். பொதுவாக இக் கடு தாசி செட்டியார்களுடைய கருத்து என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்.

செட்டிநாட்டுப் பெண்டுகளின் வம்சாவளி யைப் பற்றி நான் எழுதியா உங்களுக்குத் தெரியவேண்டும்? கற்பரசி கண்ணகி, வாழ் வரசி ஆதிரை, பக்திச்செல்வி காரைக்கால் அம்மையார் வழியில் நீங்கள் வந்தவர்கள் என் பது அனைவரும் அறிந்ததே. நீங்கள் பாடி வரும் தாலாட்டுப் பாடல்களும், ஒப்பாரிப் பாடல்களும் உலகப்புகழ் பெற்றவை. கண வரின் நலத்தைவிட அதிகக் கவனம் கொண்டு நீங்கள் ஒரு நூலாம்படை கூட இல்லாமல் வீட் டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது கண்டு பிற இனத்தார்கள் மூக்கின்மேல் விரல் வைத்து இன்னும் அதிசயப் படுகிறார்கள். திருவள்ளுவர் எழுதிய விருந்தோம்பல் அதிகாரத்திற்கு எடுத் துக்காட்டாக விருந்தாளி நாளும் மகிழ விருந் தோம்பல் செய்கிறீர்கள். உங்களுடைய தெய்வ பக்தியைக் கண்டு இறைவனே ஆச்சரியப்படு கிறான்! நீங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் சிக்கனம் தேசியத்திற்கு ஒரு சேமிப்பாக இருந்து வருகிறது. நீங்களே மூடைந்து தடுக்கு களையும், ஓலைப் பெட்டிகளையும் இரட்டை வீட்டுக்குள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துப் பழுத்துப் போகாமல் சேலையைப் போட்டு மூடி வைக்கும் உங்களின் கலை கண்டு கண்டோர் வியக்கிறார்கள். நம்முடைய பொருள்களைப் பிறர் தவறாகப் பயன்படுத்தி விடக்கூடாது என்று நினைத்து உடைந்துபோகக் கூடிய கண்ணாடிச் சாமான்களில் கூடப் பேர் வெட்டிப் பொருள்களைப் பாதுகாக்கும் வழக்கம் ஆச்சிமார்களுக்கே உரியதல்லவா? இப்படி நான் எழுதிக்கொண்டே போகக்கூடிய பல சிறப் புக்கள் உங்களிடம் இருந்தாலும், உங்களிடம் குடிபுகுந்துள்ள சில "குத்தங் குறைகளை" நான் எடுத்துச் சொன்னால் கோவிச்சுக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். அப்படி உங்களிடம் சில "குத்தங் குறைகள்" இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். அவை தனிப்பட்ட ஒருவ னுடைய வளர்ச்சி, குடும்ப வளர்ச்சி, இன வளர்ச்சி ஆகியவற்றிற்கு முட்டுக்கட்டைகளாக இருப்பதால் இனியும் எடுத்துக் காட்டாமல் இருக்கக்கூடாது என்று நினைத்துத்தான் எழுத நேர்ந்தது. செட்டிநாட்டுப் பெண்கள் "சமத்தி கள்" என்று பெயர் பெற்றவர்கள். ஆதலால்

# The Indian Overseas Bank Ltd.

**(Central Office : 151, Mount Road, Madras-2.)**

*With Branches in India, Ceylon,
Hongkong, Malaysia, Singapore
and Thailand and with world wide
agency arrangements*

*THE INDIAN OVERSEAS BANK LIMITED*

*Offers You*
*A COMPREHENSIVE BANKING SERVICE*
*Please contact your nearest branch for full particulars regarding our*

* Recurring Deposits
* Gift Cheques
* Travellers' Cheques
* Personal Loans
* Minors' Savings

*CHAIRMAN :* **M. CT. Muthiah**

*GENERAL MANAGER :* **K M Nanjappa**

*With best Compliments :*

# Visco Timber Supplies

**Taracad-Palghat (Kerala State) Phone: 82**

# Visco Saw Mills

Kodai Road (R. S. P. O.) Madurai Dist.
Phone : 34

Major Suppliers of packing cases to
T. I. Cycles of India and other units
of Tube Investments of India Ltd.

இங்கே சொல்லப்படும் கருத்துக்களை அதிகமாக "பெரிசு" படுத்திச் சொல்லவேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

விசேட காலங்களில் உங்களிடம் தலைவிரித் தாடும், முறைதலைகள், செட்டியார்களுக்கு எவ் வளவு மலைப்பாக இருக்கிறது? அர்த்தமில்லா மல் செய்யும் முறைதலைகள் பணக்காரச் செட்டி யார்களுக்குக் கூடச் சலிப்பினை உண்டாக்கி விடுகின்றன. பெண்கள் முழுகாமல் நிற்பதற்கு முன்பே விளையாட்டுப் பொட்டி வேவு முறை தலைகளை எழுதி மொத்தமாக வாங்கிக்கொள்ளும் ஈவு இரக்கமற்ற முறைதலை வசூல் கொடுமை பழங்காலத்தில் வரி வசூலித்த ஒரு கொடிய அரசனை நினைவூட்டுகிறது. பழைய காலத்தில் வீட்டுக்காரர் தொலைக்கு (பர்மா, இலங்கை, மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு) கொண்டு விறகப் போனார். கொண்டு வந்த செல்வத்தை அன்றைக்குள்ள வாழ்க்கைத் தரத்திற்கு எப் படிச் செலவிடுவது என்று புரியாமல் ஒரு வீதியை வளைத்து வீடாகவும் கட்டியதோடு நில்லாமல் (அதுவும் கக்கூஸ் இல்லாத வீடாக வும்) ஏராளமான சடங்குகளையும், விழாக்களையும் நடத்தினார்கள். இப்படி வாண வேடிக்கை விட்டும் கூட கைப்பெட்டியில் பணம் இருந்தது. ஆனால் இன்று நம்முடைய பிள்ளைகள் மாதச் சம்பளக்காரர்களாக ஏங்கிக்கொண்டிருக்கிற காலமாகப் போய்விட்டது. பொருளாதாரத்தில் இத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறபொழுது முறைதலைகளும் வீழ்ச்சியடைந்தால் தானே முறையானதாக இருக்கும். கரும்பு தின்னக் கூலி என்பது போலத் திருமணம் விசாரிக்க வந்த உறவினர்களுக்குக் கொடுக்கவேண்டிய இந்த, "இனும் முறை தலைகளை" நோட்டில் எழுதிவைத்துக் கொண்டு நடத்தும் சந்தனக் கடைப் பேரத்தை இனியாவது நீங்கள் விட் டொழிப்பீர்களா? ஒரு செட்டியார் வீட்டில் கொடுக்கும் முறைதலைகளைக் கூட்டிப்பார்க்கும் பொழுது அத்தொகையில் வேறொரு சாதிக் காரன் ஒரு திருமணம் நடத்திக் கொண்டிருக்கி றான் என்பதனை வெளியுலகத் தொடர்பு இல் லாத நீங்கள் அறிய ஞாயமில்லை. நவராத்திரிக் கொலு வேடிக்கை பார்க்கப் போவது போல நீங்களும் பல சாதிக்காரர் திருமணத்தை வேடிக்கை பார்க்கச் செல்லலாமே?

அடுத்து நகரத்தார் 'பொண்டுகளை' நான் நினைக்கையில பலகாரமும் சாப்பாடும் தான் நினைவுக்கு வருகிறது. நீங்கள் சுட்டுக் குவிக் கும் வெள்ளப் பணியாரமும், பலநாள் நினைவி லிருக்கும் பால் பணியாரமும், கல்கண்டு வடை யும், பதினாறு சுற்று முறுக்கும், தேன்குழலும் தங்கமடல் பரிசு பெறக்கூடிய தரமான பல காரங்கள். எட்டு வீட்டுக்கு நெய் மணக்கப் பலகாரங்கள் செய்யும் உங்கள் சிறப்பினை எடுத் துரைக்க நாளும் போதாது, நாவும் போதாது.

மனிதன் வாய்க்கு ருசியாகச் சாப்பிட வேண்டியதுதான்; ஆனால் தன் நேரத்தையும் பொருள்களையும் பலகாரங்கள் செய்வதிலேயே செலவிடுவது எந்த விதத்திலும் சரியில்லை. விருந்துக் காலத்திலும் விசேஷ நாட்களிலும் நீங்கள் நெற்றிவேர்வை நிலத்தில் விழ இலை யில் போட்ட வகைகளும் பிற பலகாரங்களும் வெளியே வீணாக எச்சிலையில் குவிந்து கிடப் பதை ஒருமுறை பாருங்கள். வசதி இருக் கிறதோ இல்லையோ அடுத்த வீட்டில் செய்தார்கள் என்பதற்காக அதே பலகாரங் களைச் செய்து குடும்பத்தைக் கடன்காரக் குடும்பமாக்குவதில் யாருக்கு என்ன லாபம்.

நான் சில திருமண வீடுகளில் பார்த்திருக்கி றேன். வீட்டிற்குப் பெண் அழைத்து வரும் மகனையும் மணப் பெண்ணையும் ஆலத்தி சுற்றி வரவேற்க ஆள் இல்லாமல் உக்கிராணத்தில் 'கூடி' நின்று பலகார மகாத்மியங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். சில ஊர்களில் இத்தனை பலகாரங்கள்தான் செய்ய வேண்டும் என்று வைத்த "ஊர்க்கட்டுகளைக்" கூட உடைத்து எறிந்து விட்டீர்களே! இனியா வது; பசியடங்கத்தான சாப்பிடுகிறோம் என்ற வாழ்க்கை உண்மையை உணர்ந்து பலகாரங் களின் எண்ணிக்கைகளைக் குறைப்பீர்களா?

அடுத்து இதனோடு ஒன்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும். இவ்வளவு பலகாரத்தை யும் நீங்களா செய்கிறீர்கள். ஒரு சிறிய திரு மணத்திற்கு எத்தனை சமையற்காரச் செட்டுகளை வரவழைக்கிறீர்கள். தாய் பிள்ளைகளைச் சேர்ந்த பொண்டுகள் இருந்தாலும் பங்காளி வீட்டுப் பொண்டுகள் இருந்தாலும் யாராவது அடுப்படிப் பக்கம் போவதுண்டா? சூரக்குடி சமையற்காரச் செட்டு நன்றாக சமைப்பான், சொக்கனேந்தல் சமயற்காரச் செட்டு நன்றாகச் சமைப்பான் என்று உட்கார்ந்துகொண்டு வக்கணையல்லவா பேசுகின்றீர்கள். அடுப்பில் தீ கொஞ்சம் மட் டாக எரிகிறது என்றால் அரைத் தகரம் எண்ணெ யைத் தூக்கி ஊத்தும் சமையற்காரர்கள் அடுப் பில் வீணாக்கும் உங்களுடைய பொருள்களைக் கணக்கிட்டுப் பார்த்ததுண்டா? வேலையாட்கள் இல்லாமல் வாழமுடியாது என்ற ஒரு மரபினையே செட்டியார் வீட்டுக் குடும்பத்தில் நீங்கள் உண் டாக்கிவிட்டீர்கள். மலையாவிற்குப் போனால் தொழில்பழக்கத்திற்கு மகனைக் கூட அழைத்துப் போவது போல, செட்டியார் கூடவே பூப்போல இட்லி அவிக்க ஒரு சமையற்காரனையும் அழைத் துப் போகும்படி குடும்பத்தை அமைத்து விட் டீர்கள். எனக்கு தெரிந்த ஒரு செட்டியார் குடும்பத்தில் உறுப்பினர்கள் ஐந்து பேர்கள். அவர்கள் வீட்டில் இருக்கும் வேலையாட்கள் ஏழு பேர்கள். இது நியாயமா? வேலையாட்கள் இல்லாமல் நாட்டில் எத்தனை குடும்பங்கள் இனி மையாகக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்

# A. K. RAGHAVAN NAIR

## Timber Merchant and Contractor

**MANARI ROAD, CALICUT-3**
**(KERALA STATE)**
**PHONE : 2653**

**Dealer in all kinds of timber**

and
Manufacturer and Supplier of quality Packing cases Planks, Battens etc.,
for all types of packing requirements.

*Depot* : **Kallai**
**Kozhikode-3**

*Branch* : **Palghat Road,**
**Pollachi**
Madras State.

---

# தி பாங்க் ஆப் காரைக்குடி லிமிடெட்,

பதிவான அலுவலகம் :
கல்லுக்கட்டி வடக்கு,
காரைக்குடி—1.

ஸ்தாபிதம் :
*1936*

தலைமை அலுவலகம் :
2/39, கிடங்குத் தெரு,
மதராஸ்—1.

கிளைகள் : மதராஸ், மதுரை, திருச்சிராப்பள்ளி,
காரைக்குடி, தேவகோட்டை, புதுக்கோட்டை,
கரூர், ஆத்தூர் (சேலம்).

சேர்மன் : ஸ்ரீ தி. மாணிக்கவாசகம், B. A.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் **8 %** வரை கவர்ச்சிகரமான வட்டி தரப்படும்.

முழுவிபரங்கள் நேரிலோ, தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

**RM. V. SETTURAMAN,**
B. Com., C. A. I. I. B.,
உதவி காரியதரிசி.

**D. RAMACHANDRAN,**
B. A., (Hons.),
காரியதரிசி.

கின்றனர். வேலைக்காரர்களுடைய தயவு நமக்கு வேண்டும் என்ற மரபினை உடைத்தெறிந்து நீங்களே வேலைகளை மேற்கொள்ள அக்காட்சியைக் கணவன் கண்டு மகிழும் "மாபெரும் புரட்சியினை" எப்பொழுது உண்டாக்கப் போகிறீர்கள். பிற சாதிக்காரர்களுடன் போய்ப் பழகிப் பார்ப்பீர்களேயானால் வேலையாட்கள் வேண்டியதில்லை என்ற உண்மை நிலைக்கு வருவீர்கள். நீங்கள்தான பிறரோடு பழகுவதும் இல்லையே, அட கடவுளே !

ஆமாம் நீங்கள் எந்த ஊருக்குப் போனாலும் இவ்வளவு சாமான்கள் ஏன் வாங்கிச் சேர்க்கிறீர்கள். இந்தக் கெட்ட பழக்கம் பணமுடையான இக்காலத்தில் கூட இன்னும் போகவில்லையே. ஒரு செட்டியார் வீட்டு ஆச்சி இராமேசுவரம் போய்விட்டு, மானாமதுரையில் பானை சட்டி வாங்கிக்கொண்டு செட்டிநாடு வந்து சேருவதற்குள் பட்டபாடு அடடா எப்படி எழுதுவேன். தான் வாங்கி வந்த சட்டி பானை உடைந்து போய்விடும் என்று ஓடுகின்ற இரயிலை "பட்டுக்கடப்பான், பாவி பரப்பான் வேகமாக ஓட்டுறானே, சட்டிப்பானை உடைஞ்சிடுமே" என்று சகஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டு வந்தார்கள். கல்கத்தாவுக்குப் போனால் வாளி, காசிக்குப் போனால் பட்டு, மலேயாவுக்குப் போனால் மங்குச் சமான் என்று ஊருக்கு ஊர் சிறப்புப் பெற்ற சாமான்களை வாங்கிக்கொண்டு வந்து தூசி தட்டி அடுக்கி வைத்ததைத் தவிர என்ன பயன் கண்டோம். சேர்ந்த சாமான்களை மகளுக்கு வைக்க, மகள் அவள் மகளுக்கு வைக்க இப்படி அவைகள் கண்காட்சிப் பொருளாக இருந்ததைத் தவிர வேறு என்ன வகையில் பயன்பட்டன ? பணம் மிகுந்த காலத்தில் இப்படிச் செய்தோம், இந்தக் காலத்திலும் அந்தப் பழக்கம் இருக்கலாமா ? இதே போல நகைநட்டுகள், செய்தும், கண்டாங்கிகள் வாங்கிக் கட்டாமலே அடுக்கியும் வைக்கும் வழக்கத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விடச் செட்டிநாட்டு ஆச்சிமார்களிடம் உள்ள உறவு முறைகளை நான் கட்டாயம் குறிப்பிடாமல் இருந்தால் பெரும் தவறினைச் செய்தவன் ஆவேன். மாதவியை விடக் கண்ணகியிடம் நல்ல அழகு இருந்தது. இருப்பினும் கோவலனுடன் சிரித்து மகிழும் வாழ்க்கைக் கலையை அவள் கற்றுக்கொள்ளவில்லையே ! நீங்கள் கணவனுடன் மனமகிழ்ச்சியாக நேரத்தைச் செலவழிப்பதனை விடச் சேர்த்து வைத்த சாமான்களில் படிந்திருக்கும் தூசியினைத் தட்டிச் சுத்தப் படுத்துவதற்கே உங்களின் பொன்னான நேரம் சரியாகப் போகிறது. கணவனும் மனைவியும் இரண்டு உடல் ஓருயிர் என்று இலக்கியங்களில் படித்ததெல்லாம் ஏட்டுச் சுரைக்காய் போலத் தெரிகிறது. கணவனைப் பிரித்துப் பேசும் பழக்கம் உங்களிடம் தலைவிரித்து ஆடுகிறது. சிட்டி வைத்து விளையாடும் குழந்தைகள் "எம்பிட்டு" "ஓம்பிட்டு" "என்று சொல்லிக்கொள்வது போல "என் வீட்டுப் பணம்" "ஒன் வீட்டுப் பணம்" என்றல்லவா வாயைத் திறந்தால் வார்த்தைகள் வெளிவருகின்றன. கணவனோடு மட்டும் உங்களுக்கு இவ்வுறவுமுறை இருப்பதில்லை. "ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும்" பெறுவதால் கூட உங்களது அன்பு ஆசை எல்லாம் மகள் மேல்தான் இருப்பதாக மனம் நொந்து போன பல பையன்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தன் மகன் கொலைகாரனாக இருந்தால் கூடத் தாய்மையின் அன்பு சிறிதும் மாறுபடாது என்று தாய்மைக்கு உலகத்தில் சிறப்புச் சொல்கிறார்கள். பெற்ற மகனிடம் தன் தாய் மகளுக்கு மட்டும் தாயாகக் காணப்படுகிறாள் என்ற கவலையை இனியாவது போக்கலாமா ? வளர்ந்த குழந்தையிடம்தான் இந்த உறவு முறை உண்டு என்று கூற முடியாது. பெற்ற குழந்தைகளிடம் கூடச் சில நேரங்களில் குழந்தை நலம் பேணுதிருத்தல் பலரிடம் குடிபுகுந்திருக்கிறது. சினிமா நட்சத்திரங்கள்தான் நேரமில்லாததால் ஆயாக்களை வைத்துக் குழந்தைச் செல்வங்களை அலட்சியப்படுத்தி விடுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். நாம் அப்படியல்ல, மேலும் சேர்ந்து வாழும் கூட்டு வாழ்க்கையில் அடுத்தவருக்கும் மனம் விட்டுக் கொடுக்கக் கூடிய விசால மனப்போக்கு உங்களிடம் இல்லாததையும் இங்கே குறிப்பிடாமல் இருக்கக் கூடாது. சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் ஒரு பெரிய வீட்டில் பல குடும்பங்கள் வாழக்கூடிய சூழ்நிலை இன்றைய உலகில் ஏற்பட்டுவிட்டது. நாளும் பொழுதும் நல்லதாகக் கழிய வேண்டும் என்றால் விழித்து எழுந்தவுடன் அடுத்தவரோடு முட்டிக்கொண்டால் எப்படிக் கழியும்? வாழ்க்கையிலே அமைதி தானே மிகப் பெரிய பேறின்பம். செட்டிநாட்டில் ஒரு வளவுக்குள் இருக்கும் பல குடும்பத்தார்களைப் பற்றி நான் எழுதியா தெரிய வேண்டும். பொம்பளைகள் சண்டையால் ஆம்பிளைகளும் அந்த வளவிற்குள் உள்ள ஆம்பிளைகளோடு பேசாத உண்ணாவிரதத்தைச் செட்டியார்கள் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டியதிருக்கிறது. மாமியாருடன்தான் மனக்கசப்பு என்பதில்லை, உங்களுக்கு மற்றவர்களுடனும் அப்படித்தான். ஒரு வளவுக்குள் இருக்கும் ஆச்சியை அவர்கள் வீட்டில் இருக்கிறார்களா என்று நான் பல வீடுகளில் விசாரித்த பொழுது அந்த வீட்டில் இருக்கும் மற்றொரு ஆச்சி முகத்தைத் திருப்பிக் கொண்டு "எங்களுக்குத் தெரியாது, அங்கிட்டுப் போய்க் கேளுங்கள்" என்று முகத்திலடித்தாற் போலப் பேசியதை நான் எத்தனையோ வீடுகளில் கேட்டிருக்கிறேன்.

*With the best Compliments from :*

**RAYON TRADERS PRIVATE LTD**

*Stockists and Selling Agents*

*for*

**The Travancore Rayons Limited**

**61, Sembudoss Street, Madras—1**

*Branches at :*

**Salem, Madurai & Coimbatore**

# வள்ளுவர் வழி

எடுப்பு

வள்ளுவர் சொன்ன வழி நடப்பீர் !—உலகில்
உள்ளுவ தெல்லாம் உடன் பெறுவீர் !—தமிழ்த்திரு
வள்ளுவர்

தொடுப்பு

அகர முதலஎழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகென்று பகர்திரு
வள்ளுவர்

முடிப்பு

அறம்பொருள் இன்பநல் வீடும் அறிந்திட
அவனியில் வாழ்உயிர் அனைத்தும் மகிழ்ந்திட
திறம்மிகு செந்தமிழ் சிறந்து விளங்கிட
திருக்குறள் என்ற பொய் யாமொழி உரைதிரு
வள்ளுவர்

—திரு. ம. வெ. நாராயணன், உலகன்பட்டி.

இவ்வாறு நான் எத்தனையோ எழுதிக் கொண்டே போகலாம். கடுதாசியின் நோக்கம் உங்களிடம் மேலே குறிப்பிட்டவைகள் மனமாற்றம் அல்லது மனப்புரட்சியின் மூலம் சீர்திருத்தம் அடையவேண்டும் என்பதே ஆகும். அதனல் ஒரு சில எழுதினேன். காலத்திற்குத் தக்க சில மாற்றங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். உதாரணமாக நமக்குத் தடுமன் பிடித்த நேரத்தில் வெந்நீரை நாம் பயன் படுத்தவில்லையா ? தடுமன் பிடித்த பிறகும் வெந்நீரைப் பயன்படுத்த மாட்டேன் பச்சைத் தண்ணீரையே பயன்படுத்துவேன் என்ருல் தடுமன் சளியாகப் புரையோடும்; சளி நெஞ்சை அரிக்கும்; மூச்சு இழுக்கும் (ஆஸ்த்மா) பின் வாழ்க்கை முழுவதும் துன்பம் ; துன்பத்தை அனுபவிப்பதற்காகப் பிறந்தோமா அல்லது இன்பத்தை அனுபவிப்பதற்காகப் பிறந்தோமா? உங்கள் வாழ்வில் விரலுக்குத் தகுந்த வீக்கம் இல்லை என்ருல் கணவன் இலஞ்சம் வாங்கா விட்டாலும் கடனாளியாக வாழ நேரிடும். கடனோடு நானுவிதக் கவலைகள் படையெடுக்கும். ஒரு பெண்ணுக்கு வாழ்வரசியாக வாழ்க்கை முடிவது உயர்ந்த வாழ்வு என்பார்கள். ஜப்பானில் பெண்கள். தங்கள் கூந்தலை அவர்கள் நாட்டிற்கேற்பக் கிராப்பாக வெட்டிக்கொள்ள மறுத்ததால் புரட்சி வீரர்கள் தோன்ற வேண்டிய ஒரு கட்டம் உருவாகியது. இரண்டு கைகளையும் தட்டினல்தான் ஓசையெழும் ; செட்டியார்கள் மட்டும் சீர்திருந்திப் பயன் என்ன ? ஆச்சிமாராகிய உங்கள் மனமும் அதில் சேர்ந்து ஈருயிர் மனமும் ஓருயிர் மனமாகி மலர்ந்தால் அம்மணத்திற்கு மல்லிகைப் பூவின் மணம் கூட ஈடாகாதே.

ஆதலால் நான் ஆரம்பத்தில் எழுதியது போல இதில் கூறப் பட்ட விஷயங்கள் பல நகரத்தாருடைய கருத்தாகக் கொள்ளவேண்டும். பலமுறை படிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும். ஓய்வு என்பதை அறியாத உங்களை ''ஒறண்டை'' இழுப்பதற்காக இதனை எழுதினேன் என்று நினைக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். பிற சமூகத்தார்கள் எல்லாம் சீர்திருந்தி வரும் இந்த நேரத்தில் நம் சமூகமும் சீர்திருத்த வேண்டும் என்று ''மெனக்கெட்டு'' எழுதினேன் என்றே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

வேணும்
தெண்டாயுதபாணி துணை

*With the best Compliments of*

**SPT**

*TELEGRAMS :* PALTRANS

*TELEPHONE :* 20191 TO 3

# SRI PALANIAPPA TRANSPORTS

30, Basin Water Works Street, Madras-1.

*SERVING THE STATES OF*

ANDHRA — GUJARAT — MAHARASHTRA

MYSORE — TAMILNAD — KERALA

# அன்றும் இன்றும்

சே. கனகசபை, பி. ஏ.

1. தென்னாட்டில் மிகச்சிறிய தொகையென் றாலும்
செல்வாக்கில் மிகப்பெரிய சாதி யாகி
பொன்னாட்டார் என்றெவரும் போற்றும் வண்ணம்
புகழ்கொண்டு விளங்கிடுவார் செட்டி நாட்டார்.
எந்நாட்டின் அறிஞர்களும் நேரு போன்ற
இணையில்லாத் தலைவர்களும் நகரத் தாரை
' மன்னாதி மன்னரிவர் வாணி பத்து
வளத்துறைக்கே ' எனஏத்தி வணங்கு வாரால் !

2. ' கடலோடித் திரவியமே தேடீர் !' என்ற
காலத்து முதுமொழியைக் கருத்திற் போற்றி
இடராழி தனைத்தாண்டி மலாயா பர்மா
ஈழம்தாய் லாந்தென்னும் நாட்டி லெல்லாம்
திடமான மனத்தோடு நன்னெ றிக்கோர்
சிகரமெனும் சிறப்பேந்திச் செட்டி மாந்தர்
தடம்மாறாச் சிந்தையராய் வணிகம் செய்து
தமக்குநிகர் இலாததன வணிக ரானார்!

3. பொருள்வழங்கும் நாடுகளை மறந்தி டாது
புகழ்மிக்க அறச்செயல்கள் ஆங்கு நாட்டி
அருள் விளங்கு தாய்நாட்டுப் பக்தி யாலே
அறச்சாலை ஆலயங்கள் யாண்டும் கூட்டி
பெருகிவரும் நதியனைய நிதியம் தன்னைப்
பேரறத்தின் பாற்கொண்ட காத லாலே
உரிமையுடன் வாரியுமே ஈந்து நாட்டார்
உள்ளமெலாம் இடம்பெற்றார் நகரத் தாரே !

*With the best compliments from :*

*Grams* : **Dishackles** *Phone* : **22517**

# Rahamath Brothers Private Limited

*REGD. OFFICE :*
**G. S. T. Road,**
**Guduvancheri.**

*SALES OFFICE :*
**48, Sembudoss Street,**
**Madras-1.**

SPECIALISTS IN

## R. S. Joists, M. S. Rounds, Angles, Flats and Plates of all Sizes

BIGGEST STOCKISTS OF

Lead Seals, Sealing Wire, Wire Rope Fittings, Clamps, Shackles, Turnbuckles, Straining Screws and Thimbles. Manilla Rope Pulley Blocks and Wire Rope Pulley Blocks etc.

**ENQUIRIES AND ORDERS ARE SOLICITED.**

# New Medical Shop in Madurai

***While You Visit Madurai Next Time***

PLEASE CALL AT OUR

## SP. M. MEDICALS

***(Dispensing Chemists & Druggists)***

15, 16 & 17, KALPALAM ROAD
(North Veli Street)
YANIKKAL :-: MADURAI

All medicines and medical goods
are available at minimum prices
Doctors' Prescriptions are dispensed
PHONE No. 3311 & 3312

4. அளப்பரிய செல்வத்தின் பெருக்கம் கண்டு
அல்லலுறும் மனிதரென்பார் யாரு மில்லா
வளப்பமிகு சாதிஎன வியந்து போற்ற
மாளிகையோ எனும் வளவு மனைகள் கட்டி
விளக்கமுறு ஓவியம்போல் அழகு தோன்ற
மேவுநல்ல மனைமக்கட் செல்வத் தோடு
துளக்கமின்றி வாழ்ந்தவர்தம் மதிநுட் பத்தை
துஞ்சாத பேருழைப்பைச் சொல்லப் போமோ?

5. ஈட்டுகின்ற நிதியமெல்லாம் மைந்தர் வாழ்வின்
எழிலுக்காம் என்கின்ற எண்ணத் தாலே
கூட்டுகின்ற திருமணத்தில் செல்வ மெல்லாம்
கொள்ளை கொள்ளை எனும்வண்ணம் செலவு செய்வார்
வாட்டமிலாப் பெரு வாழ்வில் வளர்ந்து விட்ட
வரலாற்று நாயகர்தம் வாழ்வில் இன்று
வாட்ட மெனும் நோய்பற்றிக் கொள்ளப் பல்லோர்
வாழ்கின்றோம் எனும்நிலைக்கே வந்து விட்டார்!

6. வாணிபத்து நெறிபற்றி வளங்கொ ழித்தோர்
வாழ்வுநிலைத் திசைமாறி வயிற்றுப் பாட்டுக்
கோணல்நிலை நெறிபற்றிக் குறைகொண் டோராய்க்
குடும்பத்தைக் காப்பாற்றும் வழியைத் தேடிக்
காணற்கே அலைகின்றார்—சிங்க வாழ்வைக்
காணோம்முன் பெருமிதத்து மிடுக்கும் காணோம்!
மாணிருக்கும் நகரத்தார் குலப் பிறப்பே
மணிவிளக்கே பேருறக்கம் கொள்ளலாமோ?

7. இருக்கின்ற பெரியீரே! துடிதுடிக்கும்
இளஞ்செட்டி நாட்டாரே! தொன்று தொட்டுச்
சிரிக்கின்ற முகம்காட்டிச் செழித்த மக்கள்
செந்தமிழைச் சைவத்தை வளர்த்த மக்கள்
தரைக்குள்ளே நிலைதளர்ந்து போனார் என்ற
துணற்சேதி செவிவிழுமுன் தடுத்துக் காத்து
வரைக்குள்ளே இமயமெனும் உயர்வை நல்கி
வரலாற்றுப் பழம்பெருமை மீட்டுத் தாரீர்!

# நா. சுப. கார்ப்பரேஷன்

29, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2
தொலைபேசி எண் : 2035

4, மண்டயன் ஆசாரி சந்து
மதுரை—1.
தொலைபேசி எண் : 5950

**தங்க நகைகள் வெள்ளிப்பாத்திரங்களின் பேரில்**
**கடன் கொடுக்கப்பெறும்**

பூரண உரிமையாளர் :

**சி நெ. வீர. நா. சுப்பிரமணியன் செட்டியார்**

**தொலைபேசி எண் : 45** **கண்டனூர்**

*With Best Compliments From*

# BIMETAL BEARINGS LTD.

*(Manufacturers of CLEVITE thinwall engine bearings, bushings and thrust washers)*

**Sembiam** **Madras-11**

# நகரத்தார் சங்கம், சேலம்

தொழில், வாணிபம்—கல்வி கருதி நம் குடிப் பெருமக்கள் நிறைந்த அளவில் சேலம் மாநகரிலும் அதன் சூழலிலும் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். நாளையும் வருவார்கள். எனவே சேலம் மாநகர நகரத்தார் பெரு மக்களிடையே நல்ல தொடர்பை சகோதர எண்ணத்துடன் ஏற்படுத்தி வளர்த்து, முன் னேற்றப் பாதையில் செல்ல நகரத்தார் பொதுமக்களுக்கு என ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்ற பேரவா சேலம் நகரத்தார் பெரு மக்களிடையே எழுந்தது. அந்த எண் ணத்தைச் செயலாக்கும் முதற்படியாக 19—8—1965 அன்று திரு. PL.L. பழனி யப்பன் அவர்கள் சேலம்—7. உடையப்ப செட்டியார் காலனியிலுள்ள செண்பகவல்லி நர்சரிப் பள்ளியில் சேலம் நகரத்தார் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள்.

சேலம் வாழ் நகரத்தார் பெருமக்களில் 107 பேர் வந்திருந்த அக் கூட்டத்திற்கு தொழிலதிபரான திரு. M. S. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய அமைப்பாளர் திரு. PL.L. பழனி யப்பன் அவர்கள் சங்கம் நிறுவ வேண்டி யதன் அவசியத்தையும், ஆற்றவிருக்கும் பெரும் பணிகளையும் தெள்ளத் தெளிய விளக்கிக் கூறி சேலம் அதன் சுற்று வட்டா ரங்களில் வாழும் நம் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் சிறப்பாக பெண்களும் சங்கத்தின் அங்கத்தினராக வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்கொப்ப அவண் கூடி யிருந்த அனைவரும் சங்கம் அமைப்பதென ஏகமனதாக முடிவு செய்தனர்.

சங்கத்தின் முதல் செயல் குழு அந்தக் கூட்டத்திலேயே தேர்ந்தெடுக்கப்பெற்றது. அதன்படி திரு. M. S உடையப்ப செட்டி யார் தலைவராகவும், திரு. M S. சொக்கலிங் கம் செட்டியாரும் திரு. PL. P. CT. சிதம்பரம் செட்டியாரும் துணைத் தலைவர்களாயும் திரு. PL. L. பழனியப்பனும் திரு. C. வள்ளியப்பா வும் செயலாளர்களாகவும் திரு. PL. அண்ணா மலை செட்டியார் பொருளாளராகவும் மற்றும் பதின்மர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் கௌரவக் கணக்கு ஆய்வாளராக இருக்கும் படி திரு. ST. அண்ணாமலை செட்டியாரை வேண்ட அவர்களும் மனமுவந்து இசைவு தந் தார்கள்.

முதல் ஆண்டு இறுதியில் சேலம் நகரத் தார் சங்கத்தின் உறுப்பினர்கள் தொகை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| ஆதரவாளர் | ரூ. | 1001 | 2 |
| வாழ்நாள் உறுப்பினர் | | | |
| ஆண்கள் | ரூ. | 101 | 27 |
| பெண்கள் | ரூ. | 101 | 4 |
| ஆண்டு உறுப்பினர் | | | |
| ஆண்கள் | ரூ. | 4 | 122 |
| பெண்கள் | ரூ. | 2 | 39 |
| மொத்தம் | | | 204. |

பிரவேசக் கட்டணம் (வாழ்நாள் உறுப் பினர் ஆண்டு உறுப்பினர் இரு பிரிவினருக் கும்.)

ஆண்களுக்கு ரூ. 2 பெண்களுக்கு ரூ. 1.

சேலம் நகரில் தற்காலிகமாக சங்கத்தின் பதிவு அலுவலகத்தை இராமலிங்கம் பவர் பிரஸ் இருந்துவரும் கட்டிடத்தின் ஒரு பகுதி யில் அமைத்துக் கொண்டுள்ளோம்.

சேலம் நகரத்தார் சங்கத்திற்கெனத் தனியாக ஒரு அலுவலகமும், நகரத்தில் மேலேயிருக்கும் தனிப்பட்டவர்கள் உண வுக்கும, தங்குவதற்காகவும் சேலம நகருக்கு வந்து செல்பவர்கள் சிரமமின்றி, அதே சமயம் குறைந்த செலவில் தங்கிச் செல்லு வதற்கும் நகர விடுதி ஒன்றும் நகரின் மத்தி யில் அமைக்க முயற்சி செய்து வருகிறோம்.

19—8—1965 அன்று நடைபெற்ற முதற் கூட்டத்திலேயே, சேலம் நகரில் வாழும் பெரு மக்களின் நலனைக் கருதி சேலத் தில இருந்து தேவகோட்டைக்குப் போக வர

# SOUTH INDIA CORPORATION PRIVATE LIMITED

## Engineers and Contractors

*Cochin* :: *Coimbatore* :: *Madras*

Design and Construction of Factories—R. C. C. Reservoirs R. C. C. Chimneys, Cement Silos, Overhead Tanks Etc.

Structural Fabrication and Erections of All types of Factories—Mills and Erection of Plant and Machinery

SANITARY AND WATER SUPPLY INSTALLATIONS

**AND**

Dealers in Hardware and Sanitary Clearing, Shipping and Transporting Agents.

**BRANCHES ALL OVER SOUTH**

துரிதப் பேருந்து (Express Bus) ஒன்று விட ஏற்பாடு செய்யவேண்டி சேலம் போக்கு வரத்து அதிகாரிக்கு Regional Transport officerக்கும் பிறகு அரசாங்கத்திற்கும் வேண்டுகோள் அனுப்பப்பெற்றது. தற் பொழுது 1—3—1967 முதல் கிருஷ்ணகிரியி லிருந்து ராமநாதபுரம் செல்லும் அரசாங்க துரிதப் பேருந்து சேலம் வழியாகச் செல் கிறது என்பதை பெரு மகிழ்வுடன் தெரிவித் துக் கொள்ளுகிறோம்.

சென்னையில் நிறுவப்பெற்றுள்ள நகரத் தார் ஐக்கிய சங்கத்தில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, நகரத்தார் சங்கங் களுடன் நமது சங்கமும் அங்கம் வகிக்கின் றது என்பதைக் கூற மிகவும் மகிழ்ச்சியடை கின்றோம். ஐக்கிய சங்கத்தின் கூட்டங்கள் அனைத்திற்கும் நமது சங்கத்தின் பிரதிநிதிகள் தவறாது சென்று கலந்து கொண்டுள்ளார்கள்.

19—8—1965 அன்று நடைபெற்ற சங்க முதற் கூட்டத்திலேயே செட்டிநாட்டிலுள்ள 96 ஊர்களிலும் வாழும் நகரத்தார் குடிப் பெரு மக்களின் கோவில், பிரிவு, கல்வி யோக் கியதாம்சங்கள் உத்தியோகம், தொழில், ஆற்றிய பொதுத் தொண்டுகள் நிறுவிய அற நிலையங்கள் போன்ற புள்ளி விவரங்கள் சேகரிக்க நகரத்தார் ஐக்கிய சங்கத்தைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பெற்றது.

இது குறித்து அவர்கட்கு கடிதம் எழுதப் பெற்றதுடன் ஐக்கிய சங்கக் கூட்டங்களுக்கு சென்று வந்த சங்கத்தின் செயலாளர்கள் இதன் அவசியத்தை மிக வலியுறுத்திக் கூறி னார்கள். ஐக்கிய சங்கத்தாரும் நம் சங்கம் மற்றும் இதர சங்கங்களின் இந்தக் கோரிக் கையை ஆய்ந்துணர்ந்து காரைக்குடியில் 29—8—1966 ம் நாள் கூடிய கூட்டத்தில் புள்ளி விபரங்கள் சேகரிக்க முடிவு செய்து அதற்கென ஒரு குழு அமைக்கப்பெற்றது. அக் குழு மேற்கொண்ட சீரிய பணி வெற்றி கரமாக முடிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசினர் மாவட்டம் தோறும் மாதர் நல இலாகாக்களை அமைத்துள்ளனர். சேலம் மாவட்டத்தில், சேலம் நகரில் சாரதா பாலமந்திரில் மேற்படி மாதர் நல இலாகா அமைந்துள்ளது. இங்கு ஆதரவற்ற, மண மாகாத பெண்கள், மணமாகி கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கைம்பெண்கள், உடல் ஊனமான பெண்கள் போன்றவர் களை 30 வயது வரை சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.) வரை கல்வியளித்து தையல் போன்ற கைத்தொழில்களையும் சொல்லித் தருகிறார்கள். இங்கு பயிற்சி பெறுவர்களுக்கு ஆசிரியைப் பயிற்சி, நர்சிங், கிராம சேவிகா முதலியனவும் அளித்து அவற்றிற்குரிய தேர்வுகளும் எழுத வசதி செய்து கொடுக் கிறார்கள், தன் கையே தனக்கு உதவி என்ற முதுமொழிக் கொப்ப இதலிருந்து வெளிவரும் ஒவ்வொரு பெண்ணும் தன் சொந்த முயற்சி யால் தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கூடிய திறமையுடன் வெளிவரு கிறார்கள். அப்படி வெளிவரும்போது வேலை வாய்ப்புக்கள் அவர்கட்கு சுலபமாக கிடைக் கும். உத்தியோகம் பார்த்து சம்பாதிக்கும் பெண்களுக்கு திருமணம் நடைபெறுவதும் சிரமமல்ல. இதில் சேரும் பெண்களுக்கு ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, உறை யுள், கல்வி, கைத்தொழில் பயிற்சி, முதலிய எல்லாச் செலவுகளுக்கும் சேர்த்து மாதம் 1க்கு ரூ. 30 ஆகிறது. நம் சங்கங்களோ அல்லது தருமசிந்தனை உள்ள தனிப்பட்ட தனவந்தர்களோ ஒரு பெண்ணுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 30 கொடுக்க முன்வந்தால் தங்கிப் பயிற்சி பெறவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து உதவ நாங்கள் எப்பொழுதும் தயாராயிருக்கிறோம்.

எங்கள் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா 16—10—1966 அன்று சேலம் தியாக ராயர் பாலிடெக்னிக்கில் சென்னை நகரத்தார் சங்கத்தின் தலைவரும் நம் ஐக்கிய சங்கத்தின் உப தலைவருமான உயர்திரு. மு. சோமசுந் தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

சங்கம் இரண்டாவது ஆண்டிலும் ஏற்கனவே இருந்த செயற்குழுவினரில் ஒரு சில மாறுதலுடன் செவ்வனவே இயங்கி வரு கிறது. இதுவரை செய்த வேலைகள் சொற் பம். இனி ஆற்றவேண்டிய பணி அதிகமுள் ளது. இறைவன் அருளால் நம் சங்கங்கள் அனைத்தும் செவ்வனே செயல்பட்டு உதவி கோரும் அனைவருக்கும் உதவிசெய்து நன்கு பணியாற்றும் வாய்ப்புக்கிட்ட இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**பழ. வெ பழநியப்பன்**

**சொ. வள்ளியப்பா**

செயலாளர்கள்

*With the Best Compliments From*

**Kwality Spinning Mills Private Ltd**

Udamalpet Road,

POLLACHI.

**Manufacturers of best carded and combed yarns outstanding for quality**

# எழில் வேலா !

நெற்குப்பை இராமசுப்பிரமணியன்

**சென்னை பவளக்காரத் தெரு நகரத்தார் இல்லத்தில்
எழுந்தருளியிருக்கும் திருமுருகன்**

1. சென்னைபவ ளக்காரத் தெருவில் தோன்றும்
சீருயரும் நகரத்தார் இல்லம் வாழும்
நன்னயம்சேர் முருகனது திருத்தாள் போற்றி
நாளுமுயர் பக்தியுடன் பணியும் அன்பர்
இன்பமுடன் வாழ்ந்திடவும் அருளைத் தந்தே
இனிதென்றும் காத்தருள்க என்று வேண்டும்
என்றனது பாமாலை ஏற்றே காப்பாய் !
எழில்வேலா நன்மையெலாம் இனிது சேர்ப்பாய் !

2. தேவாரம் திருப்புகழைப் பாடும் நோக்கும்
செந்தமிழைச் சைவத்தைப் பேணும் நோக்கும்
நாவார நல்லவரைப் போற்றும் நோக்கும்
நல்லதிரு வாசகத்தைக் கற்கும் நோக்கும்
பூவாரம் தொடுப்பதுபோல் முருகா உன்னைப்
புகழ்ந்துரைக்கும் திருப்பாடல் புனையும் நோக்கும்
மேவாமல் வாழ்வதுவும் வாழ்வே யாமோ ?
மேலான நிலையெனக்குத் தருவாய் நீயே !

3. எங்குநான் சென்றாலும் முருக வேளே
என்பக்கம் கூடவே வருதல் வேண்டும் !
தங்கிடும் இடமெல்லாம் என்பக் கத்தில்
தங்கிநீ தமிழ்ப்பாடல் தருதல் வேண்டும் !
பொங்கிடும் புகழ்வேண்டும் ! பொருளும் வேண்டும் !
புண்ணியா உன்னடியைப் போற்ற வேண்டும் !
தங்குதடை இன்றியிவை தருதல் வேண்டும் !
சண்முகா உன்னடியே சரணம் கொண்டேன்.

# Ambadi Enterprises Private Ltd.

11/12 North Beach Road

MADRAS-1.

*Distributors for :*

HERCULES, PHILLIPS AND B. S. A. BICYCLES AND COMPONENTS

BRAMPTON FITTINGS

BROOKS, HECTOR AND WRIGHT OLYMPIC SADDLES

T. I. CYCLE CHAINS AND

MILLER DYNAMO LAMPS

4. செல்வமணி யேகந்தா செட்டி நாட்டுச்
செம்மல்களாம் தனவணிகர் செழித்து வாழ
நல்வரத்தைத் தந்தருள்வாய் ! நாளும் காப்பாய் !
நல்லறத்தில் சிறந்தவராம் அன்னார் ஓங்க,
பல்விதத்தில் நாடுமுன் னேற்றம் கொள்ள,
பைந்தமிழர் வாழ்வோங்கப் பாரோர் வாழ
எல்லையிலா இன்பவளம் பொலிய வேண்டி
இன்னருளைத் தந்தருள்க முருக வேளே !

5. பூம்புனலில் நீராடப் பொய்கை, தெய்வப்
புண்ணியத்தின் தலங்களுடன் உணவுச் சாலை,
தேம்பிழியும் தமிழ்க்கல்வி நிலைய மெல்லாம்
செய்துதரும் நகரத்தார் சிறந்து வாழி !
மாம்பழத்து வாயானும் கந்த வேளை
மறவாத நெஞ்சத்தார் வளமாய் வாழ்க !
நாம்புகழும் தமிழ்வாழ்க ! நாடு வாழ்க !
நல்லருளைத் தந்தருள்க முருக வேளே !

6. வேண்டும் போது வரவேண்டும் !
விரும்பும் வரம்நீ தரவேண்டும் !
தூண்டு கோலால் விளக்கொளிரும்
தோற்றம் போல உன்னருளால்
யாண்டும் இந்த உலகினிலே
யானின் றெளிர நல்லருளை
வேண்டு கின்றேன் ; முருகாநீ
விரைவாய்த் தந்தே ஆண்டருள்வாய் !

7. வாழ்க்கை வளமுமிக மல்கியுயர் இன்பமுமே
சேர்க்கும் படிக்துன் திருவருளை நோக்கியுனைத்
தோத்தரித் தன்புடனே தூயதமிழ் பாடுமெனைக்
காத்தருள் செல்வமுரு கா !

*Telephone* : 29207, 26623 *Telegrams* : PRODORITE

# Coromandel Prodorite Private Ltd.

52/53 JEHANGIR STREET
MADRAS-1.

*Manufacturers of Chemical Resisting Cements and Mastics; Chemical Engineers, Consultants, Contractors for all Industrial Acid Proofing Constructions, Floor Surfaces and Plastic Fabrications*

IN

COLLABORATION WITH

## Prodorite Limited, United Kingdom

**Works :**

Madhavaram, Madras-60

PHONE: 65844

**Sales Offices :**

| | BOMBAY | CALCUTTA | DELHI |
|---|---|---|---|
| TELEPHONE : | 554658 | 23-9411 | 272319 |

# நகரத்தார் மரபுப் புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும்

1. அளகாபுரி திரு சம்பந்த முனிவர்
   (1) "திருவாரூர்ப் புராணம்"
2. தேவகோட்டை திரு அ. நா. நாராயணன் செட்டியார் (வன்றொண்டர்)
   (1) சிவஞான போத லகு வசனம்.
   (2) தனிப்பாடல்கள்.
3. காரைக்குடி ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க அடிகள் (ஆண்டவர்—கோயிலூர்)
   (1) சுவாநுபவத் திருவாக்கு.
4. கீழ்ச்சிவல்பட்டி அழ. முத்தப்பச் செட்டியார் (பாடுவார் முத்தப்பச் செட்டியார்)
   (1) ஜெயங்கொண்டார் சதகம்
   (3) திருமுக விலாசம்
   (3) தல்லாகுளம் கருப்பர் அகவல்
5. சொர்ணநாதபுரம் திரு பழனியப்பையா
   (1) வெயிலுகந்த விநாயகர் பதிகம்
   (2) பழனிமலைச் செட்டியார் மாலை
   (3) கல்லுளி மாலை
   (4) பொன்மாரி யந்தாதி
   (5) சீரலைவாய்ப் பதிகம்
   (6) பழனிப் பதிகம்
   (7) விடுதிக் கவிகள்
6. நாட்டரசன்கோட்டை திரு ஐயா கருப்பன் செட்டியார்.
   (1) கண்ணுடைய நாயகியம்மை மாலை—பதிகம்—கும்மி
   (2) சோமீசர் மாலை—பதிகம்
   (3) வேங்கடாசல மாலை
   (4) இராமானுஜ திரிதச வெண்பா
   (5) பெரிய கருப்பண்ண சுவாமி பதிகம்
   (6) குன்றக்குடி முருகக் கடவுள் பதிகம்
   (7) சிறுவயல் மும்முடிநாத ஈசுவரர் பதிகம்
   (8) பாகநேரி புல்வா நாயகி அம்மன் பதிகம்
7. காரைக்குடி திரு சேவு. பழ. பழனிப்பையா (மேலமடாலயம் பழனிப்பையா)
   (1) தோத்திரப் பாமாலை
   (2) தனிப் பாடல்கள்
8. காரைக்குடி திரு பி. ராம. கு. மெ. மெய்யப்பச் செட்டியார்.
   (1) மீனாட்சியம்மை பதிகம்
   (2) மீனாட்சியம்மை கலித்துறைப் பதிகம்
   (3) முடுகு வெண்பா
   (4) செவ்வூர் மதுவநாயகியம்மை பதிற்றுப்பத்தந்தாதி
9. காரைக்குடி திரு. நெ. ராம. நெல்லையப்ப செட்டியார்.
   (1) சுந்தரேசர் பதிகம்
   (2) மீனாட்சியம்மை பதிகம்
10. காரைக்குடி திரு நாகப்பையா.
    (1) பொய்சொல்லா மெய்யர் பதிகம்
11. காரைக்குடி திரு மெய்யப்ப அடிகள்.
    (1) தனிப்பாடல்கள்
12. தேவகோட்டை திரு வீர. லெ. சிந்நயச் செட்டியார்.
    (1) தேவைத் திரியந்தாதி
    (2) பிரபஞ்ச பந்தகம்
    (3) திருவெற்றியூர்ப் புராணம்
    (4) குன்றக்குடி முருகன் பிள்ளைத் தமிழ்
13. காரைக்குடி திரு. ராம. சொ. சொக்கலிங்க ஐயா (சித்தாந்தச் செல்வர்)
    இவர்கள் புராணம், பதிகம், மாலை, அந்தாதி, சிலேடை வெண்பா, பிள்ளைத்தமிழ், சந்த விருத்தம், திருவூசல், மும்மணிக் கோவை, மஞ்சரி, கண்ணி முதலிய கவிதை நூல்களும் உரை நடை நூல்களுமாக (108) நூற்றெட்டு நூல்கள் எழுதியுள்ளார்கள்.
14. உலகம்பட்டி திரு இலக்குமண அடிகள் (காளையார்கோயில் மடாதிபதி) தனிப் பாடல்கள்.
15. தேவகோட்டை திரு. வெ. ஆதி. மா. சிதம்பரம் செட்டியார்.
    (1) தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி

*For your requirements of*

***Bolts and Nuts and Allen Screws***
***in Metric Sizes from 8 mm.to 20 mm.***

and

**Light Forkings in Steel and Brass**

Made on the

**Latest American National Machines**

PLEASE CONTACT:

# Lingam Industries Corporation

**A—4 Indusrial Estate**
**Madurai-7.**

**Phone : 5567**

*Office :* **10 East Pattamar Street,**
**Madurai-1.**
**Phone : 3154**

*Cable Address :* **"LINGINCORP-MADURAI"**

*Manufacturers of :* **Bolts, Nuts, Allen Screws, Light Forgings and Structural Fabrication**

*Technical Director :*

**PR. CHOCKALINGAM** B. E., A. I. I. E.,
M. A. S. H. R. A. E., A. M. I. Plant. E.,
A. M. I. B. F., A. M. I. E., M. I. S. E.,
Associate of the Institute of Fuel, England.

(8) தேவகோட்டை கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்பமாலை
(3) அமுஞ்சிக்கரை வரசித்தி விநாயகர் பதிகம்
(4) தில்லைச் சிவகாமி யம்மை பதிகம்
(5) காசி விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு
(6) தில்லைக் கற்பக விநாயகர் சதகம்
(7) தில்லைக் கற்பகவிநாயகர் தோத்திரம் எழுபது

16. நாச்சியார்புரம் திரு வெ. ராம. வெ. இராமநாதன் செட்டியார்.
(கூத்தலூர் இராமையா)
(1) நாச்சியாரம்மன் தோத்திரப் பதிகம்

17. அமராபதிபுதூர் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார்.
(தருமபுர ஆதீன வித்வ சிரோமணி)
(1) மயூரகிரிக் கலம்பகம்
(2) நாட்டரசன்கோட்டைக் கண்ணுடையம்மன் பதிகம்
(3) கொன்னையூர் மாரியம்மன் பதிகம்

18. அரியக்குடி திரு சா. கி. அரங்கநாதச் செட்டியார்.
(1) திருவேங்கடமுடையான் திருவந்தாதி
(2) சீனிவாசப் பெருமாள் வாகனக் கவி

19. காரைக்குடி திரு அரு. அ. ராம. அரு. அருணுசலம் செட்டியார்.
(1) கொப்புடையம்மன்பிரார்த்தனைப் பாடலும் வருகைப் பதிகமும்
(2) சப்தப் பிரபந்தம்

20. காரைக்குடி நா. முருகப்ப செட்டியார் தனிப் பாடல்கள்

21. காரைக்குடி ராம. உ. இராமசாமி செட்டியார்.
(1) சொக்கலிங்க ஐயா தோத்திரப் பாடல்
(2) தனிப் பாடல்கள்

22. காரைக்குடி திரு சேவு. மெ. சேவுகன் செட்டியார்.
(1) காரைநகர் மீனுட்சியம்மை பதிகம்

23. மகிபாலன்பட்டி திரு மு. கதிரேசன் செட்டியார்
(பண்டிதமணி—தமிழ்ப் பேராசிரியர்)
(1) சுந்தரவிநாயகர் பதிகம் (கவிதை நூல்)
(2) வீரவிநாயகர் மாலை ( ,, )
(3) திருச்சதகம் (உரை நூல்)
(4) நீத்தல் விண்ணப்பம்( ,, )
(5) திருவெம்பாவை ( ,, )
(6) உரைநடைக் கோவை (முதற்பகுதி) (கட்டுரை நூல்)
(7) (2-ம் பகுதி) ( ,, )
(8) உதயன சரிதம் ( ,, )
(9) மண்ணியல் சிறுதேர் (மொழிபெயர்ப்பு நூல்)
(10) சுக்கிரநீதி ( ,, )
(11) சுலோசனை( ,, )
(12) கௌடலீயம் பொருணூல்( ,, )

24. கண்டனூர் திரு தெ. அரு. சித. அரு. இராமநாதன் செட்டியார்.
மருதவாணர் தாலாட்டு

25. காரைக்குடி சொ. முருகப்பா.
(ஆசிரியர்—குமரன்)
(1) கவிதைமலர் (தொகுப்புநூல்)
(2) கம்பர் காவியம் (கட்டுரைநூல்)
(3) கம்பர் அருளிய இராமகாதை (பாலகாண்டம்) (உரைநூல்)
(4) கம்பர் அருளிய இராமகாதை (அயோத்திக்காண்டம்) ( ,, )

26. தேவகோட்டை திரு சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்.
(தமிழ் வள்ளல்)
(1) கைலாச விநாயகர் நான்மணி மாலை
(2) செயங்கொண்ட சோழீசர் தோத்திரம்.
(3) சௌந்திரநாயகி தோத்திரம்
(4) அறம் வளர்த்த நாயகி பதிகம்
(5) திருஞானசம்பந்தர் திருமுறைப் பெருமை
(6) சிவபூசை முறை
(7) சைவசித்தாந்த விதி

27. பள்ளத்தூர் திரு கா. இராமநாதன் பி. ஏ. பி. எல்.
(1) ஆழமும் அகலமும் (கட்டுரை)
(2) வாழ்க்கையும் சமயமும்( ,, )
(3) ஏன் பிறந்தோம் ( ,, )
(4) சிவஞான போதம் சிறிய உரை (உரைநூல்)
(5) மணிவாசகப் பாமாலை (தொகுப்பு நூல்)

குறிப்பு :—

வாழ்ந்து புகழ்பெற்ற இப் புலவர் பெருமக்கள் நூல் விவரங்களைத் தொகுத்து அளிப்பவர்கள் காரைக்குடி திரு ராம.சொ. திருநாவுக்கரசு செட்டியாரவர்களும், திரு ரெ. முத்துக்கணேசன் அவர்களும் ஆவார்கள்.

Grams : "SIVAIND" Phone : 60272

*With the best compliments of ;*

## Siva Packing Industries

***Manufacturers Marina Modern Packing Materials***

**B-1, Ambattur Industrial Estate, Madras-58**

SPECIALISTS IN :

* Double Colour Printing
* Export Containers
* Single Faced Corrugated Rolls
* Double Faced Corrugated Boards
* Folding Cartons
* Card Board Boxes, etc.

MARINA

*Familiar in Madras* *Familiar in Packaging*

Phone ; 73129

*With the Best Compliments of :*

## S. Kunjithapadam.

**B. E., A. M. I. E.**

CHARTERED ENGINEER & CONTRACTOR

***No. 2-D, " Deepika " Eldams Road, Teynampet, Madras-18.***

முன் பணம் இல்லாமலேயே

**பிலிப்ஸ்**

**பி. எஸ். ஏ.**

**ஹெர்குலஸ்**

( சைகிள்கள் )

❊

மாதத் தவணைகளில் கிடைக்கும்

❊

இதர விபரங்களுக்கு :

**சீனிவாசா ஏஜென்ஸிஸ்**

*36, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, மதருஸ்-18.*

போன் : 75606

(சென்னை நகரவாசிகளுக்கு மட்டும்)

# தாகூர் தரிசனம்

வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.,

சிறு வயது முதல் கவி தாகூரைக் காண வேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகம் உண்டு. *1914*-ல் தாகூர் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் 'வன வாசகம்' (Message of the Forest) என்ற விஷயத்தைப் பற்றி நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தியபோது நான் சிறு பையனாய் இருந்தபடியால், அவருடைய இனிய வெள்ளிக்குரல் மட்டும் என் காதில் விழுந்ததைத் தவிர, ஆங்கிலச் சொற்பொழிவின் பொருள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை.

அதன் பின் கவிஞரைக் காணும் சந்தர்ப்பம் செய்கோனில்தான் எனக்கு வாய்த்தது. இந்தச் சந்தர்ப்பத்தை, நான் நழுவவிடாது நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டேன். அவர் ஜப்பானிலிருந்து திரும்பி வரும்போது, இந்தோ-சைனுவில்—செய்கோனில்-அரசாங்க விருந்தினராய் வரவேற்கப்படுவார் என்ற விஷயம் தெரிந்தது. நானும் என் நெருங்கிய நண்பர்களும், கவிஞரைக் கண்டு பேசி, செய்கோன் தண்டாயுதபாணி கோயிலில் நாங்கள் நடத்திவந்த '**முருகானந்த வாசக சாலை**'யின் முதலாவது ஆண்டு விழாவுக்கு அவரைத் தலைமைவகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முடிவு செய்துகொண்டோம்.

*21—6—1929* காலை *9* மணிக்குக் கப்பலில் வந்து இறங்கினார், நமது கவிஞர் **ரவீந்திரநாத் தாகூர்**. திரள் திரளாக ஜனங்கள் துறைமுகத்தில் வந்து குவிந்தனர். தாகூர் பன்மொழிப் புலவர் என்ற முறையில் கவிஞருடன் ஒரு 'லேடி டாக்டர்' பிரெஞ்சில் பேச ஆரம்பித்தாள். கவிஞருக்குப் பிரெஞ்சு எழுதத் தெரியுமே யொழிய, பேசத் தெரியாது. கவிஞருடன் கூட வந்திருந்த பேராசிரியர் **சந்தா**, கவிஞரின் காரியதரிசியாய் இருந்தார். அவர் கல்கத்தா இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய் இருந்தவர். அவருக்குப் பிரெஞ்சுப் பாஷையிலும் புலமையுண்டு; நயமான உச்சரிப்புடன் அவர் அருமையாக பிரெஞ்சு பேசுவார். கவிஞருக்குத் துணையாகச் சகல சம்பாஷணைகளையும் அவர் நடத்தினார். உடனே பெரிய ஜனக்கூட்டத்தின் மத்தியில் போட்டோ எடுக்கப்பட்டது.

அதன்பின் கவிஞர், அன்னங்காரராகிய (Annamite) ஒரு நண்பருடைய மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்த நண்பர் முன்னால் கல்கத்தாவுக்குப் போய்வந்தவர்; தாகூரையும் அவருடைய சாந்திநிகேதன் சர்வகலாசாலையையும் முன்னமேயே நேரில் கண்டறிந்தவர். கவிஞர், அங்கு வந்ததும், திடீரென்று கவிதா சன்னதம் தோன்றி, மனத்தில் வந்ததை உடனே எழுதவேண்டுமென்று காகிதம் கேட்டார். 'பேப்பர்' (Paper) என்று ஆங்கிலத்தில் சொன்னதால், பிரெஞ்சு எல்லையில் ஒருவருக்கும் புரியவில்லை. 'பபியே' (Papier) என்று பிரெஞ்சில் சொல்லியிருந்தால், உடனே காகிதம் கிடைத்திருக்கும். நான் அப்போது சமீபத்தில் நின்றுகொண்டிருந்தேன்; உடனே என் பையிலிருந்த காகிதத்தை எடுத்துக் கவிஞர் கையில் கொடுத்தேன். அவர் அன்புடன் வாங்கிக்கொண்டு, என்னை உடனே பக்கத்தில் உட்காரும்படி கூறினார். அவ்வண்ணமே நானும் அமர்ந்தேன். அவர் மனத்தில் எழுந்த கருத்தை, உடனே எழுதி முடித்துவிட்டார். அந்த மாளிகையில், கவிஞரைப் புகைப்படம் எடுத்தார்கள். ஹனோயிலுள்ள (Hannoi) ஒரு தொங்கின் அன்னங்காரன் (Tonkin Annamite) கவிஞரைப் பார்த்து, கையாலேயே ஒரு படம் எழுதினான். கவிஞரைச் சுற்றி நான்கு மூலைகளிலும் நின்று தோற்றத்தைக் கவனித்துப் பத்து நிமிடங்களில் சித்திரத்தை அபூர்வமாகவே வரைந்து முடித்துவிட்டான்! கலையாவேசமுள்ள கவிஞர், இதைக்கண்டு வியந்து, படத்தில் தம் கையெழுத்துமிட்டார். கவிஞரின் உருவத்தையும் தேஜஸையும் புகைப் படத்தைவிட,

# NAIDU HALL (Regd)

*Specialist in*

**BRASSIERS CHOLIES & CHILDREN WEAR.**

# நாயுடு ஹால்



ஸ்பெஷலிஸ்ட்ஸ்

**கட்பாடிகள், சோளிகள்**

**T.Nagar. MADRAS-17**

போஸ்டல் ஆர்டர்கள் கவனிக்கபடும்.

இந்தப் படம் தெளிவாகவும் கம்பீரமாகவும் விளக்கிக் காட்டியது.

எங்கள் முருகானந்த வாசகசாலை விழாவுக்குத் தலைமை வகிக்கவேண்டும் என்று நான் கவிஞரிடம் தெரிவித்துக்கொண்டேன். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வருவதாக ஒப்புக்கொண்டார். இந்த அளவு அவர் சம்மதித்ததைப் பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! இதைக் கேட்டு வாசகசாலைக் காரியதரிசி நண்பர் திரு. பழ. கும. குமரப்ப செட்டியாரவர்களும் மிகக் குதூகலமடைந்தார்கள்.

சனிக்கிழமை காலை 5 மணிக்கு முனிசிபல் கட்டிடத்தில் அரசாங்க விருந்தினராகக் கவிஞர் வரவேற்கப்பட்டார். அந்த இரவு 9 மணிக்கு பொதுஜனங்களின் வரவேற்பு, முனிசிபல் தியேட்டரில் (Theatre de Municipal) ஏற்பாடாகியிருந்தது: ஹிந்து-முஸ்லிம்களின் சார்பாகக் கவிஞருக்கு நமது தாய்மொழியான தமிழில் வரவேற்பு அச்சடிக்க வேண்டியதிருந்தது. தமிழ் அச்சகம் செய்கோனில் கிடையாது. 15 வருஷங்களுக்கு முன்னதாக ஒருவர் அந்த தமிழ்ப் பத்திரிகை நடத்துவதற்காக வரவழைத்து வைத்திருந்த ஈய எழுத்துக்களைத் தேடிப்பிடித்து, அவைகளைப் பெட்ரோலில் நனைத்துச் சுத்தஞ் செய்து, பழைய எழுத்துக் கோப்பாளர் ஒருவரைக் கண்டுபிடித்து தமிழில் வரவேற்புப் பத்திரத்தைப் பிரயாசையுடன் நல்ல முறையில் தயாரித்துவிட்டோம்; தங்க நிறமான பட்டு லேஞ்சில், தமிழ் வரவேற்பை அச்சடித்துத் தயாராக வைத்திருந்தோம். முனிசிபல் தியேட்டர், மிக அழகான தோற்ற முடைய கட்டிடம்; 15 லட்சம் டாலரில் அது கட்டப்பட்டது; பிரெஞ்சுக் கலை அன்னங்காரரின் கலையுடன் இணைந்து வர்ணச் சித்திரங்களாக அதில் பாணமித்திருந்தது; மின்சார வசதி இரவைப் பகலாக்கியது! வரவேற்புப் பத்திரத்தை வாசித்துக் கொடுப்பதற்கும், தாகூரின் ஆங்கிலச் சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும், இந்தியர்கள் (ஹிந்து-முஸ்லீம்கள் மட்டும்) என்னைக் கேட்டுக்கொண்டார்கள்; நானும் இணங்கினேன். கவிஞர் காவிய நடையிலோ அல்லது வசன காவியத்திலோ சரளமாகப் பேசும் உயர்ந்த கருத்துக்களை, உடனே மொழி பெயர்க்க முடியுமா என்ற சந்தேகம் உண்டு தான்; இருந்தாலும், என்னுடைய இயற்கையான தைரியம் துணை செய்தது. முன் * 'கீதாஞ்சலி' போன்ற தாகூரின் நூல்களைப் படித்து அறிந்து அனுபவித்த முறையில், என்னுள் மனோதிடம் உதயமானது.

பிரஞ்சு, அன்னம், சீனம், தொங்கின், கொக்னி, ஆங்கிலம், தமிழ் ஆகிய பல மொழிகளில் கவிஞருக்குப் பற்பல வரவேற்புப் பத்திரங்களைப் பொது ஜனங்கள் வாசித்துக் கொடுத்தார்கள்.

முதலில் நான் தமிழ் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து, பட்டு லேஞ்சை வெள்ளிப் பேழையில் வைத்துக் கவிஞர் கையில் கொடுத்தேன். கவிஞர் ஆச்சரியப்பட்டார்; முகத்தில் ஒளி படரும்படி சிரித்தார்! எல்லா வரவேற்புப் பத்திரங்களையும் வாசித்து முடித்ததும் அவர், ஆங்கிலத்தில சுமார் பத்து நிமிஷங்கள் பொன் மொழியில பதிலளித்தார்; அதைத் தமிழில் மொழி பெயர்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மற்றவர்களும் அவரவர்களுடைய தாய் மொழிகளில மொழி பெயர்த்துச் சொன்னார்கள்; குழுமியிருந்த ஜனங்கள், விஷயத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இந்தப் பிரசங்கத்தில் இந்தியாவுக்கும் இந்தோ-சைனாவிற்கும் உள்ள பழைய சரித்திரத் தொடர்பு ஞாபகத்திற்கு வருகிறதெனவும், இந்தியாவின் கல்வியும் கலையும் இந்தோ—சைனாவிலும் ஆழமாகப் பரவியிருக்கிறதென்றும், பழைய கலைச் செல்வங்கள் இப்போது மறைந்து விட்ட நிலை வருந்தத்தக்க விஷயமென்றும், இந்தியாவின் புராதன நாகரிகக் கலையுலகில் விருந்தே கவிஞர் உதயமாகி வருவதாகவும், இந்தோ சைனா ஜனங்களின் சுக துக்க உணர்ச்சிகளில் தமது உள்ளம் எனறும் அநுதாபத்துடன் லயித்திருப்பதாகவும் உணர்ச்சியுடன் பேசினார்.

—கவிஞன் குரல், 1955

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வருந்திருவும வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்.

—நல்வழி

நகரத்தார் சங்கத்திற்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்


# மதுரை சௌத் இந்தியாக் கார்ப்பொரேஷன்

**பிரைவேட் லிமிடெட்**

*51, கீழ ஆவணி மூல வீதி,*

**மதுரை 1.**

# பொங்கல் மங்கலம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

மங்கலப்பண் முழங்கிடுவோம் - புது
வசந்த வனத்தினிலே உலவிடுவோம்
சங்கமுறக் கூடிடுவோம் - பல
சாதிமத வேற்றுமையைச் சாடிடுவோம்
தங்க நிறக் கனி பிழிந்தே - கண்டும்
சர்க்கரையும் முந்திரியும் தேனுங்கலந்தே
செங்கரும்புச் சாறுடனே - பாலுஞ்
சேர்த்தருந்தி வாழ்ந்திடுவோம் சேமமுறவே.

நீர்வளம் பெருகிடவே - நல்ல
நிலவளம் பயிர்வளம் பெருகிடவே
கார்வளம் பெருகிடவே - மலர்
கனிவளர் பசுவளம் பெருகிடவே
ஏர்வளம் பெருகிடவே - குழல்
இசைவளம் பெருகிடத் திசைதிசையும்
ஊர்வளம் பெருகிடவே - செல்வம்
ஓங்கிவளர் முயற்சியைத் தாங்கிடுவமே.

கூட்டுறவு கொண்டு செழிப்போம் - ஒரு
குலமென நலம்பெற நிலவிடுவோம்
ஈட்டியதைப் பங்குவைத் துண்போம் - இனி
ஏழையில்லை மன்னரில்லை தோழருலகில்
பாட்டுடனே ரசிகனென - நல்ல
பணசக்தி கொண்டு பொதுநலம் புரிவோம்.
ஏட்டுடனே தொழில் பயில்வோம் - நாம்
ஏக்கமற ஊக்கமுறப் பாடுபடுவோம்.

உடலினை உறுதி செய்வோம் - நன்றாய்
உழைத்துப் பிழைத்துப் பொதுநலம் புரிவோம்
கடலுடன் வான்கதிர்போல் - நம்
கண்டு முதல் ஊருக்குக் கொண்டு தருவோம்
கடன்சுமை தீர்ந்திடவே - நல்ல
கைத்தொழிலும் வாணிகமும் உயர்ந்திடவே
மடவிருள் ஒழிந்திடவே - நாட்டு
மனைதொறும் கலைமகள் வாழ்ந்திடவே
மங்கலப்பண் முழங்கிடுவோம் - புவி
மக்களுக்கு வாழ்த்திசைகள் வழங்கிடுவோம்.

# தி இந்தியா லெதர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட்

## இந்தியத் தோல் மாளிகை

**9, டேவிட்சன் தெரு, சென்னை—1.**

டெலக்ஸ் : 230
போன் : 22691 தபால் பெட்டி : 1516 தந்தி : "TANDRIGHT"

வெள்ளாட்டுத் தோல் பதனிடுவதில் உலகில் மிகப் பெரிய நிறுவனம். இந்தியாவின் மிகப் பெரிய அந்நிய செலாவணி சம்பாதிக்கும் ஸ்தாபனம்.

சென்னைத் துறைமுகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு கிழக்கிந்திய பதனிடப்பட்ட ஆட்டுத்தோல் மாட்டுத்தோல்களின் ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் ஸ்தாபனம்.

தென்னிந்தியப் பிராந்தியத்திலேயே அதிகமான அளவில் அன்னிய நாணயச் செலாவணி சம்பாதிக்கும் தனிப் பெரும் ஸ்தாபனம்.

ஒவ்வொரு ஆண்டிலும், குறிப்பிட்ட திட்டத்திற்கும் அதிகமாகவே செயல் புரிந்து தளராமல் முன்னேறுவது என்ற லட்சியத்தில் இந்த ஆண்டும் வெற்றி பெற்றிருக்கிறோம். அபிவிருத்திப் பாதையில் எங்கள் முன்னேற்றத்திற்கும், நாட்டின் ஏற்றுமதிப் பெருக்கத் துறையில் நாங்கள் ஏற்கும் பெரும் பங்கிற்கும் எடுத்துக் காட்டு இவ் வெற்றி.

**நிருவாகஸ்தர்கள் :**

**திரு. மு. நாராயணன் செட்டியார், சேர்மன்.**

**திரு. ஆ. நாகப்ப செட்டியார், மானேஜிங் டைரக்டர்.**

# நகரத்தார் சங்கம், திருச்சிராப்பள்ளி

பழம் பெருமை மிக்க நகரத்தார்கள் இன்றைய சூழ்நிலையில் கல்வி, தொழில் ஆகியவற்றில் முன்னேறுவதை நோக்கமாகக் கொண்டு இச் சங்கம் 10—9—48ல் தோற்றுவிக்கப்பட்டது. செட்டிமார் நாட்டிற்கு அப்பால் தமிழ்நாட்டில் நகரத்தார் ஒன்று சேருவதற்கு முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது இச் சங்கம்தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

தற்போது தேவகோட்டை ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள் தலைவராகவும், அரிமழம் அ. சம்பந்தம் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும், கோட்டையூர் S. அண்ணாமலை, புதுப்பட்டி S. சுந்தரம் அவர்கள் செயலாளர்களாகவும் தேவகோட்டை P. S. PL மெய்யப்பன் பொருளாளராகவும் பணியாற்றி வருகிறார்கள்.

கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்வதற்காகச் செட்டியார்கள் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று இங்கு தனியாக நிறுவப்பட்டுள்ளது. நகரத்தார் சங்கம் பல ஆண்டுகள் திருச்சிவாழ் நகரத்தார்களின் பேரவைகளைக் கூட்டிவைத்தும் திருச்சியில் உள்ள பிற சமூகப் பெருமக்களுக்கும் உயர்நிலை அதிகாரிகளுக்கும் தொடர்பும், நல்லுறவும் ஏற்படுத்தியும் சீரிய முறையில் தொண்டு செய்து வருகிறது. நகரத்தார் பிரச்சினைகளை திருச்சிக்கு வருகை புரியும் அமைச்சர்கள், அரசினர்களின் அலுவலர்கள் ஆகியவரிடம் அவ்வப்போது தூதுசென்று எடுத்துரைத்து வருகிறது. நகரத்தார் சங்கப் பெருமக்களுக்கு வரவேற்பு வழங்கி வருகிறது ஆண்டு விழாக்களைச் சிறப்பாக நடத்தி முக்கியமான தீர்மானங்களையும் நிறைவேற்றி வருகிறது. திருச்சி தமிழ்ச் சங்கத்திற்கு நகரத்தார் சங்கம் தனது நூல் நிலையத்தை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறது.

பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலில் ஈடுபட்டுள்ள பல சமூகத்தினரையும் ஒன்று சேர்த்து "திருச்சிராப்பள்ளி மாவட்ட லேவா தேவிக்காரர்கள் சங்கம்" ஒன்று ஏற்படுத்தியுள்ளோம். இவ்வமைப்பின் வாயிலாக இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நம் சமூகத்தினர்களுக்கு அரசினரின் புதிய சட்டங்களால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து குறைகளை நீக்க இச் சங்கம் பாடுபட்டு ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது. "லேவா தேவிக்காரர்கள் சங்கம் ஏற்படுவதற்கு இச் சங்கம் காரணமாக இருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

திருச்சி தேசீயக் கல்லூரியில் கானாடு காத்தான் திவான்பகதூர் மு. இராம. இராமசாமி செட்டியார் பெயரில் இரண்டு மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்கப்பெற்று வருகிறது. இச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ 6. ஆயுள் கட்டணம் ரூ. 250 ஓராயிரம் ரூபாய் நன்கொடை வழங்குபவர்கள் ஆதரவாளர்களாக ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றனர்.

தமிழ்நாட்டின் இதயம் என்று கூறுமாறு விளங்கிவரும் திருச்சிராப்பள்ளி நகரம் மின்சாரக் கொதிகலத் தொழிற்சாலை; துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற நிறுவனங்களால் மக்கள் தொகையிலும் பல்கிப் பெருகி வளர்ச்சிபெற்று வருகிறது. திருச்சிராப்பள்ளியில் ஏறத்தாழ 300 நகரத்தார் குடும்பங்கள் உள. பலர் தொழில் வாணிகத் துறைகளை மேற்கொண்டுள்ளனர். ஏனையோர் அலுவலகங்களில் வேலைபார்த்து வருகின்றனர். இந்நகரில் இயங்கும் இச் சங்கம் மேன்மேலும் நன்கு செயலாற்றி நம்மவர்கட்கு எதிர்காலத்தில் பெரும் பயன் விளைவிக்கும். இதற்கு உறுதுணையாக நகரத்தார் அனைவரும் உதவ வேண்டுகிறோம்.

அன்புள்ள,

**S. அண்ணாமலை,**

**S. சுந்தரம்**

*With Compliments from*

★

**INDIA RADIATORS LIMITED**
**99, ARMENIAN STREET**
**MADRAS-1.**

★

*Manufacturers of :*

**Automotive & Industrial**
**RADIATORS**

# மன்னர் மரபு

டாக்டர் மெ. சுந்தரம் M. A., M. Litt., Ph. D.
தமிழ்ப் பேராசிரியர், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

'செத்தாலும் சீரோடு, வாழ்ந்தாலும் வரிசையோடு' என்ற பண்பு நிறைந்தவர்கள் செட்டிநாட்டு மக்கள். அத்தகைய வாழ்வு வாழ்ந்தமைக்கு அவர்களின் நாட்டுப் பாடல்களே சான்றாக விளங்குகின்றன. நகரத்தார் பெருங்குடி மக்கள் நாடாண்ட மன்னர் பின்னோர் என்பது வரலாறு காட்டும் உண்மை; இலக்கியம் கூறும் செய்தி.

'மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப'

என்று ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

'அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய வெல்லாம் ஒருவழி முடித்தாங்கு'

என்று இளங்கோவடிகளும் கூறியுள்ளமை இக் கருத்தினை மெய்ப்பிக்கும்.

பண்டைத் தண்டமிழ் இலக்கிய இலக்கணங்கள் மட்டுமன்றி, இன்று பெரு வழக்காக நகரத்தாரிடை வழங்கிவரும் நாட்டுப் பாடல்களும் இச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன. பண்பாட்டின் புறத்தோற்றமாக விளங்கும் பழக்க வழக்கங்களும் இக் கருத்திற்கு அரண் கோலுகின்றன. சான்றாக, செட்டிநாட்டுத் திருமணங்களில் 'அரசாணிக்கால்' நடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்துவருகிறது. 'அரசன் ஆணைக்கால்' என்பதே 'அரசாணிக்கால்' என மருவி வழங்கிவருகிறது. நகரத்தார் திருமணம் முதலிய இல்ல விழாக்களில் அரசன் பங்கு கொண்டு சிறப்புச் செய்வான். அவன் வர இயலா வேளைகளில் அவன் முகவரை (பிரதிநிதி) அனுப்பிவைப்பான். அவன் ஆணைக்குட்பட்டு அவனுக்கு அடுத்த நிலையில் உள்ளோரின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. என்பதற்கு அறிகுறியாக அரசன் தன் ஆணைக்காலை அனுப்பிவைப்பான். அதனைத் திருமண இல்லங்களில் நட்டுவைப்பார். அரசனுக்கு இணையாக அது மதிக்கப்பெறும். மணமகன் பொற்றாலி பூட்டும் மணமேடைக்கு அருகில் அரசமரத்தின் இலைகள் செறிந்தும் மிடைந்தும் அக் கம்பு கட்டப்பெறும். அக் காலின் முன்னிலையில்தான் அனைத்துச் சடங்குகளும் நடைபெறும். அரசன் திருமுன்னர் அத் திருமணம் நிகழ்வதாகப் பொருள். இங்ஙனம் 'அரசாணிக்கால்' கட்டுவதிலிருந்து அக, புற வாழ்க்கையின் நிகழ்ச்சிகள்வரை—அதாவது இல்லற வாழ்வின் தொடக்கத்திலிருந்து வாழ்வின் இறுதிவரை அனைத்துக் கட்டங்களிலும் அரசப் பண்புகள் இழையோடிக் கொண்டிருப்பதைச் சொல்லிலும், செயலிலும் கண்டு களிக்க முடிகிறது. பல்சுவைக் களஞ்சியமாய், பாதுகாக்கும் இலக்கியமாய் இலங்கும் அவர்தம் நாட்டுப்பாடல்கள் நகரத்தாரின் அரச வழிக்கு அகச்சான்று பகர்கின்றன.

மன்னர் மரபை எடுத்துக்காட்டும் இப் பாடல்கள் இன்ப, துன்பம் ஆகிய வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் பாடப்படுகின்றன. வளமை, ஏழ்மை ஆகிய எல்லா நிலைகளிலும் இசைக்கப்படுகின்றன. வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் எல்லோராலும் இக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

தன் மகனைத் தாய் 'அரசு' என அழைப்பது அன்பின் மிகுதியால் இருக்கலாம் என்று கூறுவர். எல்லாப் பகுதிகளிலும் அங்ஙனந்தான் அழைப்பர், இது சிறப்புடைத்தன்று என்றும் வாதிடுவர். அரசு என மகன் மட்டுமல்லன், ஆண்டவனும் அழைக்கப்படுகிறான். அதுவன்று இங்கு ஆராயப் புகுந்தது. 'அரசு' என்று மட்டும் பாட்டில் ஓரிரு இடங்களில் கூறி அமையவில்லை செட்டிநாட்டுச் செல்வியர். அரசனுக்குரிய ஆட்சிச் சிறப்பினையும், போர் முறைகளையும், பண்பு நலன்களையும் அங்கங்களையும், வாழ்வு முறையினையும் வகைப்படுத்தி, வரிசைபடுத்தி ஏற்றமுற இசைத்துப் பாடுகின்றனர். அரச

*With Compliments*
*from*

# Carborundum Universal Limited

*Manufacturers of*
*Coated and Bonded*
*Abrasives*
*Super Refractories*
*and Abrasive Grains.*

**MADRAS - BOMBAY - CALCUTTA - NEW DELHI**

மரபு இல்லாவிடின் எங்ஙனம் இத்துணை விரிவாகவும், விளக்கமாகவும் அரசின் எல்லா நிலைகளையும் ஈடுபடுத்திப் பாடமுடியும்?

**ஆட்சி :**

"செங்கோலும் ஆங்கினையும்
செலுத்தி அரசாண்டிருப்பாள்
ஆங்கோலும் செங்கோலும்
அதட்டி அரசாண்டிருப்பான்

என்று பாடுகிறாள். இதிலே செம்மை சான்ற செந்தமிழ் வேந்தர்க்குரிய 'செங்கோல்' சிறப்பிடம் பெறுகிறது. 'அரசாண்டிருப்பான்' என்று ஆட்சி பேசப்படுகிறது.

'அத்தி புரத்தை ஆராளச் சம்மதித்தாய்
அங்கவள நாட்டை ஆராளச் சம்மதித்தாய்
மருங்கா புரியை எந்த மனு ஆளச்
சம்மதித்தாய்"

என்று தொடங்குகிறது பாட்டு. அத்தாணி மண்டபத்து அமர்ந்து ஆட்சி புரியும் கொற்றச் சிறப்பு கொடுத்து வைக்கவில்லையே தன் மகனுக்கு என்று குமுறுகிறது தாய் உள்ளம். அவன் எப்படிப்பட்ட மகன்?

"முந்திப் பிறந்த மகன்
முடி மார்க்கம் தீர்த்த மகன்
தலைப்பல பிறந்த மகன்
தாகம் தெளிச்ச மகன்
ஆதியிலே பிறந்த மகன்
அரசுக்கலி தீர்த்த மகன்"

எளிமையாகக் கிடைத்த மகன் அல்லன். விரல் விட்டு எண்ணக்கூடிய வேந்தன் மகன். 'முடி' முடிந்து விடுமோ என்ற ஐயத்தை முடித்து, விடிவெள்ளியாய்த் தோன்றி முடி சூடிய முதல் மகன். அரசுக் கலி தீர்த்த மகன். அதுதான் இன்றியமையாதது. காவல் கலி தீர்த்த காளை. துன்ப இருள் நீக்கி இன்ப ஒளி பாய்ச்சிய தோன்றல். செங்கோல் ஏந்திச் செல்வம் இல்லையே என்ற சிந்தை துயரைப் போக்கிய செம்மல். அத்தாணி மண்டபத்து அமர அரசு இல்லையே என்ற அகத்துயர் மாற்றிய புறப்படைக் காவலன். கண்ணிறைந்து காட்சி தந்தவன் கண்ணுருகச் சென்றுவிட்டான். ஆதலால் மாறிய கலி மறுபடியும் வந்துவிட்டது அரசு மாண்டதால். எல்லா நாடுகளிலும் ஆட்சி ஒரே முறையில் இருக்காதல்லவா? இன்னொரு ஆட்சி எப்படி அமைந்திருக்கிறது பாருங்கள்.

"பேரனுண்டு பேர்த்தியுண்டு
வாதாசி எலலையல
பேர்த்தி மணவாளருண்டு
பொன்னுமகன் தேவியுண்டு
ஐவரும் உண்டு
அரசாளத் தம்பியுண்டு
மூவரும் உண்டு
முடிசூடத் தம்பியுண்டு"

பஞ்ச பாண்டவர்போல் ஐவர் உளர். அவர்களில் அரசாளத் தகுதி படைத்த தம்பியும் உளன். இராமாயணத்தில் வரும் இராவணன், கும்பகருணன், வீடணன் போன்ற மூவர் உளர். அவர்களில் முடி சூடவும் தம்பி உளன். மன்னர் மரபிற்கேற்பப் பாரத, இராமாயணக் கதைகளும் எடுத்தாளப் பெற்றிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. ஆட்சிப் பொறுப்பும், முடிசூட்டு விழாவும் அறுகுறக் கூறப்பெற்றிருத்தல், அரசப் பண்பு பொருந்தியிருப்பதை விளக்குமுற எடுத்துக் காட்டும்.

இந்த ஆட்சி 'அரசு'க்கு மட்டுந்தானா? பெண்ணுக்கில்லையா? முடியணிந்து, செங்கோல் ஏந்திப் படிமிசை வேந்தர் போற்றப் பாண்டி நன்னாடு ஆண்ட மீனாட்சி வழி வந்தோர்க்கு அந்த வாய்ப்பு இல்லாது போகுமா?

"என்னரியான் தேவி,
தெற்குநிலைக் கோபுரமும்
தென்மதுரை ஆண்டிருந்தாள்
வடக்குநிலைக் கோபுரமும்
வடமதுரை ஆண்டிருந்தாள்"

என்று பாடல் செல்கிறது. 'அரியானு'க்கு—அரசனுக்கு வாய்த்த 'தேவி' ஆதலாலே, அவளும் ஆட்சி புரிந்தாள், ஒரு மதுரையை அன்று, இரு மதுரையை. தென்மதுரை, வடமதுரை, தமிழ் திகழ் மதுரையைப் பெண்ணரசியும் ஆண்டு பெருமை செய்தாள். எங்ஙனம் பெருமையோடு ஆண்டாள்?

"பங்காளி வீடும் பரிமுத்தும் பாடகமும்
சிங்கா தனத்தோடு சோந்திருந்து
நாளாச்சே"

என்று பாடல் கூறுகிறது. செம்மாந்து 'சிமாசன'த்தில் வீற்றிருந்து வெகு நாளாச்சே என்று ஒரு தாய் வருந்துகிறாள். நோய் காரணமாக உற்றார் உறவினருடன் கூடிவாழ முடியாத தன் நிலையை நினைந்து உள்ளம் குமுறி இங்ஙனம் உரைக்கிறாள் அத்தாய்.

இதனால்தான் சில பாடல்களில் பெண்களை அல்லி, சீதை, பாஞ்சாலி, வள்ளி ஆகியோரோடு ஒப்புமைப்படுத்திக் கூறிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெண்ணின் நல்லாளுக்குப் பெருந்தகைதான் சிறந்த மணமகன் என்று ஊரிலுள்ளோர் கூறுகின்றனர்.


"We were worried about our son.
He never went out.
So we bought him a
PHILLIPS cycle
and look at him now!"
Made by: T. I. CYCLES OF INDIA, Madras

"பொன்னி மணவாளர் விட்டால்
பின்பு மணவாளர் இல்லை
அல்லி மணவாளர் விட்டால்
அடுத்து மணவாளர் இல்லை
சீதை மணவாளர் விட்டால்
திரும்பி மணவாளர் இல்லை"

வலக்காலை முன்னெடுத்து வைத்து மணமகன் வளமனைக்கு வந்த நாள் முதலாய் இல்லம் வளமும் நலமும் செழித்துத் திகழ்ந்தது. அந்த மகிழ்ச்சிப் பெருக்கில் மருமகளைப் பாராட்டி மாமியார் பாடுகிறார்:

"அல்லி வந்த நாள்முதலாய்
அரளிப்பூ நந்தவனம்
கோதை வந்த நாள்முதலாய்
கொத்தரளி நந்தவனம்
சீதை வந்த நாள்முதலாய்
செண்பகப்பூ நந்தவனம்"

மருமகள் வந்த மங்கலப் பொருத்தம், இல்லம் சோலையும் சாலையுமாய்ப் பூத்துப் புதுமணம் கமழ்ந்து ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடியது. இந்த வளத்திற்குக் காரணமாய் இருந்த மொய்குழலாளை அல்லி என்றும், சீதை என்றும் அரசியர் பெயரிட்டு அகமிக மகிழ்வதில் வியப்பில்லை அல்லவா?

மகனை அரசாகக் கண்ட தாய் உள்ளம், கணவனை மன்னனாகக் கண்டு களிக்கிறது. கணவனால் கைவிடப்பட்டு, பெற்ற மக்களால் போற்றிப் பேணப்பட்ட பெண்ணரசி பாடுகிறாள்:

"மன்னர் இருக்கையிலே
மக்கள் உலை வைத்து வந்தேன்
பெருமாள் இருக்கையிலே
பிள்ளை உலை வைத்து வந்தேன்
.........................
.............................
மட்ட வயதிலே வளர்த்தார் இழந்து
வளர்ப்பைப் பறிகொடுத்து
மன்னர் சதமுமின்னேன்
மக்கள் துணையுமின்னேன்
இப்ப மன்னர் சதமுமில்லே
மக்கள் துணையுமின்னேன்"

கணவன் தன்னைக் கவனியாவிட்டாலும், அவன் தன் மனமென்னும் அத்தாணிமண்டபத்தே வீற்றிருந்து ஆட்சி புரியும் மன்னன் தான் என்று கருதும் பெண்மையின் பெருந்தகவு படைத்த பேருள்ளம் இதனின்று புலனாகின்றதல்லவா? மன்னருக்குக் குடிமக்கள் இருப்பது போலத் தன் மன்னருக்கும் —தனி மன்னருக்கும் மக்கள் இருப்பதாகக் கூறுகிறாள். அரசனைத் திருமாலாக—பெருமாளாகப் போற்றிக் கூறுவது இலக்கிய மரபு. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று பேசுவர் பெரியோர். அந்நெறி பின்பற்றி இம் மாதரசியும் தன் கணவனைப் பெருமாளாகக் காண்கிறாள்.

நல்லிளமைப் பருவத்தில் மறைந்துவிட்ட தன் மருமகளை எண்ணி மாமியார் வருந்துகிறாள். தன் கணவனிடத்தில் பிள்ளைகள் பற்றி ஏதும் கூறாமல் ஏந்திழை சென்றுவிட்டாளே என்று ஏங்குகிறாள்:

"மன்னரிடத்தில், மக்கள் பதனமின்னு
வார்த்தை சொல்லிப் போகலியே
பெருமாளிடத்தில் பிள்ளை பதனமின்னு
பேச்சுரைச்சுப் போகலியே"

மன்னருக்கு மக்கள் போல, பெருமாளுக்குப் பிள்ளை என்கிறாள். வைணவ முறைப்படி பெருமாளிடத்தில் பேரீடுபாடு கொண்டோர் பிள்ளை வழிமுறையினராக இருந்ததல் ஈண்டு அறியத்தகும்.

பெண்ணொருத்தி பெற்றுக் கலித்துப் பெருவாழ்வு வாழ்ந்த நிலையினை,

"மன்னர் தனியருக்கு மகிற
மக்கள் கணடிருந்தாள்
மாத்தி மஞ்சன் பெற்றிருந்தாள்
வாதோடிக் காச்சிருந்தாள்"

என்று பாராட்டிப் பாடுகிறாள் ஒரு பாவை.

**மகராசா :**

இந்த மன்னருக்கெல்லாம் மன்னர் அல்லவா மகாராசா. அவரும் செட்டிநாட்டுக்கு வந்து செல்கிறார் பாட்டென்னும் பல்லக்கில். இங்கே மன்னர் குடியின் பெயரும் இணைத்துப் பேசப்படுகிறது:

"மகுந்த முடி ஐயா
மகராசா பேரழைக்க
வளர்த்தவுக பேரழைக்க
வாழ்ந்திருந்தார் எல்லையிலே
மஞ்சன அழைக்கலையே
வலுவாத் தெரியலையே
கொற்றவரும் தேவியரும்
குடிப்பான பட்டணந்தான்
பாண்டியரும் தேவியரும்
படைப்பான ராச்சியந்தான்"

இதில் மகராசா மட்டும் வரவில்லை; பாண்டியரும் வருகின்றார். படையும் பின் தொடர்கிறது, 'ராச்சியம்' வரை.


Suitable for
Offices
Buses
Ships
Shops
Hospitals
Libraries
Hotels
Railways
Homes
LINOLEUM
for better living !
THE
VERSATILE
FLOOR COVERING
INDIA
LINOLEUMS
LTD.
14, Radhabazar Lane
Calcutta-1

மகராசா இப்பொழுது இல்லாதது மதிப்பாக இல்லை என்கிறாள் தாய் :

"வாழ்ந்திருந்த ஐயா மகராஜா
இல்லாதது மதிப்பாத் தெரியலையே
பொழிஞ் சாண்டார் ஐயா
புண்ணியவார் இல்லாதது
பெருமையாத் தோணலையே"

மகராசா யார்? பொழிஞ்சாண்டார் ஐயா. இந்த நாட்டை வளம் பொழிந்து ஆண்டவர். அப்படிப்பட்ட முன்னோடியை மாமன்னர் என்பதில் என்ன குறை?

அத்தகைய மாண்பு சான்ற மகராசா மன்னரோடும், மக்களோடும் உலா வருகின்றார்:

"மகராசா மாது
மன்னரையும் விட்டு
மக்கள் முகம் பார்த்து
மண்ணில் திரிஞ்சிட்டு
வனம் பார்க்கப் போனாள்
புண்ணியவார் மாது
பிழை பொறுத்த பொண்ணு
பெருஞ் சமத்துக் காரி
புத்தி திடமுள்ளாள்
பெருமானை விட்டுப்
பிள்ளை முகம் பார்த்துப்
பொழுதைக் கழிச்சிட்டுப்
புனம் பார்க்கப் போனாண்ணு
பூலோகத்தில் சொல்வாக"

கணவனைப் பிரிந்து மக்கள் நல்லாதரவில் வாழ்ந்த மாது தன் கதையைக் கண்ணீரில் கலந்த கவிதையில் இங்ஙனம் கூறுகிறாள். அது தொடர்கதையாகிறது.

"மகராசா மக்கள் மன்னரிடத்தில்
வையகத்தைப் போல
மாளுமருதி வாழ்ந்து பிருக்கலை
பூலோகத்தைப் போல
புண்ணியவான் மக்கள்
போகுமருதி பொழிஞ்சும் இருக்கலை
தெசைகருணன் மக்கள்
தேசத்தைப் போல
செல்ல நடத்தி செழிச்சும் இருக்கலை"

மன்னரை வீமன், கருணன், விசயனுடன் ஒப்பிட்டு உரைப்பது ஒரு வழக்காக வளர்ந்து வந்திருக்கிறது. மன்னர் மரபில் வந்தோரையே உவமையாக எடுத்தாண்டிருப்பது இங்கு உணரத்தக்கது.

"வீமன் வெளிப்பட்டால்
வெகுசனங்க பின்தொடரும்
கருணர் வெளிப்பட்டால்
கனசனங்க பின்தொடரும்"

மன்னர் குடிபடைகளோடு பவனி வருதல் மரபல்லவா? அம்முறைப்படி குடிகள் சூழக் கொற்றவன் வருகிறான்.

'இறக்கப் போனாலும் சிறக்கப் போ' என்பது ஒரு பழம் வழக்கு. அதனை 'இறக்கப் போனாலும் சிறக்கப் போ' என்பாரும் உளர். எங்ஙனமிருப்பினும் இறப்பிலும் சிறப்புக் காண்பதே பெரியோர்க்கு இலக்கணம். அந்த இலக்கணத்திற்கு இலக்கியம் வீமனோடும், கர்ணனோடும் பொருத்திக் காட்டப்படும் நம் வேந்தர்:

"கர்ணன் தலை விரிச்சாக்
கட்டிடமுங் கொள்ளாது
கர்ணனுட கொள்ளியின்னுக்
கனசனமும் சொல்லாது
வீமன் தலைவிரிச்சா
வீதியிடங் கொள்ளாது
விசயருட கொள்ளியின்னு
வெகுசனமும் சொல்லாது"

கொற்றவனுக்குள்ள சிறப்பு கொள்ளிக்கும் உண்டு, ஆண்ட காலத்தில் உள்ள பெருமை மாண்ட பிறகும் இருப்பது போல.

வேந்தர் எல்லோர்க்கும் இணையாகத் தன் கணவன் வீற்றிருந்த தன்மையை எண்ணி இசைக்கிறாள் ஏந்திழையாள்:

"காணிக்கு முள்ளெடுத்துக்
கர்ணனுக்கும் கண் பார்த்து
வேலிக்கு முள்ளெடுத்து
வீமனுக்கும் கண் பார்த்து"

எனப் பீடுடன் வாழ்ந்த வாழ்வைப் பாடுகிறாள் தாய்.

"வாழ் விசயன் தேவி வளவில் திரிஞ்சா
மதிப்பாத் தெரியும்
போர் விசயன் தேவி பூமி திரிஞ்சா
பெருமையாத் தோணும்"

விசயன் வெற்றிச்செல்வி வீட்டில் அடி எடுத்து வைத்ததே பெருமை. ஏனெனில் அவள்,

"திண்ணை நிறைந்திருந்தாள்
தெருவுநிலை தொட்டிருந்தாள்
வாசல் நிறைந்திருந்தாள்
வளவுநிலை தொட்டிருந்தாள்
வீடு நிறைந்திருந்தாள்
விளக்கடியைத் தொட்டிருந்தாள்"

*With Best Compliments of*

★

# S. R. P. TOOLS LIMITED.,

**Lattice Bridge**

**MADRAS-41**

★

கிடைக்காத விசயன் கிடைத்தான். ஆதலால் காணுக தாய் அவனைக் கண்டு கழி பேருவகை எய்தினாள்.

"பெரியையா காணுத
போர் விசயன் கண்டமின்னேன்
மணிவயிர ஐயா
மகராசா காணுத
மகனுரைக் கண்டமின்னேன்
மணிவயிர ஐயா
மகுந்த முடி காணுத
வாழ் விசயன் கண்டமின்னேன்."

விசயனுகவும், வீமனுகவும், கர்ணனுக வும் கணவனைக் கண்டவள் தருமனுகவும் காணத் தவறவில்லை.

"தங்கப் படியைத்
தளர மிதித்திருந்தாள்
அருமை மக்கள் அப்பத்தாள்,
தளர மிதிக்கையிலே
தருமபுரம் பார்த்திருந்தாள்
தருமருக்கு முன்போகத்
தருமம் மெத்தச் செய்யலையே
வெள்ளிப் படியை
விளங்க மிதித்திருந்தாள்
விளங்க மிதிக்கையிலே
வீமபுரம் பார்த்திருந்தாள்
வீமருக்கு முன்போக
வெகு தவங்கள் செய்யலையே
பொன்னுப் படியை
பொருந்த மிதித்திருந்தாள்
பொருந்த மிதிக்கையிலே
பூமிதலம் பார்த்திருந்தாள்
புண்ணியர்க்கு முன்போகப்
புண்ணியத்தைச் செய்யலையே"

தலைமைச் சிறப்பு தருமருக்கு உண்டல்லவா? இல்லத் தலைமைச் சிறப்பு இவருக்கு இருந்ததால் அறக்காவலனோடு ஒப்புமையாகக் கூறப்பட்டார். வீரத்தின் விளைநிலமாத லால் வீமனோடும் உவமிக்கப்பட்டார்.

**அமைச்சர்:**

இந்த அரசருக்கு அமைச்சர் வேண்டுமல்லவா? நம்பிக்கைக் குரிய நல்லமைச்சர் நம்பியாகிய அவர் தம்பியே.

"அண்ணனுக்குத் தம்பி
அட்டி சொல்லா ராசாக்கள்
தம்பிக்கு அண்ணன்
தாக்கல் சொல்லா மந்திரிகள்
.............................
அண்ணன் குதிரையிலே
அரிமன்னர் தண்டி சொல்லி
தம்பி குதிரையிலே
தமையனார் தண்டி சொல்லி
இருவர் குதிரையிலும்
ஏறினதும் பல்லாக்கு"

**அரண்மனை:**

அரசன் வாழ அரண்மனை அமைக்கப்பட்டது. அவன் கண்காணிப்பிலேயே கட்டப் பெற்ற கலைக்கூடம் அது.

"தச்சனார் நூல்பிடித்து
சமைப்பான் அரண்மனையை
என் தாய்பிறவி மாமன்
மஞ்சன் தனியனுக்குத்
தானுக நூல் பிடித்துச்
சமைத்தான் அரண்மனையை
அது தம்பிக்கும் எட்டலை
கொத்தனார் நூல் பிடித்துக்
கோர்ப்பான் அரண்மனையை
எங்க தாய்பிறவி மாமன்
கூடவே நூல் பிடித்துக்
கோர்த்த அரண்மனை
குழந்தைக்கும் எட்டலையே."

மங்கலமான அரண்மனை. அந்த வளமனை வாசலுக்குக் கோலமிட வாலிழை மகளிர் பயன்படுத்தும் பொருள்களைப் பாருங்கள்:

"முத்திடித்து நீறுக்கி
முதல் வாசல் கோலமிட்டு
சங்கிடித்து நீறுக்கித்
தலைவாசல் கோலமிட்டு
அரண்மனை வாசல்
ஆனைவரப் பார்த்திருப்பேன்
கொட்டார வாசல்
குதிரைவரப் பார்த்திருப்பேன்."

**கோட்டை:**

வன்மையான கோட்டை கொத்தளங்களுடன் வளநாடு ஆட்சி நடைபெறுகிறது.

"கல்லாலே கோட்டை
கலிய மழை பெய்தது
இரும்பாலே கோட்டை
இடிய மழை பெய்தது"

மாற்றார் படையெடுப்பினின்று மண்ணைக் காக்கவும், எல்லையில் தொல்லை களையவும் அரண் உறுதுணையாக நிற்கின்றது.

**யானை, குதிரை:**

கொற்ற வேந்தன் வெற்றி சிறக்கக் குதிரையும் யானையும் அணி வகுத்து வருகின்றன.

"அரண்மனை வாசல்
ஆனைவரப் பார்த்திருப்பேன்
கொட்டார வாசல்
குதிரைவரப் பார்த்திருப்பேன்"

காணும் வீரக் காட்சியே பெருமித உணர்வை அளிக்கிறது.

ஆட்சிச் சிறப்பில் அனைத்தும் அடங்கிக் குற்றேவல் புரிகின்றன.

"ஆனை அசைந்துவர
அரைமிளகு சிந்திவர
சேசன் குடைபிடிக்கச்
செந்நாகம் வட்டமிட"

ஆனைமுதல் நாகம்வரை அடி பணிகின்றன, நீதியான வீதியில் நேர்மையாளன் செல்வதால்.

மணமான பெண் இறந்துவிட்டால் பிறந்த வீட்டிலிருந்து உற்றார், பெற்றோர் கோடிச் சேலை கொண்டுவந்து பிணத்தின் மேல் விரித்துப் பெருமை செய்வார்கள். அதனைப் 'பிறந்தகத்துக் கோடி' என்பார்கள். உழுக வழக்கில் 'பொறந்தரக் கொடி' என மருவி வழங்கப்படுகிறது. உற்றார், பங்காளிகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு கொட்டு முழக்கிக் கொம்பு ஊதிப் பெண்ணின் பிறந்தகத்தார் பிறந்தகக் கோடி கொண்டுவரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். இறப்பிலும் சிறப்புண்டு என்பதை அவர்கள் வருகை காட்டா நிற்கும். அரச மரபினர் ஆதலின் பாங்கியின் மேல் சேர்த்த யானையின்மீது பட்டினை வைத்துக்கொண்டு வருகின்றனர்.

"கொட்டடைத்துப் பட்டெடுத்து,
எங்கள் தாய் பிறவி மாமன்
கொம்பானை மேலே வைத்து
கொம்பானை பின் தொடர
கோடி வந்து மேல் விழுக
என்னைப் பெத்த ஆத்தாள்
மாது கடலூரி
கோடி தவம் செய்திருந்தாள்
பட்டெடுத்துக் கொட்டடைத்து,
என் தாய் பிறவி மாமன்,
பட்டானை மேலே வைத்து
பட்டு வந்து மேல் விழுக
என்னைப் பெத்த ஆத்தாள்
பாக்கியத்தைச் செய்திருந்தாள்."

பட்டத்து யானையின் மீதேறிப் 'பவனி' வரும் பாராள்வோள் போன்று, பாங்கான யானையின்மேல் பாங்கிக்குப் பட்டுக் கொடுக்கும் பாங்கு, மன்னர் பின்னோரின் தலைமைச் சிறப்பையும், அதன் காரணமாகத் தோன்றும் பெருமித உணர்வையும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது.

இதனாலேதான் அவர்கள் உலகவழக்கில் கூட அடங்காதாருக்கு யானையினையும், குதிரையினையும் எடுத்துக்காட்டாகக் கூறி வருகின்றனர்.

"ஆனை அமடுபட்டால்
அஞ்சாதாள் குண்டுபட்டாள்
குதிரை அமடுபட்டால்
கூசாதாள் குண்டுபட்டாள்"

ஆனைக்கும், குதிரைக்கும் அஞ்சாதாள் குண்டிடம் குலைந்தாள் என்பதன் மூலம், ஆனையினையும் குதிரையினையும் எதிர்த்து நிற்கும் ஏந்திழையின் வீரச் சிறப்பும், வெற்றிச் சிறப்பும் தெள்ளிதின் புலப்படுகின்றன.

திருமணம் செய்யப்புகும் மணமகனை 'ஆனையேறி மாலை சூடுவான்' என்று கூறுவது செட்டிநாட்டு மரபு.

**படை :**

குடிகளைப் புரக்கும் கொற்ற வேந்தனுக்குப் படைகள் வேண்டாமா? அண்ணல் யானை அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையுடையவன் தானே மன்னன். அப்படைகள் அணி வகுத்து வருவதைப் பாருங்கள்.

தம்மை வாஞ்சையுடன் வளர்த்தெடுத்த பாட்டி (அப்பத்தாள்)—குடி முதல்வி இறந்துவிட்டாள். பேரனும் பேர்த்தியும் பின்னி விளையாடுவதைக் கண்டு களித்த பெருமாட்டி கண் மூடிவிட்டாள். வளர்த்தாளுக்கு அவள் கால்வழியினர், வரிசை முறை தப்பாமல் சடங்கு செய்கின்றனர். பெயரன் முதலில் பெருஞ்சடங்கு செய்கிறான்.

"பேர்த்தியிட்ட அப்பத்தாள்
பொண்ணுமுகம் பார்த்து
பொங்கி அழுதமின்னன்
பெருஞ்சேனை அத்தனையும்
பொங்கி அழுதாக
பேர்த்தியிட்ட அப்பத்தாள்
போகையிலே காணலே
பேச்சுமொழி கேட்கலே
பெருஞ்சேனை சேகரிச்சுப்
பெற்றோர் சடங்கைப்
பெருமைபண்ணிச் செய்துவந்தான்"

பேர்த்தி சடங்கு பின்தொடருகிறது.

"மாசேனே சேகரிச்சு
மருந்த விலைப் பட்டுடுத்தி
மருந்த நகை சாத்தி
வயிரநகை மேற்பூட்டி
வார்ப்புக் குடமெடுத்து
மண்ணில் நடை பழகி
மயிர்முடியின் மேலே வைத்து
மாசேனே சேகரிச்சு
வையை திரட்டி வந்தாள்
மாதெடுத்த தண்ணியிண்ணு
மலரிச் சொரிஞ்ச மிண்ணுள்
வாசல்வெள்ளம் போயிருச்சு"

பிணத்தைக் குளிப்பாட்டப் பேர்த்தி குடத்தில் தண்ணீர் எடுத்து வந்தாள். அவள் ஊற்றிய தண்ணீர் வீடும் வெளியும் பரந்து சிறந்தது. ஊருணியில் தண்ணீர் எடுக்கத் தான் ஒருத்தி மட்டும் செல்லவில்லை. அரச மரபினள் அப்படிச் செல்வாளா? 'பெருஞ் சேனே சேகரிச்சு'ப் பீடுடன் செல்கிருள்.

மூந்தித் தவமிருந்து முந்நூறு நாட் சுமந்த அன்னை இயற்கை எய்திவிட்டாள். அந்த அன்பின் திருவுருவிற்கு இறுதிச் சடங்கு செய்கிருள் அருமை மகள்:

"பொண்ணு தனிச்சி
பிள்ளையெல்லாங் கூட்டிப்
பிறப்பை அழைத்து
நம் பெருஞ்சேனே சேகரித்து
வையை திரட்டுவாள்
வாழ்ந்தமுறை சொல்லுவாள்
பொன்னரிசி குத்துவாள்
போகவழி காட்டுவாள்
போனமுறை சொல்லுவாள்
பிஞ்சுமகன் தேவியும்
போனமுறை சொல்லுவாள்
மருந்த மகன் தேவி
வடதேசம் போயிருந்தால்
என் மாது தனிச்சி
மாசேனே சேகரிச்சு
மக்களையுங் கூட்டி
வளர்ப்பை அழைத்து
வையை திரட்டுவாள்
வாதரசி எல்லையிலே"

பால் போல் வெளுத்து, நூல்போல் இளைத்துப் பக்குவம் இருந்து பெற்றவள் அல்லவா? ஆதலால் 'பெருஞ் சேனே' சேகரித்துப் பொன்னரிசி குத்திப் பிறப்பு வளர்ப்பைப் பீடுபெறக் கூறுகிருள்.

தமக்கையார் இயற்கை யெய்திவிட்டார். தம்பி பிறந்தகத்துக் கோடி கொண்டு வருகிருர். மன்னர் பின்னேர் மரபிற்கேற்ப மாசேனே கூட்டி மணியரிசி கொண்டு வருகிருர்கள்:

"பெண்ணுப் பிறப்புக்கு என்னைப்
பெற்ற ஆத்தாள்
போர் விசயன் கூட்டிவந்த
பொண்ணு கனதியின்னு
பூமி கிடுகிடுங்கப்
பொன்னரிசி கொண்டு
பெருஞ்சேனே சேகரித்துப்
பூமி வந்து சேர்ந்தாக
மணியரிசி கொண்டு என்னைப்
பெற்ற ஆத்தாள் மாது கடசாரி
வாழ் விசயன் கூட்டிவந்த
மாது கனதியின்னு
மாசேனே சேகரித்து
மணியரிசி கொண்டு
வளவில் வந்து சேர்ந்தாக
மண்ணுக் கிடு கிடுங்க
வாய்க்கரிசி கொண்டு
வளவில் வந்து சேர்ந்தாக"

அந்தக் குடியில் ஆண்பிள்ளையில்லாக் குறை அனைவரையும் பெரிதும் வருத்தியது. நல்ல வேளையாக இந்தத் தமக்கையாருக்குப் பின்னர் ஓர் அழகிய ஆண் மகவு பிறந்தது. 'தம்பியைக் கூட்டிவந்த தமக்கை' என்று எல்லோரும் இவரைப் பாராட்டிப் பேசினர்கள். ஆதலால் இவர் இறந்தபோது யாருக்குமில்லாப் பெருஞ் சிறப்போடு இறுதிச் சடங்கு நடைபெற்றது. அதைத்தான அழகுற வடித்தெடுத்துக் காட்டுகின்றன மேலையுள்ள வரிகள். இந் நிகழ்ச்சிகள் நீத்தார் கடனில். இனி வரும் நிகழ்ச்சி திருமண விழாவில். தாயில்லா அண்ணன் திருமணத்தில் தங்கை செய்யும் சடங்கைக் கூறுகிறது இப் பாடல்:

"பூச் சேர்த்துப் பார்க்கையிலே
பிள்ளை தனியனுக்குப்
பெற்ருள் சடங்கு
பெருஞ்சடங்கு செய்வாள்
பெருஞ்சேனே சேகரித்துப்
பெண்ணழைத்துக் காட்டுவாள்
பூலோகத்தார் பார்த்தவர்கள்
பெருமைதான் என்பார்கள்
வளர்த்தார் சடங்கும்
மாது தனிச்சி மணச்சடங்கும்
செய்வாள்

மாசேனை சேகரித்து
மாதழைத்துக் காட்டுவாள்
என்பார்கள்.''

தனயன் திருமணத்தில் தாய் செய்ய வேண்டிய சடங்கைத் தங்கை செய்கிறாள். இளமையிலேயே ஈன்றாள் இறந்துவிட்டதால். தாய் சென்றுவிட்டாலும் தகுதிமுறை பிறழாமல் தார்வேந்தர் சீர்முறைப்படி சடங்கு நடக்கிறது.

**ஆண்டார் :**

இங்ஙனம் படை, பட்டாளத்துடன் இருந்தோர் ஆண்டாராகத்தானே இருக்க வேண்டும் ஆம் என்கிறது பாட்டு,

குலம் பேசிக் குணம் பேசிக் கோதிலறக் குடி பேசித் திருமணம் முடிவு செய்யப்பெறுகிறது. 'நல்ல இடம்' என்று நாட்டார் கூறுகின்றனர். ஏன்?

''நல்ல இடம் பார்த்து
நாடாண்டார் வீடு பார்த்து
விளையும் நிலம் பார்த்து
விதை பரவி வைத்தவுக''

நாடாண்டார் வீடுபார்த்துப் பேசி முடித்ததனுல் அது நல்ல இடம்.

அந்த வீட்டிற்கு அவர்தான் முதலில் வந்தவர்—மூத்த மாப்பிள்ளை. எந்த வீட்டிற்கு?

''பொழிந்தாண்டார் எல்லைக்கு
தலைப்பிலே வந்த தங்க மணவாளர்
ஆண்டிருந்தார் எல்லைக்கு
ஆதியிலே வந்த அரிய மணவாளர்
தெசையுள்ளார் எல்லைக்கு
முந்தி முதல் வந்த மூத்த மணவாளர்''

வளம்பொழிய நாட்டை ஆண்டவரின் வாசலுக்கு வலக்காலை முன்னெடுத்து வைத்து வந்த முதல் மருமகன். சிறப்பிருக்காதா என்ன?

**திருமணம் :**

இந்த 'ஐயா' தன் அருமை மக்களைப் பெருமைமிகு இடங்களில் மணமுடித்தார். ஆண்ட மரபிற் கேற்ற இணையான 'சம்பந்தம்.'

''பொழிந்தாண்டார் எல்லையெல்லாம்
பொண்ணு வைத்துப் பார்த்தாக
மதித்தாண்டார் எல்லையெல்லாம்
மாது வைத்துப் பார்த்தாக
திசைகருணர் எல்லையெல்லாம்
சீதை வைத்துப் பார்த்தாக'

இத்தகு பெருமை சான்ற மாநிலங் காவலரை 'எம் மன்னர், உம் மன்னர்' என்று எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு கூறுவதில் என்ன வியப்பு?:

''எம் மன்னர் உம் மன்னர்
என்பார் சில கோடி
கோலேறின மன்னர்
குணத்து இணையுமில்லை
நீலவர்ண மன்னர்
நிறத்துக்கு இணையுமில்லை
பஞ்சவர்ண மன்னர்
படிப்புக்கு இணையுமில்லை''

'எம் மன்னர்' என்று உரிமைக் குரல் ஒலிக்கிறது அல்லவா? உரிமைக்குக் காரணம் என்ன? அவர் உயர்வு. கோலாலும் குணத்தாலும்—செங்கோலாலும், செம்மையான பண்பாலும் அனைவரின் சிந்தையிலும் இடங்கொண்டவர். மாநிலத்தை ஆளுமுன்னர் அவர்கள் மனத்தை ஆண்டவர். அரங்கேறு முன்னர் அவர்கள் அகத்தில் ஏறியவர். நலம் பல விளைத்த நாயகர். செங்கோற் சிறப்பு மட்டுமன்று; அழகாலும் அறிவாலும், எண்ணத்தாலும் தம் 'உள்ளங் கவர் கள்வரை எம்மவர், எம்மவர் என்று எல்லோரும் ஏத்திப் புகழ்வதில் என்ன வியப்பு? என் மன்னர், உன மன்னர் என்று கூறவில்லை. 'எம் மன்னர், உம் மன்னர்' என்கிறார்கள். அரசன் எப்பொழுதும் தன்னைக் கூறும்பொழுது 'யாம்' என்று தன்மைப் பன்மையில், அரச மரியாதைப் பன்மையில் கூறுவது வழக்கம். இவர்களும் அரசனைச் சார்ந்திருக்கின்ற தன்மையினல் அரசப் பெருமித உணர்வு தோன்ற எம், உம் என்று கூறுகின்றனர். சார்ந்த இடத்தின் சாயல் சேர்ந்தவர்க்கு இல்லாது போகுமா? சேர்ந்தோர் பிழையாமைக்குக் கோடி காட்டிய கொற்றவன் கோடியில் ஒருவன் அல்லவா? கோடி கொடுத்தும் கூட்டிக் கொள்ளத் தக்கவன் அல்லவா? ஆதலால்தான் கோடிப் பேர் அவனைச் சுற்றமாச் சூழ்ந்துகொண்டு 'எம் மன்னர்', 'உம் மன்னர்' என்கிறார்கள்.

**வாழ்க்கைத் துணை நலம் :**

இத்தகு பெருமை வாய்ந்த மன்னருக்கு வாழ்க்கைப்படப் பேறுபல செய்திருக்க வேண்டுமல்லவா? எல்லோருக்கும் கிடைக்குமா இவ்வில்லற வாய்ப்பு?

"நாடு மதித்த ராசாவுக்கு
வாழ்ந்திருந்தாள்
சீமை மதித்த திசையருக்கு
வாழ்ந்திருந்தாள்
ஊரு மதித்த உத்த
மன்னருக்கு வாழ்ந்திருந்தாள்"

பொன்னிவள நாட்டின் காவலன் இக் கன்னி உளங் கலந்த காதலனுவதற்குக் கொடுத்துவைக்க வேண்டுமல்லவா? பேறு பெற்ற பெருமாட்டியாதலாலே அரசு வீற்றிருக்கும் திரு அவளும் பெற்ருள். பாராளும் வேந்தனின் துணைவியாதலாலே அவன் கொற்றக் கொடி பறந்த இடமெல்லாம் இக் குலக் கொடி சென்று பார்த்தாள். அரசன் செலவில் அரசியும் உடனிருத்தல் மரபல்லவா? ஆதலால் அவள்.

"சீமை எழுகடலும்
தென்காஞ்சி முக்கடலும்
பாராத இடமும்
பாக்கி கிடையாது"

என்று கூறும் வண்ணம் எல்லா இடங்களும் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சி எய்தினுள்.

**அரசப் பண்பு :**

இங்ஙனம் தொட்ட தொட்ட இடமெல்லாம் நகரத்தார் வாழ்வில் அரசப் பண்புகள் மிளிர்வதைப் பார்க்கின்ேறம். நிலை, வேந்தன் தன்மையில் அமைந்திருந்தால்தான் நினைப்பும் அதுவாக இருக்க முடியும். தம் குலத்தையும் தற் குறி பேற்றமாகக் கூறுவது இலக்கிய மரபு. ஆனல் எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் அக் காவிய மரபினைக் கையாள இயலாது. ஒரு சில நிகழ்ச்சிகளில் மட்டுந்தான் அது பயன்படும். அரசநிலை இயற்கையாகவே அமைந்து கிடக்கின்ற காரணத்தினுலதான் எல்லாக் கட்டங்களிலும் இவ்விலககணம் தலை காட்டுகிறது. காரணம், அதற்கு இலக்கியமாக நகரத்தார் வாழ்ந்து காட்டியமையேயாகும், எல்லோரும் எளிமையாகக் கூடிக் கலந்து பேசும் உலக வழக்கில் கூட இவ்வரசத் திருவின் போக்குக் காணபபடுகிறது. அந்த நாட்டு வழக்கிசை பாட்டு வடிவில இடம் பெறுகிறது. ஆதலால் பாட்டில் காட்டப்படுவது உயர்வுநவிற்சி அன்று; உண்மைநவிற்சியேயாகும். அடிப்படை ஒன்றும் இல்லாமல் இத்தகு பெருநிலை இலக்கியங்களில் என்றும் இடம் பெருது. அப் பெருநிலையினை இன்றும் நகரத்தார் வாழ்வில் நாம கண்டு களிகக முடிகிறது. மகனை 'அரசு' என்று அழைத்தலும், மணவீட்டில் அரண்மனை அளவிற்குச் 'சாமான் வைத்த' லும் புறத் தோற்றங்கள். அவற்றின் அடிப்படையாகிய அகத் தோற்றந்தான் அவர்கள் எண்ணும் அரச நினைப்பு; புரியும் வேந்தர் செயல. இங்ஙனம் சிந்தையும், செயலும் செங்கோல் வேந்தரின் பண்புகளைத் தாங்கியிருக்கும்போது அவர்களை 'மன்னர் மரபினர்' என்று கூறுவதை எங்ஙனம் மறுக்க இயலும்?

மேலும், மரபு என்பது வழிவழி வளர்ந்து வரும் ஒரு நியதி. ஓரிருவர் கூடி ஒரு தலைமுறையில் ஒரு குடிவழியில் உருவாக்குவதன்று. நினைப்பிற்கும் எட்டாத நெடுங் காலந் தொட்டு நிகழ்ந்து வருவது. மக்களின் எண்ணங்களும், ஏற்பாடுகளும் பழக்க வழக்கங்களாகிப் பரவத் தொடங்கிப் பண்பட்ட நிலையெய்தி நிலைபெறும்போதுதான் அவை மரபாகின்றன. அது நாட்டுவழக்கிலிருந்து ஏட்டுவழக்கிற்கு வரும்போது வடிவும் வண்ணமும் பெறுகின்றது, மரபின் இலக்கணம், நிலைபேறுடைமை. நினைத்தபடி


# Madura South India Corporation

**PRIVATE LIMITED.**

*Dealers in*

**G. I Pipes, Black Pipes and Fittings**

*For your requirements of*

**Madura Mills Cotton Hank, cone, Cheese & Special Yarns, Twin Tusker Drill & Long-cloth, "Horse Shoe" Brand Rayon Grade Caustic Soda Solid & Flakes 98/99%, Hydro Chloric Acid 30/33% Commercial in Jars & Carboys Liquid Chlorine in Cylindors.**

Soda Ash, Soda Bicarb, Calcium Chloride, Vacume Salt.

| | |
|---|---|
| *6-C, Rashtirapathi Road,* | *11-40 53-3 Pulipativari St.,* |
| *SECUNDERABAD-3* | *VIJAYAWADA-1* |
| *Grams : CAUSTIC,* | *Grams : SOUTHDYES,* |
| *Phone . 74879* | *Phone : 3492* |
| *Res : 75979* | |

நினைத்தபொழுது யாரும் மாற்ற முடியாதது அதனை நிலைநிறுத்தும் சான்றுகள் எப்பொழுதும் நிலவ வேண்டும். பின் வருவோரும் பின்பற்றும் வண்ணம் செறிவும் நிறைவும் சேர்ந்திலங்க வேண்டும். பின்பற்ற முடியாத ஒன்று மரபாய் இருக்க இயலாது. இலக்கியத்தையும் இலக்கணத்தையும் வரையறைக்குட்படுத்தி நெறிப்படுத்துவது மரபுதான். மரபின் எல்லைக்கோட்டில்தான் இரண்டும் நின்று செயற்படுகின்றன. கடலுக்குக் கரைபோல, ஏட்டிற்கு மரபு இருந்து வருகிறது. மக்கள் சிந்தனையிலும் செயலிலும மரபு இயற்கையாகவே இடம் பெற்று வருகின்றது. நாட்டின் வாழ்வையும், ஏட்டின் வாழ்வையும் அது நெறிப்படுத்தி வருகிறது. மரபு என்பது வேர் வீழ்த்து விழுதுபல தாங்கிய பழம் பெரும் ஆலமரம். அதன் நிழலில் வேந்தர் படையும், மாந்தர் குடியும் தங்கிப் பயன்கொள்ள முடியும். நிகழ்ந்த ஒன்றுதான் நீணிலத்தில் பரவி பலராலும் பின்பற்றப்பட்டு மரபாகிறது. நிகழாத ஒன்று மரபாக இருக்கமுடியாது. ஆதலின் மரபு என்பது உண்மையின் உருவாய் உலவிவருவது; கடந்த தன் விளைவாய் நடைபயில்வது; இல்லாத ஒன்றினை, அது எத்துணை நல்லதாக இருப்பினும், மரபாக மன்பதை கொள்ளாது. இந்த இலக்கண அடிப்படையில் நாம் மன்னர் மரபை ஆராயவேண்டும். மரபு வழியாக நகரத்தார் மன்னர் பண்புகளை அகவாழ்விலும், புற வாழ்விலும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து வந்தனர். மேற் கூறப்பெற்ற செட்டி நாட்டுப் பாடல்களே அவ்வுண்மைக்குச் சான்று பகர்கின்றன. நடந்த நிகழ்ச்சிதான் ஏட்டிலும், நாட்டிலும் இடம் பெற முடியும். நெடிது நாள் நிலைத்து நிற்கவும் இயலும். ஆதலின் வாழையடி வாழையாய் உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் கொற்றம் பரப்பிக் கொடி கட்டி வாழ்ந்து, சுற்றம் தழுவி, வளவிய வான் பொருள் ஈட்டி, அரச மரபுநிலை திரியா மாட்சியரசாகி விளங்கிய நகரத்தார் 'மன்னர் மரபினர்' என்பது தானே போதரும்.

★

Phone No. : 2435

**Rajeswari Mills**

New Ramnad Road

Madurai-9.

*Manufacturers of :*

**Grey Sheeting, Gada**

**Bedspreads Etc.**

**ANNAMALAI & CO.,**

*Manager*

# மாப்பிள்ளைக்கு விலையா?

அ. முருகப்ப செட்டியார் (மாநகரி)
மானேஜர், இரங்கூன் நகரவிடுதி, சென்னை-1.

**மணம் விழைந்து வாடும் தனவணிகப் பூங்கொடிகளின் திருமணம் எளிதாக நிறைவெய்த வேண்டுமென்னுங் கருத்தில் ஆக்கியவை.**

1. *அத்தி முகத்தார் அருள் பெற்று வேலவர்தாள்*
*பத்தி யுடன்பணிந்து பஞ்சம் பறந்தோடச்*
*சத்தி யருளும் தயாபரன் தன்னருளும்*
*சித்தித் திடநம் சேயிழையார் வாழியவே!*

2. *சென்னை நகரத்தார் சங்கத்து நற்பணிநம்*
*முன்னைத் தவத்தாலே முக்காலும் வெற்றிபெறும்*
*அன்னை இனத்தவர்நம் ஆயிழையார் கல்யாணம்*
*தன்னை எளிதாக்கத் தக்கநிலை ஆராய்வோம்.*

3. *மன்னவர்க்கு மாண்புமிக வாழ்ந்திருந்த நம்மினத்தார்*
*தென்னவர்க்கு மாமகுடஞ் சிரஞ்சூட்டும் பேறுபெற்றும்*
*கன்னல்மொழி நம்மகளிர் கடிமணத்திற் கேங்குநிலை*
*தன்னால் தவிக்கின்றார் சாந்திபெற நாமுனைவோம்.*

4. *தாய்க்குலத்து மெல்லிநல்லார் தம்வழக்கில் பெற்றுவரும்*
*சேய்க்குணத்து பெட்டிசட்டி சீர்முறையின் மோகமெலாம்*
*போக்கிவிட்டுச் சீர்திருத்தப் புதுநெறியில் முன்வந்தால்*
*மேக்குலத்துப் பண்புபெற்று மேல்நிலையில் வாழ்ந்திடுவோம்.*

5. *அன்றாட வாழ்வில் அரைவயிற்றுச் சாப்பாட்டை*
*தின்றுநாட் போக்குவோர் சீர்முறைக்கு எங்குசெல்வார்?*
*நின்று நிதானித்து நிலையோர்ந்து சிந்தித்தால்*
*கன்றுமனப் பல்குடும்பக் காட்சியெல்லா முன்தோன்றும்.*

6. *பெண்ணை விலைகூறிப் பெரியவிலை கேட்டதுபோய்*
*கண்ணை விழியாமல் காலநிலை யுன்னாமல்*
*மண்ணே யதிரும்விலை மாப்பிளைக்கு வேண்டுமென்றால்*
*விண்ணே யதிராதோ? விவேகமோ? இச்செயல்தான்?*

7. மணமகனும் பெற்றோரும் மனவிரக்க மேற்கொண்டு
குணநாடி நன்மணங்கள் கூட்டுவித்தா லன்றிநம்
பணக்கொடையால் மட்டுமணப் பஞ்சம் தெளியாது
கணக்கிட்டு நல்லதிட்டங் கண்டாலே வெற்றிதரும் !

8. திறமிக்க காளையர்கள் சீர்திருத்த வேட்கைகொண்டு
உரமிக்க தம்வலியால் உழைத்துச் சமூகமதை
தரமிக்க தாக்கிவிட்டால் சரிந்தநிலை மீண்டுவிடும் !
திரமிக்க நம்வாழ்வு சீரோங்கு மென்றென்றும் !

9. கல்விக் குதவுகின்றோம் காலநிலை நன்குணர்ந்து
செல்வர் தம்மனத்துள் சீர்திருத்தப் பூமலர
நல்ல சூழ்நிலையை நாம்தூண்டா விட்டாக்கால்
வெல்லும் வழிநமக்கு வெகுதூர மாகிவிடும்.

10. செல்வர் மனங்கனிந்து சீர்திருத்த ஆர்வமொடு
நல்ல பலதிட்டம் நமக்காக்கித் தந்திட்டால்
எல்லாம் எளிதாகி இன்பப் பெருக்கெடுக்கும் !
சொல்லாற் றுதிபாடித் துன்பம் துடைத்துய்வோம் !

11. நம்மினத்துப் பேரறிஞர் நல்லதிட்ட மொன்றுகண்டு
தம்மினத்தை மேம்படுத்தத் தக்கநிலை கண்டிலரேல்
வெம்புநிலை மங்கையர்க்கு வெற்றிமணம் பக்கமில்லை
அம்புவியோர் போற்றும் அறவழியைக் கண்டுவப்போம் !

## காணற் கினியது

மகிபாலன்பட்டி வித்துவான் கதிரேசன் செட்டியார் தமிழிற் சிறந்த புலமை வாய்ந்தவர் ; வடமொழி யுணர்ச்சி மிக்கவர்; அரிய பெரிய நூனயங்களைத் தம் மதி நுட்பத்தால் நன்காராய்ந்து தெளிந்து கல்விக் கழகத்துப் பலரும் வியக்க எடுத்து வழங்குஞ் சொல் வன்மை யினுதுடையர் ; நகரவணிக நன்மக்களுள் பலவற்றுட் டமிழ்க்கல்வி வளர்தற்குக் காரணமான கழகங்கள், கல்லூரிகள் நிலைபெறுவித்தற் கட்டம்மினத்தாரைத் தூண்டியவர் ; ஆங்காங்குள்ள புலவர் பெரியாரை அழைப்பித்துத் தங்குல தனவான்களைக் கொண்டு உபகாரம் புரிவித்து மகிழ்விப்பவர் ; தம்மினத்தார் அறிவினும் ஒழுக்கத்தினும் திருந்திப் புகழெய்தி வாழ்தற் பொருட்டுத் தம் மனமொழி மெய் யொத்து முயல்கிற்பவர். செல்வப் பொருளே யீட்டும் வணிகக் குலம் இவரைப் பெற்றுக் கல்விப் பொருளையும் ஈட்ட முயல்வது காணற் கினியது.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார்,
சேது சமஸ்தான வித்துவான்.

# HOT-STAMPED



# COMPONENTS IN BRASS & BRONZES

**• Any intricate Shape • Finished Dimensions**
**• Close Tolerances • Flawless Quality • Smooth Finish**

Hot-stamped components are free of blow holes, inclusions, etc. They withstand high pressures due to absence of porosity. Close tolerances maintained to ensure interchangeability. Superior surface finish eliminates costly finishing processes.

*Manufacturers*
**NATIONAL FASTENERS PRIVATE LIMITED**
102–D, Mount Road, Nandanam, Madras–35

*Selling agents*
**SOUTHERN ENTERPRISES**
7, Smiths Road, Madras-2

EP-NF-8B




# BY ITS STRENGTH AND SERVICE IS THE INDIAN BANK KNOWN TO DAY.

The illuminating idea, which the promoters of the Indian Bank cherished in **1907,** has certainly borne real fruit over six decades.

The basic strength that comes from age, the service that rests on standing and skills, are factors in growth. Its experience has helped Indian Bank to take deep root and branch out in many directions. Steady and sure progress marks its Diamond Jubilee year—**1967.**

The Indian Bank is fully conscious of the support it has all along received from all its constituents. It hopes to command more confidence by reliable, efficient and prompt service as the Bank that knows and grows.

1907—1967
DIAMOND JUBILEE.

THE INDIAN BANK LTD. ESTD. 1907

**THE INDIAN BANK LTD.**
MADRAS-1.

ELEGANT